தர்மசக்கரம்

ACC-No-38678



ரௌத்திரி ஞு கார்த்திகை மீ சக்கரம் 28 ஆரம் 11

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை-639 115. திருச்சி ஜில்லா

அந்தர்யோக விவரங்கள்

நீலகிரி ஜில்லா—கோத்தகிரியில் 20—11—80 வியாழக்கிழமை

இடம்: சாந்தி ஆச்ரமம்

நேரம்: காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி குஹானந்தர்

உணவு வசதி: நேரில் சீட்டுப் பெற்றுக்கொள்ளவும்.

மதுரை ஜில்லா—வில்லுப்பட்டியில் (கொடைக்கானல்) 30—11—80 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஓம் பிரம்மானந்த ஆச்ரமம்

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

திருநெல்வேலி ஜில்லா—ஸ்ரீ வைகுண்டத்தில் 30—11—80 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீகைலாசநாதர் கோவில்

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி திவ்யானந்தர்

கோவை ஜில்லா—சித்திரச்சாவடியில் 7—12—80 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ ராமகிருஷ்ண-விவேகானந்த ஆச்ரமம்

நேரம்: காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணி வரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

உணவு வசதி: நேரில் பகல் உணவுக்கு ரூ. 1-00ம் மாலை சிற்றுண்டிக்கு 75 பைசாவும் செலுத்தி சீட்டுப் பெற்றுக்கொள்ளவும்.

திருச்சி ஜில்லா—துறையூரில் 7—12—80 ஞாயிற்றுக்கிழமை

இடம்: செங்குந்தர் உயர்நிலைப்பள்ளி

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

மதுரை ஜில்லா—தேனியில் 10—12—80 புதன்கிழமை

இடம்: ஸ்ரீ கணேச கந்தப்பெருமாள் ஆலயம், தியாகராஜநகர்.

நேரம்: காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணி வரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி ஆத்மானந்தர்

உணவு வசதி: பகல் உணவுக்கு ரூ. 1-50 செலுத்தி சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

திருநெல்வேலி ஜில்லா—சேரன்மகாதேவியில் 14—12—80 ஞாயிற்றுக்கிழமை

இடம்: பாரத்வாஜ ஆச்ரமம்

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணி வரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

உணவு வசதி; நேரில் பகல் உணவுக்கு ரூ. 1-50ம் மாலை சிற்றுண்டிக்கு 75 பைசாவும் செலுத்தி சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

சேலம் ஜில்லா—வனவாசியில் 15—12—80 திங்கட்கிழமை

இடம்: ஸ்ரீ ராமகிருஷ்ண-விவேகானந்த தவஇல்லம்

நேரம்: காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணி வரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

14·11 | 80

தர்ம சக்கரம்

மாத சஞ்சிகை

சக்கரம் 29	ரௌத்திரி ஹூ கார்த்திகை மீ	ஆரம் 11

பொருளடக்கம்

பக்கம்

சந்தா விவரம்

ஆன்மீகக் கருத்துக்களில் தெளிவுபெற தர்ம சக்கரம் சந்தாதாரராகச் சேர்ந்து பயன்பெறுங்கள்.

டிபாஸிட் சந்தா: ரூ. 100 அனுப்பி இங்கு டிபாஸிட் செய்துவிட்டால் டிபாஸிட் இங்கு இருக்கும் வரையில் மாதந்தோறும் தர்மசக்கரப் பத்திரிகை தங்களுக்கு வந்து கொண்டிருக்கும். ஆண்டுதோறும் சந்தாச் செலுத்திப் புதிப்பிக்க வேண்டியதில்லை. பத்திரிகை வேண்டாம் என்று கருதும்பொழுது டிபாஸிட் செய்த ரூபாய் நூறையும் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். தாங்கள் டிபாஸிட் செய்யும் தொகையைப் பேங்கில் இருப்பாக வைத்து அதினின்று கிடைக்கும் வட்டி சந்தாவுக்காக எடுத்துக்கொள்ளப் படுகிறது. இந்தத் திட்டம் உள்நாட்டுக்கு மட்டும் உரியது.

ஆண்டு சந்தா: ரூ. 12 செலுத்தியது முதல் அல்லது அடுத்த மாதம் முதல் பன்னிரண்டு மாதங்களுக்கு ஒவ்வொரு தமிழ் மாதமும் முதல் தேதியில் கிடைக்கும்படி பத்திரிகை அனுப்பப்படுகிறது.

சகாய சந்தா: மாத வருவாய் ரூ. 200 அல்லது ஆண்டு வருவாய் ரூ. 2400க்கும் குறைவாக உள்ளவர்கள் ஆண்டு சந்தா பன்னிரண்டு செலுத்த இயலாது இருந்தால் ரூபாய் எட்டு அனுப்பலாம். பாக்கி ரூபாய் நான்கையும் பாண்டிச்சேரி S. விசுவநாதன் 'தர்ம சக்கர உதவி நிதி'யினின்று ஈடுசெய்து கொள்கிறோம்.

தமிழ் நாட்டிலும் பாண்டிச்சேரியிலும் அரசாங்கத்தால் 1496 பொது நூலகங்கள் அமைக்கப்பெற்றுள்ளன. அவை அனைத்துக்கும் அன்பர்களின் உதவியால் தர்ம சக்கரம் தொடர்ந்து அனுப்பப்பெறுகிறது. நூலக நிர்வாகியிடம் கேட்டுப் பெற்றுப் படித்துப் பயனடையக் கோருகிறோம்.

உள்நாடு தனி இதழ் ரூ. 1-25 வெளிநாடு வருட சந்தா ரூ. 25-00

ஸ்ரீ தாயுமானசுவாமி கோயில் திருப்பணி

ஸ்ரீ தாயுமான சுவாமிகளின் விக்ரஹம், திருமுருகன் பூண்டியில் ஆயத்தமானது, இப்பொழுது ராமனுதபுரத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு மூலஸ்தானத்தில் பீடத்தின் மீது வைக்கப்பட்டிருக்கிறது. ஆனல் இன்னும் ஆவாஹனம் செய்யவில்லை. கர்ப்பகிரஹத்தில் மொசைக் பூச்சுவேலை முடிந்த பிறகே மூர்த்தி ஆவாஹனமும் அதைத் தொடர்ந்து மூலஸ்தானத்தில் நித்திய பூஜையும் நடைபெறும். பாலர் பள்ளிக்கும் விருந்தினர் விடுதிக்குமாக ஆய்க்கொண்டிருக்கிற கட்டடத்தில் மேல்தளம் கான்கிரீட் போட்டாகிவிட்டது. அதற்கு மேல் முதல்மாடி அமைப்பு வேலை எடுத்துக்கொள்ளப்படும்.

1980 அக்டோபர் மாத நன்கொடை வசூல்

விலாசம்		ரூபாய்
செப்டம்பர் மாதம் முடிய நன்கொடை வசூல்		9 86 678
ஸ்ரீ K. வெங்கடேசன்	ஃபேர்லேண்ட்ஸ், சேலம்	1 001
ஸ்ரீமதி P. S. மரகதம்மாள்	புருப்பாளிக்காட்டுவலசு, ஈரோடு	900
ஸ்ரீ K. கிருஷ்ணன்	வலாந்தருகை, இராமநாதபுரம்	401
,, T. சரவணமுத்து	பாட்டாலிங்ஜெயா, மேற்கு மலேசியா	300
,, R. K. குமரேசன்	வைத்தியநாதய்யர் தெரு, மதுரை	250
,, சிவ. மாணிக்கம்	தாத்தையங்கார்பேட்டை, திருச்சி	107
,, P. S. V. கந்தசாமி முதலியார்	முதல் அக்ரஹாரம், சேலம்	102
,, K. P. S. சந்தானம் செட்டியார்	சின்னசெட்டித் தெரு, திருச்சி	101
,, N. N. நந்தகோபாலன் செட்டியார்	நடுபஜார், தேவகோட்டை	101
ஸ்ரீமதி சி. ரா. தாயம்மாள்	ராமுகவுடர்தெரு, காமயகவுண்டன்பட்டி, மதுரை	101
,, K. ஜெனம்மாள்	,, ,,	101
ஓர் அன்பர்	,, ,,	101
ஸ்ரீ P. சோமசுந்தரம்	முதல் அவன்யு, இந்திராநகர், சென்னை	101
குமாரி S. சித்ரா	சொர்ணபுரி, ஓமலூர் ரோடு, சேலம்	101
ஸ்ரீ K. லக்ஷ்மீ நாராயண ரெட்டியார்	ஆவணிபூர், திண்டிவனம்	101
ஸ்ரீமதி சரோஜா சண்முகம்	ஒக்கிலியர் வீதி, கோவை	101
தக்ஷிணரெயில்வே சத்சங்கம்	பார்க் டவுன், சென்னை	101
ஸ்ரீ K. நடராஜன்	அண்ணாநகர், ,,	101
,, K. T. ராஜன்	ஸ்ரீநிவாஸாநகர், ,,	101
,, M ஸ்ரீரங்கக்கவுண்டர்	வேங்கியாம்பாளையம், பெரியார்மாவட்டம்	101
,, K. G. சங்கர்	காந்திநகர், மண்ணச்சநல்லூர், திருச்சி	101
ஸ்ரீமதி ஆரிய பாப்பம்மாள்	மெயின்ரோடு, கம்பம், மதுரை	101
ஸ்ரீ M. உத்திரசாமி	அம்மாபேட்டை, பவானி	101
,, P. C. நந்தகோபால்	அருந்ததியார் தெரு, விருதுநகர்	101
,, K. M. ராதாகிருஷ்ணன்	பூர்ண சேரீஸ், உறையூர், திருச்சி	100
,, A. L. தியாகராஜன்	வேல்முருகன் டெக்ஸ்டைல்ஸ், காரைக்குடி	100
,, S. M. D. A. தெய்வநாயகம்பிள்ளை	வடக்குரதவீதி, மேலூர், தூத்துக்குடி	100
,, P. சந்நியாசி	ஸ்ரீ சாரதா இல்லம், கரிசல்குளம், சங்கரன்கோவில்	100
ஸ்ரீமதி புவனேஸ்வரி	கீழவயலூர், தஞ்சாவூர்	100
ரூபாய் நூறுக்குக்கீழ் வந்த நன்கொடைகள்		951
	ஆகக்கூடுதல் ரூ.	9 92 907

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 38678

प्रज्ञानं ब्रह्म

தர்ம சக்கரம்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

சக்கரம் 29	ரௌத்திரி ஹு கார்த்திகை மீ	ஆரம் 11

பிரார்த்தனை

युगायितं निमेषेण चक्षुषा प्रावृषायितं ।
शून्यायितं जगत् सर्वं गोविन्दविरहेण मे ॥

— श्री गौराङ्ग

யுகாயிதம் நிமேஷேண சக்ஷுஷா ப்ராவ்ருஷாயிதம் ।
சூன்யாயிதம் ஜகத் சர்வம் கோவிந்தவிரஹேண மே ॥

— ஸ்ரீ கௌராங்கர்

கோவிந்தனைவிட்டுப் பிரியும் பக்தன் ஒருவனுக்குக் கணப்பொழுது கல்பம் போன்று தென் படுகிறது. அப்பொழுது கண்ணீர் மழைத் தாரைபோல் பொழிகிறது. உலகம் பாழ்பட்டது போல் காட்சி கொடுக்கின்றது.

ஓகோ உனைப்பிரிந்தார் உள்ளம் கனலில்வைத்த
பாகோ மெழுகோ பகராய் பராபரமே.

— தாயுமானவர்

அருள் விருந்து

நேர்மைக்கு யாண்டும் இறைவன் துணைபுரிகிறான்.

தீமை எனப்படுவது ஒரு மனநிலை. அதற்கு ஆற்றல் இல்லை.

தீமைக்கு உடந்தையாயிருப்பவன் தீமையை வளர்க்கிறான்.

சன்மார்க்கத்தைக் கடைப்பிடிப்பவனுக்குத் தோல்வியில்லை.

பகைமை பொல்லாதது ; அதினின்று நலன் ஏதும் வாய்க்காது.

பரத்தைச் சார்ந்திருப்பவன் செயலே பழுதுபட்டுப் போகாததாம்.

இடையிடையே பட்டினி இருப்பதால் மனது பண்பாடடைகிறது.

நிலையற்றதை நிலையுற்றது என எண்ணுபவனே அல்லல்படுகிறான்.

தாய்மொழியை மட்டமாகக் கருதுபவன் தாய் அன்பு அற்றவனாகிறான்.

பொறுமையுடன் காத்திருப்பவன் காலத்தின் கதியை அறிந்தவனாகிறான்.

எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நடுநிலை பிறழாதிருப்பவனே பண்பட்டவனாகிறான்.

இவ்வுலகில் மனிதனுக்குச் சொந்தம் எனக் கருதப்படுவது ஏதேனும் உண்டா ?

மக்கள் எல்லாரும் ஏகோபித்து எண்ணுவது இறைவனுடைய திட்டத்திற்கு ஒப்பாகிறது.

கோட்பாடு ஒன்று உண்மைக்கு ஒத்ததா என்று ஆராய்ந்து பார்த்தபின் அதை ஏற்றுக்கொள்.

இப்பொழுது தேன் எனக் கருதப்படுவது பின்பு ஒரு காலத்தில் எட்டிக்காய் போன்று கசக்கும்.

அருளைப் பிறரிடமிருந்து பெறமுடியாது ; தகைமைக்கு ஏற்ப அது தன்னிடத்தே உருவெடுக்கிறது.

நேர்மையில் நிலைத்திருப்பவன் சான்றோன் ; அன்னவன் பிறரிடம் இருக்கும் கோணலைக் கருத்தில் வாங்கிக் கொள்வதில்லை.

பரமஹம்சர் புகட்டிய

பெருநெறி விளக்கம்

பரமஹம்சதேவர் தொடர்ந்து திருவாய்மலர்ந் தருளுகின்றார்:

"பகவத் தரிசனம் முற்றிலும் அவசியமாகிறது. மானுட ஜன்மத்தின் குறிக்கோள் பகவத் தரிசனம் என்பதை மறந்துவிடலாகாது. அத்தரிசனத்தைப் பெறுவது எங்ஙனம் என்பது கேள்வி. முரண்படுகிற இரண்டு பாங்குகள் மனதில் குடிகொள்ளலாகாது. உலகப் பற்றை அறவே ஒதுக்கித்தள்ளுதல் அவசியமாகிறது. கடவுள் நாட்டத்தில் பேர்ஆர்வம் படைத்திருப்பவன் பகர்வதாவது: 'அகிலாண்டத்துக்கும் தந்தையே, நான் உனக்குப் புறம்பானவனா? என் மீது கருணைகாட்ட மாட்டாயா? உன் கருணைக்கு வேற்றான் ஆகுமிடத்து நான் ஒழிந்துபட்டுப் போவேன்.' இவ்விதத்தில் பக்தன் ஒருவன் கண்ணீரும் கம்பலையுமாக இறைவனிடம் பிரார்த்தனை பண்ணவேண்டும்.

"யாரைப்பற்றி நீ தியானிக்கின்றாயோ அந்த மூர்த்தியின் மகிமைமயமாக நீ மாறியமைகின்றாய். சிவனைக் குறித்து நீ தியானம் பண்ணினால் சிவன் மயமாக நீ திருந்தியமைகின்றாய். இராம பக்தன் ஒருவன் அல்லும் பகலும் ஹனுமனைக் குறித்தே தியானம் பண்ணினான். அப்படித்தியானம் பண்ணியவன் தானே ஹனுமான் ஆய்விட்டதாக எண்ணி வந்தான். அந்த எண்ணத்தின் வலிவால் தனக்கு வால் சிறிது வடிவெடுத்திருக்கிறது என்றும் அவன் எண்ணலாயினன். சிவன் ஞானசொரூபம்; விஷ்ணு பக்தி சொரூபம். சிவனைப்பற்றியே சிந்தை பண்ணுபவன் ஞானியாகிறான். விஷ்ணுவைப் பற்றியே தியானம் பண்ணுபவன் பக்தனாகிறான். அம்பிகையைப் பற்றியே தியானம் பண்ணுகிறவன் யோகத்தில் வல்லவனாகிறான்."

மகேந்திரர்: "அப்படியானால் சைதன்ய தேவருடைய பாங்கு எத்தகையதோ? அவர் ஞானமும் பக்தியும் ஒருங்கே வாய்க்கப்பெற்றவர் என்று தாங்கள் பகர்ந்தருளினீர்கள்."

பரமஹம்சதேவர் (சிறிது விறுவிறுப்புடன்): கிருஷ்ணசைதன்யருடைய பாங்கு அலாதியானது. அவர் ஓர் அவதார புருஷர். அவதார புருஷர் ஒருவருக்கும் சாதாரண மனிதன் ஒருவனுக்கும் இடையே பெரிய வேற்றுமை இருக்கிறது. சைதன்ய தேவருடைய வைராக்யம் கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருந்தது. உலகத்தைப் பற்றிய சிந்தனைக்கும், அவருடைய மனப்பான்மைக்கும் வெகுதூரம். சர்வபௌமா என்பவள் அவருடைய நாவின்மீது சர்க்கரையைப் போட்டாள். அது கரைதற்குப் பதிலாக ஆவியாக மாறி மறைந்துபோயிற்று. அவர் மனதில் ததும்பிக்கொண்டிருந்த தெய்விக உணர்வின் விளைவு அதுவாம். சைதன்ய தேவர் யாண்டும் சமாதியிலேயே மூழ்கியிருந்தார். காமத்தை அவர் அறவே வென்றிருந்தார். சாமானியமான மனிதர் ஒருவரோடு அவரைச் சீர்தூக்கிப் பார்ப்பது பொருந்துமா! சிங்கம் ஒன்று மாமிசப்பட்சிணியாக இருக்கிறது. அப்படியிருந்தும் காமத்தை வென்ற நிலையில் அது இருக்கிறது. ஆண் சிங்கமும், பெண் சிங்கமும் பன்னிரண்டு வருஷங்களுக்கு ஒருதடவை புணருகின்றன. அதற்கு நேர் மாறாகச் சிட்டுக் குருவி ஒன்று தானியத்தை மட்டும்புசிக்கிறது. அப்படியிருந்தும் அக்குருவி அல்லும் பகலும் புணர்ச்சியிலேயே மூழ்கிக் கிடக்கிறது. சிங்கத்திற்கும், சிட்டுக் குருவிக்கும், காம நுகர்ச்சியில எவ்வளவு வித்தியாசம் இருக்கிறதோ அவ்வளவு வித்தியாசம் ஓர் அவதார மூர்த்திக்கும் சாதாரண மானுடன் ஒருவனுக்கும் இடையில் இருக்கிறது. சாதாரண மனிதன் ஒருவன் காமத்தைத் துறக்கிறான்; ஆயினும் தான் பூண்டுள்ள விரதத்தை இடையிடையே அவன் மறந்துவிடுகிறான். அவன் முற்றிலும் தன்னடக்கம் பழகியவன் அல்லன்.

(மகேந்திரரைப் பார்த்து):

"ஈசுவரானுபூதி வாய்க்கப்பெற்ற ஒருவனுடைய மனப்பான்மை அபேதத்தில் நிலைத்திருக்கிறது. அன்னவன் மானுடன் ஒருவனுக்கும் புழு ஒன்றுக்கும் இடையில் வேற்றுமை பார்ப்பதில்லை. ஆத்ம சாதகன் ஒருவனிடம் வெட்கமும், வெறுப்பும், அச்சமும் இருக்குமாகில் அன்னவன் சாதனத்தில் முன்னேற்றம்

அடைவதில்லை. இத்தகைய மனநிலைகள் முட்டுக்கட்டைகளாகக் குறுக்கிடுகின்றன. முட்டுக் கட்டைகள் எட்டு இருக்கின்றன என்பதை நீ கேள்விப்பட்டதில்லையா?

"யாண்டும் பரிபூரணத்திலேயே திளைத்திருப்பவன் உலகைப்பற்றி எங்ஙனம் அஞ்சுவான்? உலக வாழ்வு என்னும் விளையாட்டை எப்படி நடாத்துவது என்பது அவனுக்குத் தெரியும். நித்திய சித்தன் ஒருவன் உலக வாழ்வை எங்ஙனம் நடாத்தவேண்டும் என்பதைத் தானே நடாத்திக் காட்டுகின்றான். சித்தபுருஷன் கத்திச் சண்டை நிபுணன் ஒருவனுக்கு ஒப்பானவன் ஆகிறான். கத்திச்சண்டை நிபுணன் ஏக காலத்தில் இரண்டு கத்திகளை வைத்துக்கொண்டு விளையாடுகிறான். அவன் மீது கற்களை எடுத்து வீசினால் அக்கற்கள் கத்தியில் பட்டுத் தெறிக்கின்றன. கற்கள் அவனைப் பாதிப்பதில்லை. கற்கள் விளையாடுபவன் மீது படுவதில்லை. அதேவிதத்தில் உலக பந்தபாசங்கள் எவையும் சித்த புருஷனைப் போய்த் தீண்டமாட்டா."

ஒரு பக்தன்: "அண்ணலே, ஈசுவர சாட்சாத்காரம் அடைவது எப்படி?"

பரமஹம்சதேவர்: "உன்னுடைய மனம் முழுதையும் ஈசுவரன்பால் செலுத்தாது இருக்குமிடத்துக் கடவுள் காட்சியை நீ எப்பொழுதாவது பெறமுடியுமா? யாருடைய மனம் முழுதும் இறைவனிடத்திலேயே அல்லும் பகலும் விரைந்து ஓடிக்கொண்டு இருக்கிறதோ அன்னவனே இறைவனுடைய சாக்ஷாத்காரத்தை அடையப் பெறுவான். சுகதேவரைப்பற்றிப் பாகவதம் பகருகிறது. அந்தச் சுகதேவர் இங்கும் அங்கும் நடமாடுகிறபொழுது கத்தியைக் கையில் ஏந்தியிருக்கும் ஒரு போர் வீரன் போன்று தென்படுகின்றார். அங்ஙனம் ஆத்ம சாதகன் ஒருவனுடைய நாட்டம் இங்குமங்கும் ஊசலாடுவதில்லை. ஒரே குறியின்கண் அது யாண்டும் சென்று கொண்டிருக்கிறது. ஈசனே அக்குறியாகின்றான். யோக சாதனம் என்பது இதுவே. சாதகபட்சி மழை நீரை மட்டுமே பருகுகிறது. கங்கை, யமுனை, கோதாவிரி ஆகிய நதிகளில் நீர் கரைபுரண்டு ஓடிக்கொண்டிருக்கலாம். ஏழு கடல்களில் நீர் நிறைந்திருக்கலாம். அப்படியிருந்தும் நிலத்தில் படிந்துள்ள அந்த நீர் வகைகளைச் சாதகபட்சி தீண்டுவதில்லை. வானத்தினின்று விழுகின்ற மழை நீரை மட்டுமே அது பருகுகிறது. கடவுள் நாட்டம் கொண்டிருக்கிறவர்களுடைய பாங்கும் அத்தகையதேயாம்.

"சாதகபட்சி ஒன்றன் பாங்கு யோகி ஒருவனுக்கு வந்து அமையுமானால் அன்னவன் ஈசுவர சாக்ஷாத்காரம் பண்ண வல்லவனாகின்றான். அத்தகையவனே யோகி எனவும் இயம்பப்பெறுகிறான். நாடகத்தைப் பார்க்கப் பல பேர் கொட்டகையில் கூடுகின்றனர். அப்படிக் கூடியிருக்கிறவர்கள் வெவ்வேறுவிதமான பேச்சுக்களில் ஈடுபடுகிறார்கள். வீட்டைப் பற்றிய பேச்சு, உத்தியோகத்தைப் பற்றிய பேச்சு, வியாபாரத்தைப் பற்றிய பேச்சு, பள்ளிக்கூடத்தைப்பற்றிய பேச்சு—இப்படியெல்லாம் பலப் பல பேச்சுக்கள் நடைபெறுகின்றன. நாடக மேடையில் திரை மேலே கருட்டப்படும்வரை இப்பேச்சுக்கள் நிகழ்கின்றன. ஆனால் திரை மேலே போக ஆரம்பிக்கின்றபொழுது பேச்சுக்கள் யாவும் நின்றுவிடுகின்றன. மக்கள் கண்ணும் கருத்துமாக நாடகத்தைப் பார்க்கின்றனர். நெடுநேரத்திற்குப் பிறகு யாராவது ஒருவன் இரண்டொரு வார்த்தைகளைப் பேசுவானாகில் அவ்வார்த்தைகள் நாடகத்தைப்பற்றியனவாயிருக்கும். ஈசுவர சாக்ஷாத்காரத்தில் மனதைச் செலுத்துகிறவனுடைய பாங்கும் இத்தகையதேயாம். அவனுடைய திரிகரணங்கள் பகவத் சேவையில், பகவானைப் பற்றிய பேச்சில், பகவத் சிந்தனையில் மூழ்கியிருக்கின்றன. குடிகாரன் ஒருவன் வேண்டியவாறு குடித்தான பிறகு குடிவெறியின் இன்பத்தைப்பற்றிய பேச்சையே அவன் பேசுகிறான்."

பரமஹம்சதேவரின் எதிரே நித்தியகோபால் அமர்ந்திருந்தான். அன்னவனுடைய மனது யாண்டும் பகவத் சிந்தனையிலேயே மூழ்கியிருந்தது. ஆதலால் மௌனமுற்றவனாக ஆங்குஅவன் அமர்ந்திருந்தான்.

பரமஹம்சதேவர் (புன்னகையுடன் நித்திய கோபாலைப் பார்த்து): "கோபால், நீ ஏன் எப்பொழுதும் பேச்சற்று இருக்கின்றாய்?"

ஒரு பாலகன்போன்று நித்திய கோபால் கொடுத்த விடையாவது: "அது—ஏன்—என்று—எனக்குத் தெரியாது."

பரமஹம்சதேவர்: "நீ ஏன் ஒன்றும் பேசுவதில்லை என்பதை நான் அறிகிறேன். ஒருவேளை பேச்சை எடுத்தால் அது பிழையாகும் என்று நீ அஞ்சுகிறாய். அப்படியிருப்பது முற்றிலும் சரி. ஜயனும் விஜயனும் நாராயணனுக்குத் துவாரபாலகர்களாகப் பணிவிடைபுரிந்தனர். அவர்கள் இருவரும் சனகன், சனந்தனன், சனாதனன், சனத்குமாரன் ஆகிய நான்கு ரிஷிகளையும் நாராயணனுடைய சந்நிதிக்குப் போகவொட்டாது தடுத்தனர். இந்தக் குற்றத்திற்காக அவர்கள் மூன்று தடவை மண்ணுலகில் பிறப்பெடுக்க வேண்டி வந்தது.

"இனி, ஸ்ரீதாமனைப் பற்றிய நிகழ்ச்சி ஒன்று இருக்கிறது. கோலோகத்தில் விரஜை என்னும் கிருஷ்ணனுடைய தோழியின் வீட்டுக் காவலனாக அவன் இருந்தான். அப்பொழுது விரஜையின் வீட்டில் கிருஷ்ணனும் இருந்தான். கிருஷ்ணனுக்கு வியப்பூட்டுதல் பொருட்டு ராதிகை அவ்வீட்டினுள் போக விரும்பினாள். ஆனால் ஸ்ரீ தாமன் அவளை உள்ளேபோக அனுமதிக்கவில்லை. அதைக் குறித்து ராதிகை கோபித்துக்கொண்டு அவன் மண்ணுலகில் ஓர் அரக்கனாகப் பிறக்க வேண்டுமென்று சாபம் போட்டாள்.

"ஆயினும் ஒரு விஷயத்தை நீ ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். தந்தையின் கையைப் பிடித்துக் கொண்டு சிறுவன் ஒருவன் நடக்கிற பொழுது அவன் கை நழுவி சாக்கடைக்குள் விழுவது சாத்தியம்; ஆனால் தந்தை தானே மைந்தன் கையைப் பிடித்துக்கொள்வானாகில் பின்பு அவன் எதைக் குறித்து அஞ்ச வேண்டும்?"

கேதார் என்பவர் அரசாங்கத்தில் உத்தியோகஸ்தராயிருந்தார். அவர் சிறிது காலம் டாக்காவில் வசித்திருந்தார். ஏனென்றால் கல்கத்தாவினின்று அவர் அவ்வூருக்கு மாற்றப்பெற்றவராயிருந்தார். அன்னவர் பரமஹம்சதேவரிடம் பக்தி மிகப் பூண்டிருந்தார். டாக்காவில் வசித்திருந்த பொழுது பரமஹம்சதேவரைப் பற்றிப் பல பக்தர்களிடம் அவர் விளக்கிப் பேசுவது அவருடைய வழக்கமாயிருந்து வந்தது. அங்ஙனம் பரமஹம்ச தேவரைப் பற்றி அறிய வந்த அவ்வூர் பக்தர்கள் பரமஹம்சதேவரைத் தரிசிப்பதற்கும் அவரிடமிருந்து உபதேசங்கள் பெறுவதற்கும் பல பேர்கள் வந்து கொண்டிருந்தனர். சான்றோர் ஒருவரைத் தரிசிக்கச் செல்லுகிறவர்கள் வெறும் கையோடு போகலாகாது. ஏதாவது கனி, பக்ஷணம் முதலியவைகளை எடுத்துச் செல்லுவது முறை. அக்கோட்பாட்டுக்கு ஒப்ப டாக்காவிலிருந்து வந்து கொண்டிருந்த பக்தர்கள் ஏதேனும் பக்ஷணங்களையும் கனி வகைகளையும் உடன் கொண்டு வந்து இருந்தனர்.

கேதார் பணிவுடன் விண்ணப்பிக்கிறார்: "ஐயனே, இங்ஙனம் பக்தர்கள் கொண்டுவரும் பக்ஷணங்களை அருந்துவது பொருந்துமா?"

பரமஹம்சதேவர்: "பக்தர்கள் கடவுளிடத்து வைக்கிற பக்தியினால் தூண்டப்பெற்று இங்ஙனம் பக்ஷணங்கள் கொண்டு வருவார்களானால் அவைகளை அருந்துதலில் தோஷம் ஏதும் இல்லை. ஆனால் ஏதேனும் சுயநலத்தினால் தூண்டப்பெற்றுப் பண்டங்கள் கொண்டு வருவார்களாகில் அவைகளை ஆத்ம சாதகன் உண்ணாது ஒதுக்கிவைப்பது உசிதம்."

கேதார்: "இவ்வுண்மைகளைப் பக்தர்களுக்கு நான் ஏற்கனவே எடுத்து விளக்கியிருக்கிறேன். இப்பொழுது தாங்கள் பகரும் கோட்பாடு எனக்கு மன அமைதியைத் தருகிறது. என்னை ஆட்கொண்டுள்ள அண்ணல் இந்த நியதிகளையெல்லாம் நன்கு அறிந்திருக்கிறார் என்று பக்தர்களுக்கு நான் பகர்ந்திருக்கிறேன்."

பரமஹம்சதேவர் (புன்னகை பூத்தவராக): "நீ இயம்புவது முற்றிலும் மெய். வெவ்வேறு மனப்பாங்கு படைத்துள்ள மாந்தர்கள் இங்கு வந்து சேருகின்றனர். அவரவர் பாங்குகளுக்கேற்ற கொள்கைகளையும் இங்கு அவர்கள் காண்கின்றனர்."

கேதார்: "ஐயனே, அத்தகைய பாங்குகளையெல்லாம் நான் விரிவாக அறிந்துகொள்ள வேண்டிய அவசியமில்லை."

பரமஹம்சதேவர் (புன்னகை பூத்தவராக): "உலக வியவகாரங்களை ஒருவன் சிறிது அறிந்து இருக்கவேண்டும். பலசரக்குக் கடைக்காரன் பலப்பல சரக்குகளை விலைக்குவைத்திருக்கிறான் அல்லவா? பிறகு இசை வல்லுனன் ஒருவன் சிற்சில இன்னிசைக் கருவிகளில் இசையைக் கிளப்பக் கற்றுக்கொள்ளுகிறான் அல்லவா? அதே விதத்தில் உலகில் வாழ்ந்திருக்கும் ஆத்மசாதகன் ஒருவனுக்கு உலக மக்களின் போக்கும் ஓரளவு விளங்குதல் வேண்டும்."

பைங்கிளிக் கண்ணி

(தாயுமானவர் இயற்றியது)

50. வாட்டப் படாத மவுனஇன்பம் கையாலே
காட்டிக் கொடுத்தானைக் காண்பேனே
[பைங்கிளியே.

வாட்டப்படாத—துன்புறுத்தப்படாத.

சிற்றுயிர் பேருயிராகப் பரிணமிக்கிற பொழுது ஓசையை உண்டுபண்ணும் திறமை வருகிறது. நீருக்குள் வசித்துவரும் ஜீவ ஜந்துக்கள் எந்த விதமான ஓசையையும் உண்டு பண்ணமாட்டா. சான்றுஒன்றுஎடுத்துக்கொள் வோம். தவளை நீருக்குள் இருக்கின்ற பொழுது மௌனமாயிருக்கிறது. நிலத்துக்கு வருகிற பொழுது அது கத்துகிறது. தவளைகள் பல ஒன்று கூடிக் கத்தி தங்கள் உணர்ச்சிகளைத் தெரிவிக்கின்றன. இன்ப துன்பங்களைத் தெரி விப்பதற்கும் ஆபத்தைத் தெரிவிப்பதற்கும் பசி தாகத்தைத் தெரிவிப்பதற்கும்ஆனஓசைகளைச் சிற்றுயிர்கள், பறவைகள், விலங்குகள் ஆகி யவை முறையாகக் கற்றுக் கொள்கின்றன. பிறகு பேசும் திறமை மனிதனுக்கு வருகிறது. மனோவிருத்திகளனைத்தையும் பேச்சின் வாயி லாக மனிதன் பிறர்க்குத் தெரிவிக்கிறான். மனி தன் படைத்திருக்கும் பேச்சுத் திறமையை நல்ல வாய்ப்பு எனலாம். பிறகு மனம் அடங்கு தற்கும் ஆத்ம சாதகர்களுக்குப் பேச்சுத் திறமை ஓர் இடைஞ்சல் ஆக அமைகிறது. நன்கு பேசத் தெரிந்திருந்தும் பேசவேண் டிய அவசியமில்லாதவிடத்துப் பேசாதிருப்பது பண்புக்கு அறிகுறியாகும். ஆயினும் அத்த கைய நாவடக்கம் பழகுவது எல்லார்க்கும் சாத்தியமன்று. பொருந்தாத பேச்சைப் பேசி விட்டுப் பிறகு நான் ஏன் இப்படிப் பேசினேன் என்று வாட்டமுறுவது மனிதனுடைய இயல்பு. பொருந்தாத பேச்சைப் பேசிப் பிறரை வாட்டு வதும் மனிதனிடத்துள்ள குறைநிலையாகும். பொருந்தாத பேச்சைப் பேசித் தன்னையே கீழ்மைப்படுத்திக் கொள்ளுவதும் பிறரைத் துன்புறுத்துவதும் நாவடக்கமின்மைக்கு அறி குறிகளாகும். நாவடக்கம் பழகுதல் புறத்தில் மௌனத்திற்கு அறிகுறியாகும். மனவடக்கம் பழகுதல் அகத்தில்மௌனநிலை ஆகும். இப்படி இரண்டு வித மௌனம் பழகுவதால் சோர்வு உறுத்தவோ அல்லது தானே சோர்வு உறுவதோ ஆவதில்லை. ஆக, மானுட வாழ்க்கையின் ஆரம்ப தசையில் நன்றாகப் பேசக்கற்றுக்கொள் கிற மனிதன் பிறகு ஆத்மசாதனத்தில் பிர வேசிக்கிற பொழுது பேச்சற்று இருப்பது நல்ல சாதனமாகிறது. சாதனத்தில் தீவிரமாக மேல் நோக்கிப்போவதற்கு ஏற்ப வாய்ப்பேச்சு தானாக அடங்குகிறது.

பெரிய கருத்துக்களுக்கு அறிகுறியாக முத் திரைகள் பல அமைந்திருக்கின்றன. பேசுகிற வனைப் பேசாமல் இருக்கும்படி செய்வதற்கு அதற்கேற்றவாறு கை காட்டுவது ஒரு முத் திரையாகும். தாயுமான சுவாமி ஆட்கொண்ட மௌனகுரு கைகாட்டித் தம் சிஷ்யன் பேச்சை ஒடுக்கல்வேண்டும் என்னும் செய்தியைத் தெரி வித்தார். அச்செய்தியைக் கடைப்பிடித்த அண் ணல் அத்தகைய மௌனத்தினின்று விளைந்த இன்பத்தை நன்கு நுகர்ந்தார். அத்தகைய அரிய உபதேசம் செய்துவைத்த ஞானகுருவின் திரு மேனியைத் தாம் மீண்டும் ஒருமுறை தரிசித் தால் தம்முடைய ஆனந்தம் பேரானந்தமாகும் என்றும் அத்தகைய, பெரிய வாய்ப்பு தமக்கு அமையுமா என்றும் பச்சைக்கிளியிடம் பரிந்து விண்ணப்பிக்கிறார். இக்கருத்து இக்கண்ணி யில் அடங்கியிருக்கிறது.

51. வாரா வரவுஆக வந்துஅருளும் மோனகுருஊன்
பேராசை எல்லாம்போய்ப் பேசிவா பைங்கிளியே.

குருவும் சிஷ்யரும் சரீரத்தின் வாயிலாகத் தொடர்பு கொள்வது ஆரம்பத்தில் நிகழ் கிறது. அப்படிக் கூடுதலும் பிறகு பிரிதலும் சரீரத்தோடு சம்பந்தப்பட்ட செயல்களாம். ஆனால் ஞான குரு ஒருவர் ஆத்ம போதத்தோடு இணைந்துள்ள கருத்தைச் சிஷ்யனுடைய உள் ளத்தில் பதிந்திருக்கச் செய்கிறார். அத்தகைய பதிவை வளர்ப்பது குருபக்தியாம். ஸ்தூல சரீரத்தில் பிரிந்துள்ள குருவை எண்ணம் என் னும் சூக்ஷ்ம நிலையில் மனத்தகத்து வேண்டிய பொழுதெல்லாம் வரவேற்பது நல்ல ஆத்ம சாதனமாகும். சிஷ்யன் ஒருவன் குருவினு டைய சாந்நித்தியத்தைத் தன் சித்தமிசை வர வழைத்துக் கொள்வது வாராவரவு ஆகிறது. ஸ்தூல சரீரத்தில் குரு ஆனவர் சிஷ்யன்

முன்னிலையில் வருவது சாத்தியமன்று. ஆனால் மனத்தகத்து அவருடைய வரவை எப்பொழுது வேண்டுமானாலும் அமைத்துக் கொள்ளலாம். அத்தகைய அமைப்பே வாரா வரவு ஆகிறது. குருபக்தி பூண்டிருப்பவனுக்கு அத்தகைய அவா உள்ளத்தில் சதா உருவெடுத்துக்கொண்டிருக்கிறது. அந்த அவாவானது இக்கண்ணியில் பேராசை எனப்படுகிறது.

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

என்பது மறைமொழி. இம்மறை மொழிக்கு ஒப்பச் சாதகன் ஒருவனிடம் குருபக்தி சதா ததும்பிக் கொண்டிருக்குமானால் குறைபாடு உடைய உலகஆசைகளையெல்லாம் அது ஒதுக்கித்தள்ளுகிறது. குருபக்தியில் தாம் ஓங்கி வளரவேண்டும் என்கின்ற செய்தியை தம் இறைவனிடம் தெரிவித்து வரவேண்டும் என்று அப்பறவையை வேண்டுகிறார்.

52. விண்ணவர்தம் பால்அமுதம் வேப்பங்காய்
[ஆக என்பால்
பண்ணியது எம் அண்ணல்மயல்
[பார்த்தாயோ பைங்கிளியே.

விண்ணவர்–தேவர்கள். அண்ணல் மயல்–குருபக்தி.

தேவாமிர்தம் சாவாமருந்து எனச் சொல்லப்படுகிறது. அமிர்தபானம் பண்ணியுள்ள தேவர்கள் நீடுழி வாழ்ந்திருப்பதால் உபசாரத்திற்காக அவர்கள் அமரர்கள் என அழைக்கப்படுகின்றனர். ஆனால் பிரளய காலத்தில் அவர்களுக்கும் அழிவு உண்டு. இந்திரிய நுகர்ச்சியில் உண்டாகிற இன்பம் தெவிட்டிப் போன பிறகு துன்பமாக மாறியமைகிறது. வேப்பங்காய் என்னும் பதத்தின் மூலம் இக் கோட்பாடு பகரப்பெறுகிறது. இந்திரிய நுகர்ச்சி இன்பமாகத் துவக்கித் துன்பமாக முடிவுறுகிறது. ஆனால் பக்தியோ இன்பமாகத் துவக்கிப் பேரின்பமாக அது வளர்ந்து கொண்டே போகிறது. தேவர்கள் என்னும் பதம் பஞ்சேந்திரியங்களையும் குறிக்கிறது. தேவாமிர்தம் எனப்படுவது ஐம்பொறிகள் வாயிலாகக்கிடைக்கும் இவ்வையக இன்பமாம். இம்மையிலும் மறுமையிலும் வருகிற இந்திரிய சுகம் அமிர்தமாகத் துவக்கி வேப்பங்காயாக முடிவுறுகிறது. குருபக்தியின் பாங்கு இதிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. குருபக்தியிலே தாம் திளைத்திருந்த அரிய செய்தியைப் பச்சைக்கிளியிடம் அண்ணலார் தெரிவித்துக் கொள்ளுதலில் கவிதை ரசம் சொட்டுகிறது.

53. விண்ணுள் வளிஅடங்கி வேறுஅற்றது
[என்ன அருள்
கண்ணுள் அடங்கிடவும் காண்பேனோ
[பைங்கிளியே.

விண்—வெட்ட வெளி அல்லது ஆகாசம். வளி—காற்று. அருள்கண்—சிதாகாசம்.

எங்கும் வியாபகமாயிருப்பது விண் அல்லது ஆகாசம். இது அகண்டாகாரத்தில் விரிந்தோடுகிறது. இதன் தன்மாத்திரை ஒலி. கண்ணால் ஆகாசத்தைக்காண முடியாது. அதற்கு அடுத்த படியாயிருப்பது காற்று. காற்றில் புகை படிந்திருந்தால் கட்புலனாகிறது. தூய காற்று கண்ணுக்குத் தென்படுவதில்லை. ஆனால் மோதுவதின் வாயிலாகவும் சுவாசிப்பதன் வாயிலாகவும் அதை அறிந்துகொள்ளுகிறோம். மோப்பத்தால் காற்றுநல்லதாகெட்டதா என்று அறியவருகிறோம். தூய காற்றுக்கு மணம் இல்லை. உயிர் வாழ்க்கைக்குக் காற்று இன்றியமையாதது. பூமியிலிருந்து மலையேறிப் போகும்பொழுது மேலே போகப் போகக் காற்றானது இலேசாகிறது. பூமிக்கு மேல் ஐந்து மைல் உயரத்தில் மனிதன் உயிர்வாழ்க்கைக்கு ஏற்ற அளவு காற்று இல்லை. பூமியிலிருந்து இருநூறு மைலுக்கு மேல் வெட்ட வெளியில் காற்று இல்லவே இல்லை. ஆதலால் ஆகாசத்தைப் போன்று வாயுவானது எங்கும் நிறை பொருள் ஆகாது. ஆயினும் பாகுபாடின்றி காற்றானது வாயுவில் ஒன்றுபட்டிருக்கிறது. அதே பாங்கில் ஜீவாத்மன் தன்னுடைய ஜீவ வியக்தியை ஒதுக்கித் தள்ளுவானாகில் அவன் பரமாத்மாவில் ஒன்றுபடுகிறான். பரமாத்மாவைச் சிதாகாசம் என்கிறோம். வெட்ட வெளியை ஜட ஆகாசம் என்கிறோம். ஜட ஆகாசமும், சிதாகாசமும் ஞானிக்கு ஒன்றுகின்றன. ஜீவாத்மனைக் கட ஆகாசம் என்கிறோம். கடத்தை உடைக்கிறபொழுது அதனுள் இருக்கும் கட ஆகாசமும், புறத்தில் இருக்கும் மகா ஆகாசமும் ஒன்றுபடுகின்றன. அதேவிதத்தில் ஜீவ வியக்தியை ஒதுக்குங்கால் பரமாத்மாவில் ஜீவாத்மா இரண்டறக் கலக்கிறான். ஐக்கிய அனுபவம் தமக்கு வாய்க்க வேண்டுமென்று பைங்கிளியிடம் பகர்கிறார்.

இயேசுவின் மலை உபதேச விளக்கம்

(சுவாமி பிரபவானந்தரின் கருத்தைத் தழுவியது)

12. நூல்களில் சொல்லப்பட்டுள்ள அறநெறியைக் கிரியை அளவில் அனுஷ்டிப்பவர்கள் இருக்கிறார்கள். அதற்கேற்ற முன்னேற்றம் அவர்கள் அடைகிறார்கள். அறநெறியை உணர்வு அளவில் அனுஷ்டித்து அந்நெறி மயமாகின்றவர்கள் கிரியைகளைக் கடந்து சென்று விடுகிறார்கள். அறநெறியை வாழ்வு மயமாக்குகின்றவர்கள்தாம் பரமபத சாம்ராஜ்யத்துக்கு உரியவர்களாகின்றார்கள்.

சமயத்துறையில் தத்துவப்பகுதி என்றும், கிரியைப் பகுதி என்றும் இரண்டு பகுதிகள் இருக்கின்றன. அவதார புருஷர்கள் தத்துவ மயமாக வாழ்ந்திருக்கிறார்கள். அவர்கள் வாழ்ந்து காட்டிய வாழ்வை மறந்து விட்டு அவர்களுடைய வடிவங்களை வைத்துக் கொண்டு பூஜை செய்வதோடு பலர் நின்று விடுகிறார்கள். அவதார மூர்த்திகளின் வடிவங்களுக்குப் பக்தி சிரத்தையுடன் பூஜை செய்வது சாதனையின் ஒரு பகுதியாகிறது. ஆனால், அவர்கள் வாழ்ந்து காட்டிய பேருண்மைகளை வாழ்வு மயமாக நாம் மாற்றி அமைக்காவிட்டால் பரலோக சாம்ராஜ்யத்துக்குள் நாம் புகமுடியாது. காளியின் சொரூபம் பயங்கரமாக இருக்கும். அப்பயங்கர மூர்த்திக்குப்பூஜை செய்யும் பூஜாரி பயங்கொள்ளியாக இருப்பான். பூஜை வெறும் கிரியை மயமாக அமையுமாயின் அது ஓரளவுக்குத்தான் பயன்தரும். காளி பூஜை செய்யச் செய்ய நம் உள்ளத்தில் உள்ள பயம் நீங்கவேண்டும். அப்பொழுதுதான் அது தத்துவார்த்தமான பூஜையாகிறது. காளி பூஜை செய்து உள்ளத்திலுள்ள பயத்தை அகற்றியவர்களே காளியின் தரிசனம் பெறுவார்கள். காளி பூஜை பண்ணுவது காளியின் தரிசனம் பெறுவதற்கு ஓர் உபாயமாகும். உள்ளத்திலுள்ள அச்சத்தை அகற்றியவர்களே காளிதரிசனம் பெறுகின்றார்கள். உள்ளத்திலுள்ள அச்சத்தைப் போக்குவதுதான் லட்சியமாகும்.

வியவகார நிலையில் நன்மை, தீமை ஆகிய இரண்டும் இருக்கின்றன. வியவகார நிலையிலுள்ள நன்மை தீமைகள் பாரமார்த்திக நிலையில் இல்லை. பாரமார்த்திக நிலை என்பது வியவகார நிலையிலுள்ள நன்மை, தீமைகளுக்கும் அப்பாற்பட்டது. தீமையில்லாத முற்றிலும் நலமே வடிவெடுத்திருப்பவர் தெய்வம் ஆகின்றார். தெய்வத்தோடு நம் மனம் ஒன்றுபடுகின்ற அளவு நன்மை, தீமைகளைப் பற்றிய உணர்வைக் கடந்து அப்பால் போகின்றோம். பண்படாத மக்கள் அவ்வுண்மையைக் கிரகிக்க முடியாது. மனதைப் பண்படுத்துவதற்கு உலகத்திலுள்ள தீமையை ஒதுக்கிவிட்டு நன்மையைக் கடைப்பிடிக்க வேண்டும். முற்றிலும் பண்பட்ட மனதுக்கே நன்மையையும் கடந்து போவது சாத்தியமாகிறது. நன்மையைக் கடைப்பிடித்து அதையும் கடந்து அப்பால் செல்லவேண்டும். இதை அறிந்துகொள்ளாதவர்கள் ஆரம்பத்திலேயே ஒழுக்க நெறியில் இருந்து பிறழ்ந்துவிட முயல்கின்றனர். வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு ஒழுக்கம் அத்தியாவசியமாகிறது. ஆன்மீகத்துறையில் ஒழுக்கம்தான் அஸ்திவாரமாக அமைகின்றது. அஹிம்சை, சத்தியம், அஸ்தேயம், பிரம்மச்சரியம், அபரிக்கிரகம் முதலிய சீலங்களைக் கடைப்பிடிப்பது ஆரம்பத்தில் மிகவும் அவசியமாகின்றது. அகமும், புறமும் தூய்மை பெற வேண்டும். போதுமென்ற மனநிலையும், புலனடக்கமும், தெய்வச் சிந்தனையும் மனதால் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கங்களாகும். இத்தகைய அக ஒழுக்கமும், புற ஒழுக்கமும் நம்மிடத்தில் உறுதிபெற்று வருகின்ற அளவுதான் சாதனையில் நாம் முன்னேற முடியும்.

மேற்கூறிய சீலங்களைக் கடைப்பிடிக்கும் போது ஆத்மீக உணர்வு தலையெடுக்கிறது. மெய்ப்பொருளிடத்தில் பற்றும், மெய்ப்பொருளை அறியவேண்டும் என்ற ஆர்வமும் வளர்ந்து கொண்டே வரவேண்டும். அத்தகைய ஆர்வம் உள்ளத்தில் இல்லாவிட்டால் சமய சாதனைகள் எல்லாம் வெறும் படாடோபங்களாகப் போய்விடுகின்றன. உண்மையான தெய்வபக்தி ஏற்படும்பொழுது உயிர்களிடத்து அன்பு ஏற்படுகிறது. நம்மைத் தெய்வ மயமாக உணர்கின்றபோது பிறரிடத்துள்ள தெய்வத்

தன்மையையும் உணரமுடிகிறது. எல்லா உயிர்களிடத்திலும் தெய்வத்தன்மையைக் காண்பது தான் நம்மை நாம் உயர்த்திக் கொண்டதற்கு அறிகுறியாகும்.

தன்னடக்கத்தின் மூலமாகவும், உள்ளத்திலுள்ள இச்சைகளை வென்று பழகுவதன் மூலமாகவும் நாம் மெய்ப்பொருளிடத்து இணக்கம் வைக்கமுடிகிறது. உள்ளத்திலுள்ள ஆசைகளையெல்லாம் வென்று தெய்வத்தன்மை ஓங்கப் பெற்றவன் நலம் கேட்டைக் கடந்து போய்விடுகின்றான். தன்னிடத்துள்ள கீழ்மைகளை எல்லாம் வென்றவனுக்கு மேலும் வெல்லவேண்டியது ஒன்றுமில்லை. புனிதமும், தூய்மையும் உடையவனாக அவன் அறவே மாறி அமைந்து விடுகின்றான். தெய்வீக இயல்பு ஓங்கப் பெற்றவன் நல்லியல்பு ஓங்கப்பெற்றவன் ஆகின்றான். தெய்வீக இயல்பு மறைந்து கிடக்கும் வரையில் பரலோக இராஜ்யத்துக்குள் நாம் புகமுடியாது. தெய்வீக இயல்பு ஓங்கப் பெற்றவர்கள்தாம் பரலோக இராஜ்யத்துக்குள் புகமுடியும். இயேசுநாதருடைய இவ்வுபதேசம் இக்கருத்தை விளக்குகின்றது.

13. கொலைபுரிய வேண்டாம் என்று முன்னோய மேலோர் ஆணையிட்டு இருக்கின்றனர். அவ்வாணையை நீங்கள் அனைவரும் கேட்டு இருக்கிறீர்கள். கொலை புரிந்தவர்கள் அவர்கள் செய்த தீவினையினின்று தப்பித்துக் கொள்ளமுடியாது. வினைக்கேற்ற தண்டனை தெய்வ சாந்நித்தியத்தில் அவர்களுக்கு வந்தே தீரும்.

இவ்வுண்மையை நீங்கள் இதுவரையிலும் கேட்டிருந்ததைவிட நான் மிகவும் கண்டிப்பாகக் கூறுகின்றேன். காரணமில்லாது ஓர் அயலான்மீது ஒருவன் கோபித்துக்கொள்வானாகில் அக்கோபமே கோபித்தவனைக் கொளுத்திவிடும். அவன் பெருந் தண்டனைக்கு ஆளாவான். தன் அயலானைச் சிறுமைப்படுத்துகின்றவன் தானே சிறுமை அடைகின்றான். அயலானை மடையன் என்று சொல்பவன் தானே மடையன் ஆகிவிடுகின்றான். அவனுக்கு நரகத்தில் இடுவதுபோலத் தண்டனை வந்தடைகின்றது.

காயத்தால் செய்யும் செயல் மற்றவர்களுக்குத் தெரிகின்றது. மனதில் நிகழும் செயல் செய்கின்றவர்களுக்குத்தான் தெரியும்; மற்றவர்களுக்குத் தெரியாது. நம்மூலம் நிகழும் ஒவ்வொரு செயலுக்கும் எண்ணமே காரணமாக இருக்கிறது. இது பலருக்குத் தெரிவதில்லை. பிறரை அழிக்கவேண்டும் என்ற எண்ணம் செயலைப்போன்று கொடியது. பிறரை அழிக்க வேண்டும் என்ற எண்ணம் மனதில் தோன்றாவிட்டால் அழிக்கின்ற செயலும் நிகழாது. புறச் செயலில் நல்லவர்களைப்போன்று நடந்து கொண்டு எண்ணத்தில் கேட்டுக்கு இடம் தருபவர்கள் பொய்யொழுக்கம் உடையவர்கள் ஆகிறார்கள். கேட்டுக்கு உள்ளத்தில் இடம் தந்திருப்பவர்கள் சோதனை காலங்களில் தங்களுடைய கேட்டை வெளிப்படுத்தி விடுவார்கள். மனதில் பொறாமை, வெறுப்பு சம்பந்தமான எண்ணங்கள் இடம் பெற்றிருக்குமானால் பிறருக்குக் கேடுவிளைவிக்கின்ற செயலாக அவை தோற்றத்துக்கு வரும். மனதில் இருக்கும் வெறுப்பும், பொறாமையும் கொலைக்குக் காரணமாக இருக்கின்றன. அன்பைப்பற்றி மேடையில் நின்றுகொண்டு பிரமாதமாகப் பேசலாம். ஆனால் அது உலகத்தில் போரையோ, கொடுமையையோ நிறுத்திவிடமுடியாது. உள்ளத்தில் பொறாமையும், வெறுப்பும் உள்ளவரையில் போரும், கொலையும் நிகழ்ந்துகொண்டுதான் இருக்கும். உள்ளத்தில் அன்பு ஊற்றெடுத்து வரும்பொழுதுதான் போரும், கொலையும் தடுக்கப்படும். அன்பைப்பற்றிப் பேசுவதாலோ, அன்பு இருப்பதாகச் சொல்வதாலோ நம்மிடத்தில் அன்பு வந்துவிடாது. அன்பு இருப்பது போலப் பிறரிடம் காட்டி இனிமையாகப் பேசுவதால் நம்மிடத்தில் அன்பு வந்துவிடாது. நம் உள்ளத்தில் உள்ள ஆசைகளை வென்று அகங்காரத்தை அடக்கும்பொழுதுதான் உள்ளத்தில் அன்பு உண்டாகிறது. உள்ளத்தில் அகங்காரமும், ஆசையும் அழிக்கப்படும்பொழுது தெய்வீக அன்பு ஊற்றெடுக்கிறது. அந்தத் தூய அன்பைக்கொண்டு அனைத்துயிர்களையும் நாம் நேசிப்பது சாத்தியம். அந்தக்கரணமடங்கத் துறவு வாழ்க்கை நடத்தும் பொழுதுதான் நம் உள்ளத்தில் தெய்வீக அன்பு தோன்றுகிறது, மனதிலுள்ள அற்ப ஆசைகளை அகற்றுவதற்கு நாம் மறந்துவிடுகிறோம். சாதனை நம்மிடத்திலுள்ள அற்பத் தன்மையை அழிக்கப் பயன்படவேண்டும். அப்பொழுதுதான் தெய்வீகக் காட்சி நமக்குக் கிட்டுகிறது. கடவுள் காட்சி பெறுவதுதான்

வாழ்க்கையின் இலட்சியம் என்பதை நாம் மறந்துவிடுகின்றோம். பேர், புகழ், இவற்றில் நாட்டம் உடையவர்களாகவும், சுயநலப்பற்றை வளர்ப்பவர்களாகவும் நாம் இருப்பதால் கடவுள் காட்சி நாம் பெறமுடிவதில்லை. நான் என்கின்ற முனைப்பு முன்னணிக்கு வந்து நம்முடைய முன்னேற்றத்துக்குத் தடைபண்ணிவிடுகிறது. அந்த நான் என்னும் முனைப்பை ஒழிப்பது தான் கஷ்டம். அது இருக்கும் வரையில் நாம் நம்முடைய எதிரிகளை நேசிக்கமுடியாது. 'நான்' என்கின்ற முனைப்பு அழியாதிருக்கும் வரையில் நாம் எதிரிகளை நேசிப்பது சாத்தியமில்லை.

"எவ்வுயிரும் என் உயிர்போல் எண்ணி
இரங்கவும் நின்
தெய்வ அருள்கருணை செய்யாய் பராபரமே."

ஒவ்வொருவரும் தங்கள் உயிரை நேசிக்கின்றார்கள். யாரும் தங்கள் உயிரை வெறுப்பதில்லை. நானும் என் உயிரை நேசிக்கின்றேன். என் உயிர் எனக்கு எவ்வளவு அருமையானதாக இருக்கிறது என்பதை அறிவேன். என் உயிரைப் போன்றே மற்ற உயிர்களையும் கருதி அனைத்துயிர்களிடத்தும் அன்பு செலுத்துவதற்குக் கருணாமூர்த்தியாகிய தெய்வமே, நீ அருள் புரியவேண்டும் என்று தாயுமானவர் இறைவனிடம் விண்ணப்பிக்கின்றார்.

'வெறுப்பு வேற்றுமையை வளர்க்கிறது.' உடலெங்கும் விஷத்தை உண்டுபண்ணுகிறது. ஆதலால் வெறுப்பு நல்வாழ்வுக்கு ஒவ்வாது. வெறுப்பற்று இருந்தால் மட்டும் போதாது. ஜடப்பொருள்களிடத்து வெறுப்பு இல்லை. ஆனால் வெறுப்பு இல்லாததை முன்னிட்டு அவைகளுக்குச் சிறப்பு ஒன்றுமில்லை. உயிர் வாழ்பவன் எல்லா உயிர்களிடத்தும் நட்புக் கொள்ளுதல் வேண்டும் சுயநலத்துக்காகப் பிற உயிர்களிடத்து நட்புக்கொள்ளுதல் பொருந்தாது. தன் வாழ்க்கை பிறருக்குப் பயன்படும்படி பிறரை நேசிக்கவேண்டும். தன் பொருளுக்கே நஷ்டம் வருவதாக இருந்தாலும் அதைப் பொருள்படுத்தாது பிற உயிர்களை நேசிக்கவேண்டும். இங்ஙனம் எல்லா உயிர்களிடத்தும் வெறுப்பின்றி எல்லா உயிர்களையும் நேசித்து அவைகளுக்கு உதவுபவன் எனக்குப் பிரியமான பக்தன் என்று கண்ணன் கீதையில் பகர்ந்துள்ளார்.

அயலானை வெறுப்பவன் கடவுளிடம் பக்தி செலுத்த முடியாது. உண்மையில் கடவுளிடம் பக்தி இருக்குமானால் நாம் கடவுளை அனைவரிடத்திலும் காண்போம். அப்பொழுது நாம் யாரை வெறுக்கமுடியும்! யாரை வெறுத்தாலும் அது கடவுளையே வெறுப்பதாகிறது. கடவுள் அனைவரிடத்திலும் இருப்பதை நாம் காண்கின்றபொழுது யாருக்கு உதவி செய்தாலும் அது கடவுளுக்கு உதவி செய்ததாகிறது. நம்மைப் பிறரிடம் இருந்து பிரித்துக் காண்பது நம்மிடத்திலுள்ள அறியாமை ஆகும். நம்மைப் பிறரிடம் இருந்து பிரிக்கும்பொழுது கடவுளிடம் இருந்தே நம்மைப் பிரித்தவர்கள் ஆகின்றோம்.

எண்ணம்போல வாழ்வு என்பது கோட்பாடு. எதை எண்ணுகின்றோமோ அதன் மயமாக நாம் மாறி அமைகின்றோம். அக்கோட்பாட்டின்படி பிறருக்குக் கேடு செய்ய எண்ணுபவன் தன்னையே கெடுத்துக்கொள்பவன் ஆகின்றான். பிறருக்கு நலம் செய்ய எண்ணுபவன் தனக்குத் தானே நலம் செய்துகொண்டவன் ஆகின்றான். அயலான் மீது கோபிக்கும்பொழுது அந்தக் கோபம் அயலானுக்குச் செய்கின்ற கேட்டைவிட நமக்குச் செய்கின்ற கேடு அதிகம். அறியாமையினால் பிறரை நாம் வெறுக்கும்பொழுது அவ்வெறுப்பின்மூலம் நமக்குநாமே கேடுசெய்து கொள்கிறவர்கள் ஆகின்றோம். ஆகையால் தான், அயலானை வெறுப்பவன் நரகத்துக்குப் போகிறான் என்று இயேசுநாதர் பகர்கின்றார். கோபம் பொல்லாதது. கோபப்படுகின்றவன் புத்தி நாசமடைந்து தன்னைத்தானே அழித்துக் கொள்கின்றான். அயலானும், தானும் ஒன்று என்று அறியாது அயலான்மீது கோபத்தைச் செலுத்துகின்றவன் தன்மீதே கோபத்தைச் செலுத்துபவன் ஆகின்றான். அயலான்மீது கோபிக்கும்பொழுது அந்தக் கோபம் தனக்கே பெருங்கேட்டை விளைவிப்பதால் கோபிப்பவன் தன்னையே கொளுத்திக்கொள்கிறான் என்று இயேசுநாதர் பகர்கின்றார். தன்னிடத்திலுள்ள சிறுமைகளை அழிப்பவன் அனைத்தையும் தன் மயமாகக் காண்கின்றான். தன்னிடத்திலுள்ள சிறுமைகளை அயலார்மீது செலுத்துபவன் தன்னைத்தானே அழித்துக் கொள்கின்றான். இயேசுவின் இவ்வுபதேசத்தில் இக்கருத்து அடங்கியிருக்கிறது.

நான்கு சாதனங்கள்

மனிதன் தன் மனதைத் திருத்தி அமைக்கக் கடமைப்பட்டிருக்கிறான். மனிதன் மனதைச் சரியாகக் கையாளத் தெரிந்துகொள்ளுதல் நல்ல சாதனையாகிறது. ஐம்பொறிகளை விலங்குகள் கையாண்டு வருகின்றன. ஆனால், அவைகள் மனதைக் கையாளுவதில்லை. மனிதன் மட்டும் மனதைக் கையாண்டு வருகின்றான். மனத்தினுடைய தன்மை எத்தகையது என்பதை,

எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி ஏழை-
[நெஞ்சம்
புண்ணாகச் செய்தது இனிப்போதும் பராபரமே

என்ற பராபரக்கண்ணியில் தாயுமானவர் விளக்குகின்றார். மனதில் கணக்கற்ற எண்ணங்கள் தோன்றிக்கொண்டே இருக்கின்றன. அப்படி எண்ணங்களுக்கு இடங்கொடுக்கின்ற மனது சிறுமை அடைகின்றது. சிறுமை படைத்த மனது அற்ப எண்ணங்களுக்கு இடம் தருகிறது. எண்ணக்கூடாத எண்ணங்களை எண்ணி அது சிறுமைக்கு ஆளாகிறது. தேவையில்லாத எண்ணங்களை எண்ணுவதால் அது துன்பப்படுகிறது. இப்படி அற்ப எண்ணங்களுக்கு இடம் தந்து தன்னைச் சிறுமைப்படுத்திக்கொண்டிருக்கின்ற செயலை மனது நிறுத்த வேண்டும் என்பதை மேற்கூறிய கண்ணியில் தாயுமானவர் தெரிவிக்கின்றார்.

மனதில் அற்ப எண்ணங்கள் எல்லாம் எழா வண்ணம் தடுத்து நிறுத்துவதற்கு நாம் சாதனை செய்தாகவேண்டும். மனதை மேலாம் சிந்தனையில் செலுத்துவதற்கு நம் சாதனை பயன்படவேண்டும். “சாதனையின்றிச் சாதிப்பாரில்லை” என்பது கோட்பாடு. மனதின் சிறுமைகளை ஒழித்துவிடுவதற்கு மனதில் மேலாம் எண்ணங்களை நிரப்பவேண்டும். மனதிலுள்ள சிறுமைகளை ஒழிக்கவும் அதில் மேலாம் எண்ணங்களை நிரப்பவும் சாதனை செய்தாகவேண்டும்.

வாழ்க்கையின் மூலம் மனதிலுள்ள சிறுமைகளை வளர்த்துக்கொண்டே போகிறவர்கள் அவிவேகிகள் ஆகின்றார்கள். உண்பதிலும், உடுப்பதிலும், போகத்தை அனுபவிப்பதிலும் வாழ்வு முழுவதையும் பெரும்பாலான மக்கள் கழித்துவிடுகின்றனர். அவர்கள் மனம் அற்ப சுகத்தை விட்டுவிட விரும்புவதில்லை. விட்டில் பூச்சி விளக்கு வெளிச்சத்தை நம்பியும், மீன் தூண்டிலிலுள்ள இரையை நம்பியும், மான் வேடர்கள் எழுப்பும் ஓசையை நம்பியும், வண்டு மலரிலுள்ள மணத்தை நம்பியும், யானை ஊறு என்னும் உணர்ச்சிக்கு வசப்பட்டும் உயிர்களை இழக்கின்றன. அற்ப வாழ்வு வாழ்கின்ற மனிதன் ஐம்பொறிகளின் மூலம் வருகின்ற சுகத்தை நம்பி வாழ்வை முடிக்கின்றான். இதனை மாணிக்கவாசகர் “இந்திரிய வயமயங்கி இறப்பதற்கே காரணமாய் என்று” இயம்புகின்றார். இந்திரிய சுகங்களில் மனம் மயங்கா வண்ணம் தடுத்து நிறுத்துவது எதுவோ அது சாதனை எனப்படும். இந்திரிய சுகங்களில் மனம் கட்டுப்படாது அதை அடக்கிப் பழகுபவர்கள் சாதனை செய்பவர்கள் ஆகிறார்கள். இந்திரிய சுகங்களை அனுபவிப்பதில் மனதைத் தன்போக்கில் விட்டுவிட்டால் அது வாழ்வைக் குலைத்துவிடுகிறது. வாழ்வை நல்வாழ்வாக ஆக்குவதற்குச் சாதனையின் மூலம் மனதைக் கட்டுப்படுத்திப் பழகவேண்டும்.

சாதனையை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம். நித்தியமான ஆன்மா எது, அநித்தியமான பிரபஞ்சம் எது என்பதை ஆராயும் செயலை விவேகம் என்கின்றோம். நித்தியமான ஆன்மாவிடத்தில் பற்றுதலையும், அநித்தியமான பிரபஞ்சத்தினிடத்துப் பற்றின்மையையும் வளர்ப்பதை வைராக்கியம் என்கின்றோம். மனதை ஒழுக்கநெறியில் வைத்திருப்பதற்குரிய சமம், தமம், விடல், சகித்தல், சமாதானம், சிரத்தை என்ற ஆறு பண்புகளை வளர்த்தல் ‘சமாதி ஷட்க சம்பத்து’ என்று சொல்லப்படுகிறது. மேலாம் லட்சியத்தை அடைய வேண்டுமென்பதில் தீவிர நாட்டம் கொண்டிருப்பதை முமுட்சுத்துவம் என்பார்கள். விவேகம், வைராக்கியம், ஷட்குணசம்பத்து, முமுட்சுத்துவம் என்ற நான்கும் நான்கு சாதனங்களாம்.

நல்லது எது, கெட்டது எது என்று பகுத்து அறியும் அறிவை விவேகம் என்கிறோம். பொறிகளோடு சம்பந்தப்பட்ட அறிவு எல்லா உயிர்களுக்கும் இருக்கின்றது. அறிவு ஏற்படுவதற்கு நினைவு காரணமாக இருக்கிறது. உலக

சம்பந்தமான நினைப்பு இப்பொழுது இருப்பதால் உலக சம்பந்தமான அறிவு நமக்கு இருக்கிறது. உலகத்திலுள்ள ஏதாவது ஒரு பொருளைப்பற்றி நினைத்தால் அதைப்பற்றிய அறிவு உண்டாகின்றது. தூக்கத்தில் நினைவு ஒடுங்கிப் போய்விடுகிறது. அப்பொழுது நமக்கு அறிவு இல்லை. தூங்கும்பொழுது எப்படித் தூங்குகின்றேம் என்ற அறிவு நமக்கு இல்லை. தூக்கத்தில் ஒன்றையும் அறியாத நிலை நமக்கு ஏற்படுகிறது. தூக்கத்தில் நினைவு ஒடுங்கிப் போய்விடுவதால் அறிவும் ஒடுங்கிப் போய்விடுகிறது. விழித்து எழுந்ததும் இன்பமாக இருக்கிறேன், துன்பமாக இருக்கிறேன் என்ற அறிவு இருக்கிறது. எதைப்பற்றிய நினைவு உண்டாகிறதோ அதைப்பற்றிய அறிவு வருகிறது. நினைவுகளெல்லாம் ஒடுங்கிப் போன பிறகு நம்முடைய நிலை எத்தகையது என்பதை அறிகின்ற அறிவுதான் மெய்யறிவு ஆகிறது. அப்பொழுது நாம் ஆனந்த மயமாக இருக்கிறேம். நினைவை யெல்லாம் ஒழித்து விட்டு நாம் இருக்கின்ற நிலையை அறிந்து பார்க்கின் அது ஆனந்தமயமாக இருக்கின்றது. அந்த ஆனந்தம்தான் பிரம்மம்.

நாம் முன்பு பெற்ற அனுபவங்களெல்லாம் விருத்திகள் மயமாக உள்ளத்தில் புதைந்து கிடக்கின்றன. பொறி புலன்களின் மூலம் புற உலகைப் புலப்படுத்தும்பொழுது அவ்விருத்திகள் எண்ணங்களாகத் தோன்றுகின்றன. அதைத்தான் நாம் ‘அறிவு’ என்று சொல்லுகின்றேம். நாம் ஒருவரோடு பழகிப் பிறகு அவரைப் பிரிந்துவிடுவதாக வைத்துக்கொள்வோம். நீண்ட நாட்களுக்குப் பிறகு அவரை மீண்டும் சந்திக்கின்றேம். அப்பொழுது அவர் யார் என்பதை நாம் அறிந்துகொள்ள முடியாவிட்டால் அவர் முன்பு நிகழ்ந்த சில நிகழ்ச்சிகளை ஞாபகப்படுத்துவார். உடனே அவரை நாம் யார் என்று அறிந்துகொள்கின்றேம். எல்லாரிடமும் உள்ள ஆத்ம சொருபத்தை நாம் காண்கின்றபொழுது அது மெய்யறிவு ஆகிறது. பொறி புலன்களைக் கொண்டு உலகப்பொருள்களோடு நாம் இணக்கம் வைக்கும்பொழுது ஒருவித அறிவு நமக்கு உண்டாகிறது. இந்திரியங்களைக்கொண்டு நாம் பெறுகின்ற அறிவெல்லாம் உலக சம்பந்தமான அறிவாக இருக்கின்றது. உலக சம்பந்தமானவைகளெல்லாம் எத்தகையவை என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். அவைகள் ஒரு காலத்தில் இருந்து மற்றெரு காலத்தில் இல்லாது போய்விடுகின்றன. மேலும், அவைகள் இடத்தில் கட்டுண்டவைகளாக இருக்கின்றன. காரண, காரியத்திற்கும் அவைகள் உட்பட்டவைகளாக இருக்கின்றன. உலகப்பொருள்கள் யாவும் காலதேச வர்த்தமானம் என்னும் வரையறைக்கு உட்பட்டவையாகும். சரீரம் உலகப் பொருளோடு சம்பந்தப்பட்டது. ஒரு காலத்தில் இருந்து இன்னெரு காலத்தில் இல்லாது போய்விடுகிறது. இடத்திலும் அது கட்டுப்பட்டதாக இருக்கிறது. சரீரத்துக்குப் பஞ்சபூதங்கள் காரணமாக இருக்கின்றன. பஞ்சபூதங்களின் சேர்க்கையே சரீரமாக வடிவெடுத்திருக்கிறது. பஞ்சபூதங்களையும் அந்தந்தப் பூதங்களிடம் ஒப்படைத்துவிட்டால் சரீரத்தினுடைய வடிவம் கலைந்து போய்விடும். கால தேச வர்த்தமானங்களுக்கு உட்பட்டவைகளாக இருப்பவை யாவும் அநித்தியமானவைகள். அவைகளைப் பற்றிய பதிவுகள் உள்ளத்தில் இடம்பெற்றிருக்கின்றன. அப்பதிவுகள் நினைவுக்கு வரும்பொழுது அதை அறிவு என்று சொல்கின்றேம். அந்த அறிவு அநித்தியமானதைப் பற்றிய அறிவு ஆகும்.

நித்தியமானது என்றல் என்ன என்பதை அறிந்துகொள்ள வேண்டும். எது கால தேச வர்த்தமானத்தில் கட்டுப்படாமல் இருக்கிறதோ அது நித்தியமானது. அதைப்பற்றிய சிந்தனை நித்தியத்தைப்பற்றிய அறிவை நமக்கு உண்டாக்குகிறது. அநித்தியத்தைப் பற்றிய சிந்தனை அநித்தியத்தைப் பற்றிய அறிவை வளர்க்கிறது. நித்தியப் பொருளைப் பற்றிய சிந்தனை நம் உள்ளத்தில் இடம்பெறவேண்டும். முன்பு ஒன்று இல்லாதது தோற்றத்துக்கு வரமுடியாது. முன்பு ஏதாவது ஒரு நிலையில் இருந்த பொருள்தான் தோற்றத்துக்கு வரமுடியும். நாம் ஸ்தூல சரீரம் எடுப்பதற்கு முன்பு எப்படி இருந்தோம் என்பதைச் சொல்ல முடியாது. ஆனல், ஸ்தூல சரீரம் எடுப்பதற்கு முன்பு இருந்திருக்கவேண்டும். அப்படி இருந்திருந்தால்தான் ஸ்தூல சரீரத்துடன் இப்பொழுது நம்மை விளக்கமுடியும். விதையினுள்

விருக்ஷம் மறைந்திருக்கிறது. விதையினுள் எது சூக்ஷ்மமாக இருக்கிறதோ அதுதான் மரமாகத் தோன்றி வருகிறது. விதையினுள் சூட்சும வடிவத்தில் இருக்கின்ற மரத்தை நாம் காணமுடிவதில்லை. தோற்றத்திற்கு வரும் பொழுதுதான் விதையினுள் இருந்த மரம் எத்தகையது என்பதை அறிந்துகொள்ள முடியும். ஆலமரம் எப்படி இருக்கும் என்பதை ஆலம் விதையைப் பார்த்துச் சொல்ல முடியாது. மாமரம் எப்படி இருக்கும் என்பதை மாங்கொட்டையைப் பார்த்துச் சொல்ல முடியாது. விதை வடிவங்களில் அவற்றைப் பார்க்கும் பொழுது மாங்கொட்டை பெரியதாகவும், ஆலம் விதை சிறியதாகவும் காட்சி கொடுக்கின்றன. மரமாகும் பொழுது சிறிய ஆலம் விதையிலிருந்து எவ்வளவு பெரிய ஆலமரம் உருவாகிறது என்பதைக் காணமுடிகிறது. அவ்வளவு பெரிய ஆலமரம் எவ்வளவு சிறிய விதைக்குள் அடங்கியிருந்தது என்பது ஆச்சரியமாக இருக்கிறது. மாங்கொட்டையையும், ஆலம் விதையையும் ஒரு சிறு குழந்தையிடம் தந்து இவற்றுள் எதிலிருந்து வரும் மரம் பெரியதாக இருக்கும் என்று கேட்டால் மாங்கொட்டையிலிருந்து வரும் மரம்தான் பெரியதாக இருக்கும் என்று அவ்வறியாக் குழந்தை சொல்லும். மாங்கொட்டை பெரியதாகஇருப்பதால் அதிலிருந்து வரும் மரம் பெரியதாகத்தான் இருக்கும் என்று காரணமும் கற்பிக்கும். தோன்றா நிலையில் ஒரு பொருள் இருக்கும்பொழுது அதைப் பற்றிய அறிவு நமக்கு இல்லை. ஆனால், தோன்றா நிலையில் இல்லாதது ஒன்று தோற்றத்துக்கு வர முடியாது. எது தோன்றா நிலையில் இருந்ததோ அதுதான் தோற்றத்துக்கு வரமுடியும். தோற்றத்துக்கு வராத பகுதி நமக்கு விளங்காததாகவும் தோற்றத்துக்கு வந்துள்ள பகுதி ஓரளவு விளங்குவதாகவும் நமக்குத் தென்படுகின்றன. தோற்றத்துக்கு வந்துள்ள பகுதியை மட்டும் நாம் வைத்துக்கொண்டு அதை நித்தியமானது என்று சொல்ல முடியாது. தோற்றத்துக்கு வந்துள்ளது, வராதது ஆகிய இரண்டுக்கும் எது அடிப்படையாக இருக்கின்றதோ அது நித்தியப் பொருளாகிறது. அதற்கு என்றைக்கும் அழிவு இல்லை. தோற்றத்துக்கு வந்துள்ள அதன் பகுதி மறைந்து போவதை முன்னிட்டு அப்பொருளுக்கே அழிவு வந்து விடுவதில்லை. ஒரு பொருள் தோற்றத்துக்கு வருவதும், தோன்றிய நிலையில் இருந்து தோன்றாநிலைக்குப் போவதும் பிரபஞ்சத்தில் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. இப்படி மாறி அமைகின்ற நிலையிலிருக்கும் பொருளுக்கு அடிப்படையாக அதற்கு மாறாதநிலை ஒன்று உண்டு. அம்மாறாத நிலைதான் அதன் நித்தியத்துவம் ஆகிறது. தோற்றத்துக்கு வருவதும், மறைவதும் அநித்தியமாகும். மாறாது இருக்கின்றபொருள் நித்தியமாகும். நித்தியப் பொருளைப் பற்றிய அறிவு மெய்யறிவு ஆகும்.

விவேகத்தை வளர்ப்பது நாம் செய்யும் சாதனையாகும். நாம் எதைச் சிந்திக்கின்றோமோ அது 'நினைப்பு' ஆகிறது. நித்தியப் பொருளைப் பற்றிய சிந்தனை உள்ளத்தில் நித்தியத்தைப் பற்றிய நினைவை உண்டாக்குகிறது. நம்முடைய தோற்றத்துக்கு எல்லாம் மூலமாக மாறாது எதுஇருக்கிறது என்பதை எண்ணிப் பார்ப்பது நித்தியத்தைப் பற்றிய எண்ணத்தை வளர்க்கிறது. அந்த எண்ணம் வளர்ந்துவந்தால் நாம் விவேகிகள் ஆகின்றோம்.

நித்தியப் பொருளிடத்தில் பற்றுதலையும், அநித்தியப்பொருளிடத்தில் பற்றின்மையையும் வைராக்கியம் என்று சொன்னோம். விவேகம் வராதவனுக்கு வைராக்கியம் உண்டாவதில்லை. நித்தியப் பொருள் எது என்பதைப் பற்றிய தெளிவு மனதில் உண்டாகின்ற பொழுதுதான் அநித்தியப் பொருளிடத்தில் உள்ள பற்றுதல் குறையும். நித்தியப் பொருளைப் பற்றிய தெளிவு மனதில் இல்லாதவிடத்து அநித்தியப் பொருளைப் பற்றிய பற்றுதல் குறையாது. ஸ்ரீ ராமகிருஷ்ணர் "கற்கண்டு கட்டியைச் சுவைத்தவனுக்குக் கருப்பட்டி கட்டி சுவைக்காது" என்று சொல்லுவார். அது போன்று நித்தியத்தைப் பற்றிய மேலாம் எண்ணம் மனதில் இடம் பெறுகிற பொழுது கீழான அநித்தியப் பொருள்களைப் பற்றிய எண்ணம் தானாகவே அடிபட்டுப் போகிறது. மேலாம் பொருள்களிடத்து மனதைச் செலுத்துகின்ற விவேகிதான் வைராக்கிய புருஷனாக இருக்க முடியும்.

இவ்வுலகப் பற்றுதலையும், சொர்க்காதியிலுள்ள பற்றுதலையும் ஒழித்திருப்பது வைராக்

கியம்ஆகும். இந்திரியங்களுக்குச் சுகம் தருகின்றவைகள் இவ்வுலகத்தில் அமைந்திருக்கின்றன. மரணத்திற்குப் பிறகு சொர்க்கம் சென்று அங்கு வேண்டிய அளவு சுகம் அனுபவிக்கலாம் என்று நாம் கற்பனை செய்து கொண்டிருக்கின்றோம். சொர்க்கத்தில் துன்பத்திற்கு இடமே இல்லை; அங்குவேண்டும் வசதிகள் எல்லாம் அமைந்து இருக்கின்றன என்று கற்பனை செய்து கொண்டிருக்கின்றோம். இவ்வுலகத்தில் நாம் சுகத்தைத் தேடி அலைகின்றோம். சொர்க்கத்தில் நாம் தேடாமலே சுகம் கிடைக்கிறதென்று எண்ணிக்கொண்டு இருக்கின்றோம். வெப்ப காலத்திலுள்ள வெப்பத்தைப் போக்குவதற்கும், குளிர்காலத்தில் உள்ள குளிரைப் போக்குவதற்கும் சமசீதோஷ்ண அறையைக் கட்டுகின்றோம். சொர்க்கத்தில் அத்தகைய நிலை நம்முடைய முயற்சியில்லாமலேயே நடைபெறுகிறது என்று எண்ணுகின்றோம். நாம் தேடும் வசதிகள் நமக்குச் சுக ஜீவனமாக வாழ்வதற்குப் பயன்படுகின்றன. நடந்து செல்லும் பிரயாணத்தை வான ஊர்தியில் சென்றால் விரைவில் சிரமம் இல்லாதுமுடிக்கலாம். ஆனால் பூலோகத்தில் வான ஊர்தியில செல்வதற்கு வான ஊர்தி நிலையத்திற்கு நாம் போயாக வேண்டும். சொர்க்கத்திலோ நாம் இருக்கும் இடத்திற்கே வானஊர்தி வந்துவிடும். நாம் இருக்கும் இடத்திலேயே எல்லா வசதிகளும் அமைந்திருப்பதுதான் சொர்க்கம் என்று எண்ணிக் கொண்டு இருக்கின்றோம். பூலோகத்தில் தேடிப்பெறுகின்ற சுகம் சொர்க்கத்தில் தேடாமலேயே கிடைத்துவிடுகிறது என்று கற்பனை செய்கின்றோம். இத்தகைய போகத்திலுள்ள பற்றுதலை எல்லாம் விட்டுப்பழகவேண்டும். இந்திரியங்கள் மூலம் வரும் சுகம் அனைத்திற்கும் துன்பம் என்ற விலை கொடுத்தாக வேண்டும். அநித்தியப் பொருள்களிடம் இருந்து வரும் சுகம் அனைத்தும் அநித்தியமாகத்தான் இருக்க முடியும். பொருள் படைத்தவர்கள் வானஊர்தியில் சென்று இன்பமடையலாம் என்று நினைக்கின்றனர். வானஊர்தி அநித்தியப் பொருளாகையால் அதிலிருந்து நிரந்தரமான சுகத்தைப் பெறமுடியாது. பூமியில் காரிலும், வானத்தில் வான ஊர்தியிலும் செல்வது சுகம் என்றும், நடந்துபோவது துன்பம் என்றும் எண்ணிக்கொண்டு இருக்கின்றோம். ஆனால் நடப்பதில் இருக்கின்ற சுகம் நமக்குத் தெரிவதில்லை. வெயிலில் சென்றால்தான் நிழலின் அருமை தெரியும். வெயிலில் கஷ்டப்படுகிறபொழுது நிழலின் சுகம் நமக்கு விளங்குகிறது. நோயில் கஷ்டப்படுகிறபொழுதுதான் ஆரோக்கியத்தினுடைய சுகம் தெரியும். நடந்து செல்கிறபொழுது உடல் உறுதி அடைகிறது. காரிலோ, வான ஊர்தியிலோ செல்லும்பொழுது உடல் உறுதி அடைவதில்லை. நடப்பதனால் உடல் உறுதியாகின்ற சுகம் நமக்குக் கிட்டுகின்றது. உடல் உறுதி அடைகின்றபொழுது உடலுக்கு வரும் நோயை எதிர்க்கின்ற ஆற்றல் அதற்கு உண்டாகிறது. 'நோய்க்கு இடங் கொடேல்' என்பது கோட்பாடு. நாள்தோறும் சிறிது நேரமாவது உடல் உழைப்புச் செய்து உடலிலுள்ள கெட்ட நீரை வியர்வையாக வெளியேற்றவேண்டும். அப்படிச் செய்கின்றவர்களுடைய உடல் ஆரோக்கியமாக இருக்கிறது. நோயின்றி வாழுதல் என்ற சுகத்தை அவர்கள் பெறுகிறார்கள். கடையில் ஆசனம் போட்டு அதில் அமர்ந்து உடலை அசையாது வைத்திருப்பவன் சுகமாக இருக்கிறான் என்று எண்ணிக்கொண்டு இருக்கின்றோம். வெயிலில் நின்றுகொண்டு கோடரிகொண்டு விறகு உடைக்கின்ற ஆள் கஷ்டப்படுகிறான் என்று சொல்கின்றோம். கடையில் அமர்ந்திருக்கின்ற ஆளினுடைய உடல் நோய்க்கு ஆளாகிறது. விறகு உடைக்கின்றவனுடைய உடல் உறுதி வாய்ந்ததாகவும், ஆரோக்கியம் உடையதாகவும் இருக்கிறது. உடல் உழைப்புச் செய்யாது உண்டியைப் பெருக்கி வருகிறவர்களுக்குச்சர்க்கரை வியாதி வருகிறது. நன்றாக உடல் உழைப்புச் செய்கின்றவனுக்கு உணவுஜீரணம் ஆகி உடலிலுள்ள கெட்ட நீரும் வெளியாகி விடுகிறது. எனவே அவன் உடல் சர்க்கரை வியாதிக்கு ஆளாவதில்லை. உடல் உழைப்புச் செய்கின்றவர்கள் நோயற்ற வாழ்வு என்னும் சுகம் பெறுகிறார்கள். வாழ்வைக் குலைத்துப் பெறுகின்ற சுகம் நமக்குச் சுகமாகத் தோன்றுகிறது. நெறியான வாழ்வு வாழ்ந்து அவ்வாழ்வின் மூலம் வருகின்ற சுகம் நிரந்தரமானது என்பது நமக்கு விளங்குவதில்லை.

நித்தியமான பொருளைப்பற்றி எண்ணுபவர்கள் நித்திய சுகத்தை அடைகிறார்கள். நித்தியப் பொருளைநாடி இருந்த பக்தர்கள் அழியாப்பெருநிலையை அடைந்தார்கள். பிரகலாதன், மார்க்கண்டேயன் போன்ற பக்தர்கள் சதா நித்தியப் பொருளைப்பற்றிய சிந்தனையிலேயே மூழ்கியிருந்தாகள். இரணியகசிபு பிரகலாதனுக்குக் கொடிய துன்பங்களை விளைவித்தான். அக்கஷ்டங்கள் நம் போன்றவர்களுக்குத் துன்பத்தைத் தருவனவாக இருக்கின்றன. ஆனால், பிரகலாதன் தன் உள்ளத்தை யாண்டும் கடவுளிடத்திலேயே கொடுத்து அக்கஷ்டங்களைப் பற்றிச் சிந்தியாதிருந்தான். இரணியகசிபு அவனைக் கொல்வதற்கு விஷத்தைக் கொடுத்தான். பிரகலாதன் அதை ஈசுவரப் பிரசாதமாக அருந்தினன். அவனை எந்த நிலையில் வைத்த பொழுதிலும் ஈசுவரச் சிந்தனையிலேயே அவன் மூழ்கி இருந்ததால் மகிழ்வுற்று இருந்தான். தெய்வக்காட்சி பெற்ற பிரகலாதன் தனக்குத் துன்பம் செய்தவர்களும் இன்புற்றிருக்க வேண்டுமென்று தெய்வத்திடம் வரம் கேட்கின்ருன். நமக்குத் துன்பம் வருகிறபொழுது கடவுள் சிந்தனை வலுககிறது. பிரகலாதனுக்கு இரணியகசிபு துன்பத்தைக்கொடுக்க அவனுக்குத் தெய்வபக்தி வளர்ந்துகொண்டே வந்தது. பிரகலாதனிடம் பக்தி வளர்வதற்கு இரணியகசிபு ஒரு விதத்தில் காரணமாக இருந்தான் என்று சொல்லலாம்.

இராமன் வனம் செல்லுதற்குக் கைகேயி காரணமாக இருந்தாள். மந்தரையைத்தவிர அயோத்தியில் வாழ்ந்த மக்கள் அனைவரும் கைகேயியைத் திட்டினர்கள். இராமன் காட்டுக்குப்போவதற்குக் காரணமாக இருந்த கொடிய பாதகியாகக் கைகேயியை அயோத்தி மக்கள் கருதினர்கள். ஆனல், ஆரணியத்தில் வாழ்ந்திருந்த ரிஷிகள் கைகேயியைப்போற்றினர்கள். கைகேயியினுடைய அனுக்கிரகத்தினல்தான் இராமனைச்சந்திக்கும் வாய்ப்பு தங்களுக்குக் கிடைத்ததாக ரிஷிகள் கருதினர்கள். இராமனும், ரிஷிகளோடு வாழ்ந்திருப்பதற்குப் பெருமகிழ்ச்சி அடைந்தான். அயோத்தியில் நல்லவர்கள், கெட்டவர்களாகிய இருதரத்தார்களுக்கிடையில் வாழ்வதைக்காட்டிலும் சான்றோர்களுக்கிடையில் வாழ்கின்ற வாய்ப்பு மேலானதல்லவா! அத்தகைய மேலான வாய்ப்பை இராமனுக்குக் கைகேயி நல்கியதால் இராமனுக்கும், ரிஷிகளுக்கும் கைகேயி நலம் பண்ணி வைத்தவள் ஆகின்றாள். பரதன் பண்பில் இராமனுக்குக் குறைந்தவனல்லன். பரதனுக்குக் கைகேயி முடிசூட்டி வைத்தது அயோத்திக்கு நலம் செய்து வைத்தது ஆகிறது. ஆகவே, யாருக்கும் தெரியாத பாங்கில் கைகேயினுடைய செயல் நலம் செய்வதாக அமைகிறது. இவ்வுலகில் நிகழ்கின்ற ஒவ்வொருசெயலிலும் நலம், கேடு ஆகிய இரண்டும் கலந்தே இருக்கும். ஆகவே உலகத்திலுள்ள எதனிடத்தும் பற்றுதல் வைக்காது இருந்து பழகுவது வைராக்கியம் எனப்படும்.

இவ்வுலக இன்பமாக இருந்தாலும் சரி, சொர்க்காதி இன்பங்களாக இருந்தாலும் சரி அவைகளிடத்து நாட்டம் கொள்ளாது இருக்க வேண்டும். நித்தியப் பொருளாகிய தெய்வத்திடம் நாட்டம் கொண்டிருக்கவேண்டும். இராமன் அயோத்தியை விட்டுக் காட்டுக்குப் போன பொழுது மகிழ்ச்சி அடைந்தான். அயோத்தி ஆட்சியில் இராமனுக்குப் பற்று இல்லை ரிஷிகளுடைய வாழ்வு மேலாம் வாழ்வு என்பதை இராமன் நன்கு அறிந்திருந்தான். எனவே தான் காட்டுக்குப் போவதற்கு இராமன் எவ்வித ஆட்சேபனையும் செய்யாது மகிழ்ச்சியுடன் கிளம்பினன். பொதுவாகக் காடு என்று சொன்னவுடன் காட்டில் உள்ள புலி, கரடி போன்ற துஷ்டமிருகங்களைப் பற்றிய ஞாபகம் தான் நமக்கு வரும். காட்டுக்குப் போனல் உணவுக்கு என்ன செய்வதென்று நாம் நினைப்போம. துஷ்டமிருகங்களுக்கிடையில் நாம் எப்படி வாழமுடியும் என்ற எண்ணம்தான் நம் உள்ளத்தில் எழும். அத்தகைய எண்ணங்கள் காட்டில் வாழ்வு கஷ்டம் என்பதை நமக்கு அறிவுறுத்திக்கொண்டு இருக்கும். காடு என்று சொன்னவுடன் இராமனுக்கு ரிஷிகளுடைய சிந்தனையும், தவத்தைப் பற்றிய சிந்தனையும் ஏற்பட்டன. அவனுடைய உள்ளத்தில் கொடிய விலங்குகளைப் பற்றிய எண்ணமே எழவில்லை. ரிஷிகளைப்பற்றிய சிந்தனையே இராமனுடைய உள்ளத்தில் எழுந்தது. விவேகம் படைத்தவர்கள் நிலையானதைப் பற்றி எண்ணுகின்றார்கள். நலத்தைப் பற்றிய தெளிவு அவர்

களுக்கு உண்டாகிறது. பிறருக்கு நலம்செய்யக் கருதும் பொழுது நலம் நமக்கு தானுகவே வந் தமைகிறது. உலகப்பொருள்கள் சுகம் தருப வைகள் அல்ல என்ற எண்ணம் உறுதியாகமன தில் ஏற்படுகின்ற பொழுதுதான் அநித்தியப் பொருள்களிடத்தில் உள்ள பற்றுதல் நீங்கு கிறது. நித்தியப் பொருளைப்பற்றிய நினைப்பு வளர்ந்து நித்தியத்தைப் பற்றிய அறிவும் ஓங்கு தல் வேண்டும். நித்தியப் பொருளிடத்து நம்பிக்கையும் நித்தியப்பொருள் உண்டு என்ப தில் தெளிவும் ஏற்படுகிறபொழுது நித்தியப் பொருளிடத்தில் உள்ள பற்றுதல் ஓங்குகிறது. அப்பொழுது உலகப்பற்று குறைகிறது. நித்தி யப் பொருளிடத்துப் பற்றுதலையும் உலகப் பொருளிடத்தில் பற்றின்மையையும் உண் டாக்குவதைத்தான் வைராக்கியம் என்று சொல்லுகின்றோம். நித்தியப் பொருளிடத்தில் ஏற்பட்ட பற்றுதலை வளர்ப்பதற்கு மனதின் கண் சில பண்புகளை வளர்க்க வேண்டும்.

ஷட்குண சம்பத்து என்று சொல்லப்படும் சமம், தமம், விடல், சகித்தல், சமாதானம், சிரத்தை என்னும் பண்புகளில் மனம் ஊறி வரவேண்டும். அந்தக்கரணங்களை அடக்கு வதற்குச் சமம் என்று பெயர்.

“அந்தக் கரணம் அடங்கத் துறப்பதுவே
எந்தத் துறவினும்நன்று எந்தாய் பராபரமே”

என்று தாயுமானவர் பகர்ந்துள்ளார். அந்தக் கரணத் துறவே மேலாம் துறவு ஆகிறது. புறப் பற்று, அகப் பற்று என்ற இரண்டு பற்றுக்கள் இருக்கின்றன. மனது புறத்தி லுள்ள பொருள்களை விட்டுப் பிரிந்திருப்பது அவ்வளவு எளிதன்று. அப்படி அதைப் புறத்தி லுள்ள பொருள்களிலிருந்து விலக்கி எடுத் தாலும் அகத்தில் ஏற்பட்ட பதிவுகளிலிருந்து மனதை விலக்கி எடுப்பது கஷ்டம். மனதி லுள்ள வாசனைகள் மனதை அலக்கழித்துக் கொண்டு இருக்கின்றன. அவ்வாசனைகளி லிருந்து மனதை விடுவிப்பது கஷ்டம். ஆனால் இடைவிடாத, தீவிரமான, உற்சா கத்தோடு கூடிய உறுதியான அப்பியாசம் மனதை வாசனைகளிலிருந்து விலக்கி எடுக் கிறது. அப்பியாசத்தால் அது சாத்தியம் என் பதைக் கண்ணன் கூறியுள்ளார். வாலாயமாக அப்பியாசம் பழகி வருவது அந்தக்கரண அடக் கத்துக்குத் துணையாகிறது. நாம்செய்த வினை களின் விளைவு வாசனைகளாக உள்ளத்தில் இடம் பெற்றிருக்கின்றன. நல்ல செயல்களின் விளைவுகள் நல்ல வாசனையாகவும், கெட்ட செயல்களின் விளைவுகள் கெட்ட வாசனை யாகவும் உள்ளத்தில் இடம்பெற்றிருக்கின்றன. கெட்ட வாசனைகளை நல்ல வாசனைகளைக் கொண்டு ஒழித்தாகவேண்டும். உள்ளத்தில் பாழ்த்த கருமங்களின் போராட்டம் ஓயும் பொழுதுதான் ஆங்குச் சமநிலை ஏற்படுகிறது. கெட்ட வாசனைகளை நல்ல வாசனைகளின் மூலம் ஒழித்துத்தள்ளவேண்டும். காலில் முள் தைத்து விட்டால் காலில் தைத்த முள்ளை எடுப்பதற்கு மற்றொரு முள்ளைப் பயன்படுத்துகிறோம். காலி லுள்ள முள்ளை எடுத்தான பிறகு முள்ளை எடுப் பதற்குப் பயன் பட்ட மற்றொரு முள்ளையும் வீசி எறிந்து விடுகிறோம். அதுபோன்று கெட்ட கர்மங்களின் வாசனையை ஒழிப்பதற்குச் சத்கரு மங்கள் செய்தாகவேண்டும். சத்கருமங்களி னுடைய பலனையும் கடைசியில் விட்டொழிக்க வேண்டும். அப்பொழுதுதான் அந்தக்கரண அடக்கம் பூர்த்தியாகிறது. உலகப்பற்றை வளர்ப்பது தீவினையாகிறது. உலகத்திலுள்ள பொருள்களின் மீது மனது ஓடிக்கொண்டிருக்கு மானல் அது தீய வாசனையுடையது என்பதா கிறது. தீய வாசனை உள்ளத்தில் செயல்படும் பொழுது மனம் உலகப்பொருள்களை நாடி ஓடு கிறது. தீய வாசனையின் வேகத்தை அடக்கி யாகவேண்டும். விவேகத்தைக் கொண்டு தீய வாசனை தலையெடுக்கும்பொழுது அதை அடக்க முயலவேண்டும். தீய வாசனை உண்டாகும் பொழுது மனதில் உண்டாகும் உணர்ச்சியைக் கட்டுப்படுத்தி அவ்வுணர்ச்சியைத்தெய்வத்தின் மீது திருப்பும்போது அது நல்ல வாசனையாக வடிவெடுக்கிறது. உலகப் பொருளின்மீதுள்ள காமத்தைத் தெய்வத்தின்மீதுள்ள காமமாக மாற்றி அமைக்க வேண்டும். உலகப்பொருள் களின்மீது ஏற்படும் கோபத்தைத்தெய்வத்தின் மீது திருப்பவேண்டும். இங்ஙனம் உலகப் பொருள்களின் மீது உண்டாகும் உணர்ச்சி களைத் தெய்வத்தின் மீது உண்டாகும் உணர்ச்சி களாக மாற்றி அமைத்தால் தீய வாசனையின் வேகம் குறைகிறது. சாதகர்கள் இங்ஙனம் சாதனை பழக வேண்டும். (தொடரும்)

அனுமன் கண்ட சீதை

(திரு. K. ராமமூர்த்தி M. Com.)

VI. கற்பினுக்கு அணி

'கள்ளிருக்கும் மலர்க்கூந்தல் ஜானகியை' மனச்சிறையில் அடைத்த இராவணன் இரவும் பகலும் அவள் நினைவாகவே இருந்தான். அசோகவனத்தில் அனுமன் புகுந்த அதே நேரத்தில் அரண்மனையில் துயில்கொண்டிருந்த இராவணன் சீதையின் நினைவால் படுக்கையினின்றும் எழுந்தான்; உடனே அசோகவனம் நோக்கிப் புறப்பட முற்படுகின்றான். இராவணேசுவரன் விருப்பம் அரண்மனை முழுவதும் தெரிவிக்கப்படுகின்றது. மாதர்குல விளக்கினைப் பார்க்கப்போகின்றான் மன்னன் என்பதால் அதற்கேற்ற பரிவாரங்கள் தயாராயின. இராவணன் அசோகவனத்திற்குப் பவனி வந்ததைப் பத்தொன்பது பாடல்களில் கம்பன் சிறப்பித்துக் கூறுகின்றான். எப்படிப்பட்ட இராவணனைச் சீதை துரும்பாகக் கருதினாள் என்பதை நம் மனத்தில் பதியவைக்கவே கம்பன் இவ்வளவு வர்ணிக்கின்றான்.

1. இரவும் பகலாயிற்று :

மலைக்குன்றுகளெல்லாம் ஒன்றாகத் திரண்டனபோன்றமைந்த இருபது தோள்கள். இலங்கேசுவரனின் இருபது காதுகளிலும் அணியப்பட்டிருந்த வைர, ரத்தினங்களால் இழைத்துச் செய்யப்பட்ட சுறாமீன் வடிவத்தில் அமைந்த மகர குண்டலங்கள் அவன் தோள்களின் மேல் படிந்து ஒளி வீசின. கருங்கடலிலிருந்து ஒரே சமயம் பத்துக் கதிரவன்கள் தோன்றியது போன்று கருமையான இராவணன் தலைகளை அலங்கரித்தன மணிமகுடங்கள். இவற்றின் ஒளியால் அந்த இரவும் பகற்பொழுது போலாயிற்று.

அவனுடைய உடைவாளைக் கையிலேந்திப் பின் வந்தாள் தேவலோகத்துப் பேரழகி ஊர்வசி; விரும்பும் சமயம் வெற்றிலை மடித்துக் கொடுக்கத் தயாராக அருகில் வருகின்றாள் மேனகை; அசோகவனத்தில் நுழைந்தவுடன் அவன் கழற்றிய செருப்புகளைத் தன் கைகளில் தாங்கி வந்தாள் திலோத்தமை. அவன் பூசியிருந்த வாசனைத் திரவியங்களின் நாற்றம் திசை யானைகளின் மூக்குகளைத் துளைத்தது. நறுமணம் கமழும் நெய் விளக்குகளை ஏந்திய வண்ணம் எட்டு வரிசைகளில் இராவணன் அருகில் சென்றனர் தேவமாதர்கள். அவர்கள் காலில் அணிந்திருந்த சிலம்புகளும், இடையில் அணிந்திருந்த மேகலைகளும் இன்னிசை எழுப்பின. அவர்கள் மேனியை அழகுசெய்த அணிகலன்கள் மின்னொளி வீசின. பால் போலும் வெண்ணிறமுடைய அன்னப் பறவைகள் இனிமையான ஒலிகளை எழுப்பிக்கொண்டு பவனி வருவதுபோன்று மங்கையர் கூட்டம் இராவணனைச் சூழ்ந்து மழலைமொழிகளை இசைத்துக்கொண்டு சென்றது.

நீலநிறமுடைய குன்றிலிருந்து வெண்மையான அருவி ஒன்று வீழ்வது போன்று கருநிறமுடைய இராவணன் மார்பில் வெண்பட்டாடை அங்கவஸ்திரம் தொங்கிற்று. கருக்கொண்ட மேகத்தைக் கிழித்து கொண்டு ஒளிரும்மின்னல் போன்று அவன் மேனியைப் பூணூல் அலங்கரித்தது. இருபது தோள்களிலும் அணியப்பெற்ற, மகரமீனின் வாய் வடிவமாக, வைரக் கற்கள் பதித்துச் செய்யப்பட்ட தோள்வளைகளின் ஒளி விண்மீன்களை எள்ளி நகையாடியது. வழியில் எதிர்ப்படும் சுற்றத்தாரைப் பார்த்துப் புன்னகை செய்வதால் பத்து முகங்களும் தாமரை போன்று விளங்கின. கருப்பு மலையில் கதிரவன் ஒளிபட்டால் எப்படி இருக்குமோ அது போன்று அரக்கர்கோனின் இடையில் பொன்னிறமான பட்டாடை கட்டப்பட்டுத் தழையத் தழையத் தொங்கிக்கொண்டிருந்தது. இருபது கைகளிலும் உள்ள விரல்களில் அவன் அணிந்திருந்த மோதிரங்களின் அழகு தேவலோகத்துக் கற்பகச் சோலையை நினைவுபடுத்தியது. யுகமுடிவில் எஞ்சியிருக்கும் மேருமலையில் அழியாத விண்மீன்கள் தொத்திக்கொண்டிருப்பன போன்று இராவணன் மார்பில் அணிந்திருந்த சன்னவீரம் என்ற வாகை மாலையில் ரத்தினங்களும் மணிகளும் முத்துக்களும் பதிக்கப்பட்டிருந்தன.

சிங்கத்தின் காலடிச் சுவடுகளைக் கண்டு அஞ்சும் யானை போன்று திசை யானைகள் தம்மை மீண்டும் ராவணன் அடக்க வருகின்

ரன் என்று நினைத்து அவன் வரவைக் கண்டு அஞ்சி நடுங்கின. மலையைச் சூழ்ந்துகொள்ளும் மயில் கூட்டம் போன்று ராவணனை யட்சகன்னி யரும், சித்தமாதரும், அரக்கியரும், அரம்பை யரும், வித்யாதர மகளிரும், நாக மடந்தையரும் சூழ்ந்து வந்தனர். இவர்களெல்லாரும் ராவ ணனைச் சூழ்ந்துகொண்டு சும்மா வரவில்லை யாம். புல்லாங்குழல் ஓசைக்கு ஏற்ப வாய்ப் பாடலும், அதற்கேற்பக் கின்னரயாழின் இசை யும், சில்லரி, பாண்டில் முதலிய இசைக்கருவி களிலிருந்து எழும் ஓசையும் ஒத்து இயைந்து இசை வெள்ளமாகப் பாய்ந்து வந்து கொண்டி ருந்ததாம். இந்த இசையைக் கேட்டால் கொடிய விஷமுள்ள நாகமும் தன் விஷத்தை மறந்து அமுதத்தைக் கக்குமல்லவா? எனவே இசை நாட்டமும் அழகியல் உணர்வும் உள்ள சீதையின் இதயத்தை இந்த இசை கவர்ந்து தன்பால் ஈர்க்கும் என்று எண்ணினன் போலும் இலங்கேசன்.

2. பொன்மான் உருவங்கள் :

மலர்கள் கொண்டு தொகுக்கப்பட்ட சதுர மாக அமைந்த விதானம், வெண்சாமரைகள், ஆலவட்டங்கள் முதலிய அரசர்க்குரிய கருவி களைத் தாங்கி அழகிய மகளிர் கார்கால மேகத் தைக் கண்டு மகிழும் மயில்களென ராவண னுடன் சென்றனர். பொன்னை உருக்கிச் செய்யப்பட்ட மான் உருவங்களையும் இவர்கள் கைகளில் ஏந்திச் சென்றனர். சீதையின் சிந் தையைக் கவர்ந்து இழுக்கத் தசமுகன் செய்த தந்திரம் போலும். யாழும் மத்தளங்களும் ஒலிக்க, இசையுடன் பாடும் பாடலுக்கு ஏற்பத் தேவ மகளிர் நடனம் ஆடியவண்ணம் வந்தனர். காமநோயினல் வாடிக்கொண்டிருந்த ராவண னைச் சந்திரன் ஒளியும், தென்றலும் மிகுதியாக வருத்தின. அவன்மீது மோகம் கொண்ட மங்கையரின் பார்வைக் கணைகள் அவன் மார்பி லும் தோள்களிலும் தாக்கின. பெண்கள் வெண்சாமரம் விசிக்கொண்டு வந்தது கருநிற மலையின்மீது வெண்ணிறப் பாற்கடலின் அலை மோதி அடியது போன்றிருந்தது. கடலி லிருந்து தோன்றும் வெண்மதி போன்று ராவணன் தலைக்குமேல் மகளிர் வெண்கொற்றக் குடைபிடித்து வந்தனர். ராவணன் விரும்பிய வர்க்கு அன்பளிப்பாகக் கொடுப்பதற்குத் தயா ராகப் பல பொருட்களை ஏந்திக்கொண்டு கற்ப கத் தருவும், சங்கநிதி முதலிய நவநிதிகளும் பின் தொடர்ந்தன.

ராவணன் பாதங்களை மண்ணில் அழுத்தி நடந்து வந்ததால் அந்த அழுத்தம் இலங்கை யையே அழுத்திக் கடல்நீர் ஊரினுள் புகும்படி செய்தது; அதனல் பூமியைத் தாங்கும் ஆயிரம் தலைகளையுடைய ஆதிசேடனே நெளிந்து கொடுத்தான். நீராரும் கடலுடுத்த நிலமடந்தை வலி தாங்காமல் அலறினள். தாடகை போன்று பன்மடங்கு வலிவு பெற்ற அரக்கியர் பெரும் மலைகளையும் தாங்கும் வலிமை பொருந்திய கைகளில் பரிசை, மழு, கோடரி, இருப் புலக்கை, திரிசூலம், அங்குசம், இரும்பினல் ஆன நெருஞ்சிமுள், கேடயம், வாள் இவற்றை ஏந்தி, எத்தகைய பகைவரையும் அழிக்கவல்ல வர்களாக அரக்கர்கோமானுடன் வந்துகொண் டிருந்தனர்.

'உறக்கத்தினிடையில் ஏதோ சிந்தனை வயப் பட்டுச் சீற்றத்துடன் எழுந்து வரும் ராவணன் கோபம் அசோகவனச் சீதையுடன் நின்று போகுமா? அல்லது வேறு யார் யாரையெல் லாம் தாக்கும்? இவனுடைய நோக்கம்தான் என்ன?' என்றெல்லாம் நினைத்து நினைத்துக் குழப்பமடைந்து பயத்துக்குள்ளான இந்திரன் முதலிய தேவர்கள் தங்கள் இமையா நாட்டமும் இமைக்கும்படி வியப்புற்று நின்ற னர். சீதையின் மேற்கொண்ட காமத்தாலும், அக்காமம் நிறைவேருததால் ஏற்பட்ட கோபத் தாலும் ராவணன் விட்ட பெருமூச்சு எரி மூச் சாகி அசோகவனத்திலுள்ள உயர்ந்தரக மரங் களையும் எரித்துக் கருக்கியது. தன் மணியை இழந்த நாகம் அங்குமிங்கும் ஓடித்தேடுவது போன்று, சீதையிருக்குமிடம் தெரிந்திருந்த போதிலும் காமத்தினல் ஏற்பட்ட குழப்பத் தினல் அவளை அசோகவனத்தில் அங்கும் இங்கும் தேடி இறுதியில் சீதையிருக்கு மிடம் நோக்கி வந்து சேர்ந்தான் ராவணன். அப்படி வரும் முன்னர் தன்னுடன் வந்த பரி வாரங்களை எல்லாம் சற்றுத் தூரத்திலேயே நிறுத்தி வைத்துவிட்டுத் தான் மட்டும் தனி யாக வந்தான் தசகண்டன்.

3. வில்லேந்தாத மன்மதன் :

ராவணனின் அசோகவன விஜயத்தை இவ்

வளவு விரிவாக வான்மீகி பேசவில்லை. ஆனுலும் அவருக்கே உரிய இலக்கிய நயத்துடன் இந்தக் காட்சியைப் படம் பிடித்துக் காட்டுகின்றார் முனிவர் பெருமான்:—

நழுவிய மாலைகளையும் ஆடைகளையும் அணிந்தவனுகக் காமனுல் தூண்டப்பட்டு, மடந்தையர் கூட்டம் பின் தொடரச் சீதையிருக்குமிடம் வருகிருன் ராவணன். வெண்சாமரம் ஏந்தியவர்களும், பொன் விளக்குகளை ஏந்தியவர்களும், விரிப்புக்களை எடுத்து வருபவர்களும் அவனுடன் சென்றனர். ஒரு பெண் தீர்த்தம் நிறைந்த ரத்தினக் குடத்தை வலக் கையில் தாங்கிச் சென்ருள். தங்கப் பிடியுள்ள நிலவு போன்ற வெண்கொற்றக் குடையைப் பிடித்து வந்தாள் ஒருத்தி. தூக்கம் கலையாத கண்களுடன் மேகத்தை மின்னற்கொடிகள் தொடர்வன போன்று அவனுடைய பத்தினிகள் பின் தொடர்ந்து வந்தனர். தூக்கம் தடைப்பட்டு அவசரமாக அவனுடன் வரநேரிட்டதால் மாலைகளையும்,தோள்வளைகளையும் மற்ற நகைகளையும் மேனி அங்கங்களில் மாற்றி மாற்றி அணிந்திருந்தனர் அம்மகளிர். தள்ளாடுகின்ற நடையுடனும் கலைந்த கூந்தலுடனும் அந்த ராவண பத்தினிகள் கர்வத்துடனும், காமத்துடனும் அவனைப் பின் தொடர்ந்தனர். நிகரற்ற செயல் திறனுடையவனும், நினைத்தற்கரிய ஆற்றலும் ஆண்மையும் உடையவனும், காமம் அஹங்காரம் நிறைந்து உள்ளவனும், வில்லேந்தாத மன்மதனைப் போன்றவனுமான ராவணன், தன்தோள்களிலிருந்து நழுவித் தோள்வளையில் மாட்டிக்கொண்ட, கறந்த பாலின் நுரை போன்ற வெண்ணிறப்பட்டு வஸ்திரத்தை ஒய்யாரமாக இழுத்துக்கொண்டு சீதை இருக்கும் மண்டபத்தை நெருங்கினுன் என்பார் வான்மீகிமுனிவர்.

ராவணனுடைய பத்தினிகள் அவனுடன் அசோகவனத்திற்கு வந்தார்கள் என்று வான்மீகி கூறுவது குறிப்பிடத்தக்கது. கம்பன் இதுபற்றிக் கூறவில்லை. தேவமகளிரும் அரக்கியரும் உடன் வந்ததாகக் கூறுவானே தவிர ராவணன் மனைவியர் வந்ததாகக் கம்பன் கூறவில்லை.

4. கருடனும் பாம்பும்:

வான்மீகியில் ராவணன் சீதையிடம் காதற்பிச்சை கேட்பதைப் பார்த்துவிட்டுக் கம்பனுக்கு வருவோம்.

ராவணன் அருகில் வந்ததும் அனுமன் இலைகளுக்கு இடையில் தன்னை மறைத்துக்கொண்டு அங்கு என்ன நடக்கின்றது என்று ஆவலுடன் பார்க்கத்தயாரானுன்.

ராமனையே மனத்தில் நினைத்துக்கொண்டிருக்கும் சீதாதேவியைப் பார்த்துத் தன் அழிவின் பொருட்டு ராவணன் காமம் மேலிட்டவனுய் அவளிடம் பேசலுற்ருன். அவனைக் கண்டதும் பெருங்காற்றல் அலைக்கழிக்கப்பட்ட வாழை இலைபோன்று சீதைநடுங்கினுள். அவ்வாறு நடுங்கும் நங்கையிடம் தன் கருத்தை ஜாடைகளுடன் கூடிய இனியமொழியில் எடுத்துரைக்கின்ருன் இலங்கேசுவரன்:—

“பெண்மணியே! என்னைப் பார்த்ததும் ஏன் உன் மேனியை மறைத்துக் கூனிக் குறுகிக் கொள்கின்ருய்? சர்வலோகத்திலும் உன் போன்ற இனியவளை நான் கண்டதில்லை. உன்னை வேண்டுகின்றேன். என்னைக் கௌரவப்படுத்து. காமநோக்குடைய அரக்கனே மனிதனே இங்கில்லை. என்னிடம் நீ பயப்பட வேண்டாம். பிறர் மனைவியைக் கவர்வதும், பலாத்காரமாகச் சேர்த்துக் கொள்வதும் அரக்கர் குலதர்மத்திற்கு முரணுனதில்லை. அப்படியிருந்தும் உன்னிடம் நான் பலாத்காரத்தைக் கைக்கொள்ளவில்லை; மன்மதனுல் எல்லையற்ற துன்பத்திற்கு ஆளான போதும் கூட உன்னிடம் முரட்டுத்தனமாக நான் நடந்து கொள்ளவில்லை. நீயாக விரும்பினுல் ஒழிய உன்னை நான் தொடமாட்டேன்! இதில் உனக்குச் சிறிதும் சந்தேகம் வேண்டியதில்லை. இவ்வளவு தூரம் உன் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுத்து நடக்கும் என்னை நம்பி என்மீது நீ அன்புகாட்டக் கூடாதா?

“பேரழகியே! இந்தச் சோகம் உனக்குப் பொருத்தமானதன்று. சடைதிரித்த கூந்தலும், வெறுந்தரையில் படுக்கையும், அழுக்கடைந்த ஆடையும், அல்லலுற்று அழுதலும், அனுவசியமாகப் பட்டினி கிடப்பதும் உனக்கு ஏற்றவையல்ல. உன்னிடம்இருக்கும் இந்த அருமையான இளமைப் பருவம் வீணுக வேகமாகக் கழிந்து கொண்டு போகின்றது. ஆற்றில் ஓடும் நீர் போன்று கழிந்த இளமை திரும்பி வராது!

உன்னைவிட மேலான அழகியை நான் பார்த்ததில்லை. உன்னைப்படைத்துவிட்டு அந்தப்பிரமன் தன்படைப்புத் தொழிலையே விட்டுவிட்டான் போலும். அது மட்டுமா? அந்தப் பிரமன்கூட இப்போது உன்னைப் பார்த்தால் மனம் பேதலிப்பான் என்பதில் சந்தேகம் இல்லை.

'என்னுடைய அந்தப்புரத்தில் வாழும் பத்தினியர்க்கு நீ தலைவியாவாயாக. இந்த அரசினையும், ஈரேழு பதினுன்கு உலகங்களிலிருந்தும் நான் கொண்டுவந்த செல்வங்களையும் உன் பாதகமலங்களில் சமர்ப்பிக்கின்றேன். என் நாடும் செல்வமும் உன்னுடையவையான தால் உன் விருப்பப்படி தான தர்மங்கள்செய்யலாம். உன் உறவினரும் அதனல் பயனடையட்டும். உன் தந்தையான ஜனகனுக்கு இன்னும் பல நாடுகளை ஜெயித்துக் கொடுக்கின்றேன். எனக்கு நிகரான வீரன் இந்நிலவுலகில் யாருமில்லை. உனக்கும் உன் தந்தைக்கும் உன் உறவினருக்கும் வேண்டிய வசதிகளை நீ இந்த இலங்கையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். இதை விட்டுவிட்டு மரவுரிதரித்த மானுடனை ராமனுடன் சேர்ந்து நீ என்ன பலன் அடையப் போகின்றாய்? ராமன் வெற்றி அழிந்தவன்; செல்வம் இழந்தவன்; காட்டில் கனி கிழங்குகளை உண்டு வாழும் தவசி. தரையில் படுப்பவன்; உன்னைக் கண்டுபிடிக்கவோ காப்பாற்றவோ சக்தியற்றவன்; உன்னை மீட்பது பற்றி அவன் நினைத்துக்கூடப்பார்க்கமுடியாது! மேலும் அவன் தற்போது உயிருடன் இருக்கின்றானே என்னவோ?

"ஜானகி! கருடன் பாம்பினைக் கவர்வது போன்று என்னை நீ கவர்ந்திருக்கின்றாய்! அலங்காரமற்ற இந்த நிலையில் உன்னைப் பார்த்தும்கூட என் மனம் என் பத்தினியரை நாடவில்லை. என்னுடைய பத்தினியரெல்லாம் உனக்குப் பணிவிடை செய்வார்கள். தேஜஸிலும், புகழிலும், செல்வத்திலும், தவத்திலும், வீரத்திலும், ஆண்மையிலும இராமன் எனக்கு நிகராகமாட்டான். அவனை மறந்துவிட்டு உன் உற்றார் உறவினருடன் எழில்மிகுந்த இந்த இலங்கை நகரில் இன்பமாக வாழ என்னுடன் வருவாயாக!"

—வால்மீகி ராமாயணம், சுந்தரகான்டம், [சர்க்கம் 20.]

பெண்டிரைத் தன்வசப்படுத்துவதில் இராவணன் வல்லவன் என்பது அவனுடைய பேச்சிலிருந்து நன்கு தெளிவுறும். எந்தெந்த விஷயங்களில் பெண்கள் முதலில் தங்கள் மனத்தைப் பறிகொடுத்துப் பின்னர் தம்மையே பறிகொடுத்து விடுகின்றார்கள் என்பதை இலங்காதிபதி நன்கு தெரிந்துவைத்திருக்கின்றான். முதலில்சீதையின் மேனி அழகைப் புகழ்கின்றான்; ஆடைஅணிகலன்கள் அளிப்பதாக ஆசையூட்டுகின்றான்; அவளுடைய தந்தையையும் சுற்றத்தாரையும் நன்கு கௌரவப்படுத்துவதாக வாக்களிக்கின்றான்; பின்னர் ராமனின் இழிநிலையையும் ஆற்றாமையையும் வீழ்ச்சியையும் விரித்துரைக்கின்றான்; சீதை மீண்டும் ராமனுடன் சேர்வது இயலாதது என்பதை உறுதிப் படுத்துகின்றான்; இறுதியாகத் தன்னைச் சீதை கவனித்துக்கொண்டால் அவள் உறவினரைத் தான் கவனித்துக்கொள்ள இலங்கையில் நல்ல வாய்ப்பு இருக்கின்றது என்பதை நினைவூட்டுகின்றான்; அழகைப் பாராட்டுதல், பெரிதாக ஆசை காட்டுதல், சிறிது அச்சமூட்டுதல் இவை கலந்து அமைகின்றது அரக்கர் கோனின் உரை.

இராவணன் பேச்சில் கருடன் பாம்பினைக் கவர்வது போன்று தன் மனத்தைச் சீதை கவர்ந்துகொண்டுவிட்டதாகக் கூறுவது குறிப்பிடத்தக்கது. கருடன் பாம்பினைக் கவர்வது பாம்பின் மேலுள்ள ஆசையினல் அன்று. எனவே, இராவணன் தன்னைப்பாம்பிற்கும் சீதையைக் கருடனுக்கும் ஒப்பிடுவதன் மூலம் சீதையினல் தனக்கு அழிவு நிச்சயம்என்பதைத் தன்னையும் அறியாமல்வெளியிட்டுவிடுகின்றான்.

5. புலியும் மானும்:

இராவணன் தன் மனக் கிளர்ச்சியைச் சீதையிடம் வெளிப்படுத்திய விதத்தை ஆதிகவி எவ்வாறு விவரிக்கின்றார் என்பதைக் கண்டோம். இனி, இதே காட்சியில் கம்பன் தன்னுடைய இராவணனை எவ்வாறு பேசவைக்கின்றான் என்பதைப் பார்ப்போம்.

ஆடம்பரத்துடன் அசோகவனத்துள் நுழைந்த அரக்கர்கோன் பரிவாரங்களைத் தூரத்தில் நிறுத்திவிட்டுத் தான்மட்டும் சீதையிருப்பிடம் நோக்கி வருவதைப் பார்க்கின்றான் அனுமன். அவன் மனம் திகைக்கின்றது;

நெஞ்சம் வேகமாக அடித்துக்கொள்கின்றது. என்ன நடக்கப்போகின்றது என்று தெரிந்து கொள்ளும் ஆவலுடன் இன்னும் சற்று நெருங்கி மரத்தின் இலைகளுக்குள் தன்னை நன்கு மறைத்துக்கொண்டு ராவணனையும் சீதாபிராட்டியையும் கவனிக்க வசதியாக அமர்ந்துகொண்டான். அவன் வாய் ராம நாமத்தை உச்சரித்துக் கொண்டேயிருந்தது.

தன்னைக்கொல்லவரும் புலியைக்கண்டு நடுங்கும் மான்போன்று சீதை நடுங்கினள்; கவர்ந்து வந்த மானைப் புசிப்பதற்கு வரும் புலிபோன்று வந்தான் ராவணன். 'புன்செயல் அரக்கன் புண்ணிய மூர்த்தியின் தேவியைத் துன்புறுத்த வருகின்றான்; அவன் சொல்லை அவள் கேட்கப் போவதில்லை; பின்னர் அவன் என் செய்வான்? ஒருவேளை அவளைக் கொன்றுவிடுவானோ?' என்று ஊசலாடும் உள்ளத்துடன் அனுமன் அவர்கள் இருவரையும் இமைகொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தான். இந்தக் காட்சியில் வரும் மூன்றுபேர்களுடைய மனநிலைகளையும் நம் கண்முன் கொண்டுவந்து நிறுத்துகின்றான் கவிச்சக்ரவர்த்தி:—

"கூசி ஆவி குலைவுறு வாளையும்,
ஆசையால் உயிர் ஆசு அழிவானையும்
காசுஇல் கண்இணை சான்று எனக்கண்டனன்
ஊசல் ஆடி உளையும் உளத்தினன்".

—சுந்தர காண்டம் நிந்தனைப் படலம்: 22

[கூசி ஆவி குலைவுறுவாள்-ராவணனால் தனக்குத் தீங்கு நேருமோ என்று பயந்து உயிரும் உடலும் நடுங்கிக்கொண்டிருக்கும் சீதை. ஆசையால் உயிர் ஆசு அழிவான்-சீதையின்மேல் வைத்த காமத்தால் தன் உயிரின் உறுதிகுலைந்து போன ராவணன்; காசு இல் கண் இணை சான்று-குற்றமற்ற தன் இரு கண்களே சாட்சியாக; ஊசல் ஆடி உளையும் உளத்தினன்-என்ன நடக்கப் போகின்றது என்று தத்தளிக்கின்ற மனமுடைய அனுமன்.]

ராவணனும் சீதையும் தங்கள் உயிர்போகும் வண்ணம் நடுங்குகின்றார்களாம். கயவனின் காமக்கண்களின் பார்வை ராமபிரானுக்குரிய தன்மேனிமீது படுகின்றதே என்று சீதையின் ஆவி துடித்தது. சீதையின் மேலுள்ள காமம் என்ற நோய் ராவணனின் உயிர் நிலையைத் துடிக்கச் செய்தது. இவ்விருவர்களின் நடுக்கத்தை மறைவிலிருந்து அனுமன் இமை கொட்டாது பார்த்துக்கொண்டிருந்தான். இவ்விருவரையும் பார்த்துக்கொண்டிருந்த அனுமன் உள்ளம் துடிதுடிக்க ராம நாமத்தை ஓதிய வண்ணம் அரக்கனின் இந்தத்தீய சோதனையினின்றும் சீதை தப்பித்துக்கொள்ள வேண்டுமென்று வாழ்த்தினன்.

"வாழி ஜானகி! வாழி ராகவன்!
வாழி நான்மறை! வாழியர் அந்தணர்!
வாழி நல் அறம்! என்றென்று வாழ்த்தினன்
ஊழிதோறும் உயர்வுறும் சீர்த்தியான்"

—சுந்தர காண்டம் நிந்தனைப்படலம். 23

[ஊழிதோறும் உயர்வுறும் சீர்த்தியான்-எல்லா யுகங்களிலும் ஓங்குகின்ற புகழையுடைய அனுமன்.]

'சீதையின் வாழ்வு என்பது அறத்தின் வாழ்வு' என்பது அனுமன் கொள்கை. அறவாழ்வு, போக வாழ்வு என இருவகை வாழ்க்கை உண்டு. பெரும்பாலான மக்கள் போகவாழ்வு வாழ்பவர்களாக இருக்கிறார்கள். சிற்றின்பமே நிலையானது என்று எண்ணுபவர்கள் போகவாழ்வில் நாட்டமுடையவர்களாக இருக்கிறார்கள். சிற்றின்பத்தைத் துச்சமென ஒதுக்குபவர்களே போகத்தைத் துறக்கமுடியும். போகத்தைத் துறந்தவர்கள் அறவாழ்வில் ஈடுபடுகின்றார்கள். அறவாழ்வு வாழ்பவர்கள் மிகச் சிலரே. போகத்தைத் துறந்து அறவாழ்வில் நாட்டம் உடையவர்கள் பேரின்பத்துக்குரியவராகின்றனர். அறம் வளர்வதற்கு அறவாழ்வு உடையவர்கள் ஓங்கவேண்டும். அறவாழ்வு உடையவள் சீதை. எனவே சீதை வாழ்க என்று அனுமன் வாழ்த்துகின்றான். சீதை வாழ்ந்தால் ராமன் வாழ்வான்; இருவரும்வாழ்ந்தால் மறைகள் வாழும்; மறைகள் வாழ்ந்தால் அவற்றை ஓதும் அந்தணர் வாழ்வர்; இவர்களெல்லாரும்வாழ அறம்வாழும். எனவே சீதையின் வாழ்வு எல்லாவற்றிற்கும் அடிப்படையாக அமைந்துள்ளது என்பதைக் கம்பன் தொடர்புபடுத்திக் காண்பிக்கும் நயம் பாராட்டத்தக்கது. மனதில் இவ்வாறுவாழ்த்திவிட்டுத் தன் கண்முன் நடைபெறப்போகும் நாடகத்தைக் கவனிப்பதற்குத் தன் கண்களையும் செவிகளையும் கூர்மையாக்கிக்கொண்டான் அனுமன்.

பாரதப் பண்பு

(திருவேடகத்தில் ராஷ்ட்ரீய ஸ்வயம் சேவா சங்கம் நடத்திய பயிற்சி வகுப்பில் ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் நிகழ்த்திய அருளுரையும், ஆசி உரையும், வினா-விடைகளும்)

(400 ஆம் பக்கத் தொடர்ச்சி)

4. கேள்வி: சிறுபான்மையினரால் நடத்தப்படும் கல்வி இயக்கங்கள் (Minority Institutions) அவர்கள் இஷ்டப்படி நடக்கின்றன. ஆனால் ஹிந்துக்களால் நடத்தப்படும் கல்வி இயக்கங்களுக்குத் தடங்கல்களும் முட்டுக்கட்டைகளும் போடப் படுகின்றன. இதற்கு என்ன செய்யலாம்?

விடை: நீங்கள் சொல்லுகின்ற முட்டுக் கட்டைகளுக்கு நாங்களும் இலக்காகத்தானிருக்கின்றோம். சிறுபான்மையினருக்குச் சலுகை காட்டுவது உண்மையான சலுகையன்று. அரசியல் வாதிகள் தங்களுடைய சுயநலத்திற்காக, ஓட்டு வேண்டுமென்பதற்காகச் செய்கின்றார்கள். இது தர்மமன்று. சிறு பான்மையினரைப் பாதுகாப்பது தர்மம். இந்தப்பாதுகாப்பு பெரும் பான்மையினருக்கு உபத்திரவமாக இருந்தால் அது தர்மமாகாது. இன்றைக்கு நமது நாட்டிலுள்ள அரசாங்க முறையே நமக்கு ஏற்றதன்று. பொருந்தாத அரசாங்க திட்டத்தை நாம் வகுத்து வைத்திருக்கின்றோம். இதனால் நாளுக்குநாள் சீர்கேடுதான் அதிகமாகின்றது. இந்தச் சீர்கேட்டுச் சூழ்நிலைகளுக்கிடையே பெரும்பான்மையாக இருக்கின்ற நாம் எப்படியோ தாக்குப் பிடிக்கின்றோம். விமோசனம் ஒரு நாளைக்கு வரும். நன்மையைக் கடைப்பிடி என்கிற கோட்பாட்டின்படி பிரதிகூலமான சூழ்நிலையிலும் நல்லதைச் சாதித்து வருவோம்.

5. கேள்வி: ஹிந்துக்களையெல்லாம் ஒற்றுமைப் படுத்துகிற நம்முடைய ஆர். எஸ். எஸ். இயக்கத்திற்கெதிராக அரசியல் கட்சிகள், அரசு, இவர்களெல்லாரும் பிரச்சாரம் செய்வதினால் சிலர் நம்முடைய இயக்கத்தோடு நெருங்கித் தொடர்பு கொள்ளவும், உதவி செய்யவும் பயப்படுகிறார்கள். இந்தப் பயத்தை எப்படிப் போக்குவது? எப்படிப் புரியவைப்பது?

விடை: பயப்படுகின்றவர்கட்குப் பயப்படாதவர்கள் முன் மாதிரியாக இருந்து காட்ட வேண்டும். இதில் வந்துள்ள இத்தனைபேர்கள் பயங்கொள்ளிகள் அல்ல. பயப்படுவதற்கு ஒன்றும் கிடையவே கிடையாது. பயத்திற்கெல்லாம் அடிப்படைக் காரணம் அறியாமை. ஆர். எஸ். எஸ். இயக்கத்தில் நாட்டின் நலன் இருக்கிறதேயன்றி கேடு ஒன்றும் கிடையாது. ஆகையினால் படிப்படியாக உங்களுடைய வாழ்க்கையின் மூலமாக நலத்தை விளக்குவீர்களானால் அதற்கு நிகரான பிரச்சாரம் கிடையாது. இது வாக்கியத்தில் மட்டும் இருக்கக் கூடாது. நீங்கள் நாட்டுக்குப் பண்ணுகிற பணி, நீங்கள் நடந்து கொள்ளுகிற வாழ்க்கை முறை, கட்டுப்பாடு இவற்றையெல்லாம் காட்டினால், இவ்வளவு நல்ல முறையில் நடக்கும் இயக்கத்தில் நாமும் ஏன் சேர்ந்து கொள்ளக் கூடாதென்று இன்னும் கூட்டம் வரும். நீங்கள் பண்ணுகிற சமுதாய சேவையே உங்களுடைய பண்பாட்டிற்கு எடுத்துக் காட்டாக இருக்க வேண்டும். எதிர்ப் பிரச்சாரமெல்லாம் சூரியனைக் கண்ட பனி போல் மறைந்து பட்டுப் போகும். உங்களுடைய பண்பும் பணிவிடையும் என்றைக்கும் முன்மாதிரியாக நிற்கும். ஆகையினால் சோதனைகள் உங்களுடைய தரத்தை விளக்கிக் காட்டுவதற்கு வருகின்றன. துணிவுடன் அச்சமில்லாத பாங்கில் நலத்தில் ஈடுபடுங்கள். நல்ல முறையில் தொண்டு புரியுங்கள். நலன் என்றைக்கும் விருத்தியடையும். ஆதார மற்ற பிரச்சாரம் என்றைக்கும் அழிந்துபட்டுப் போகும். நலத்துக்கு ஒரு நாளும் கேடு வராது.

6. கேள்வி: பொதுவாக ஹிந்து சமுதாயத்திற்கு வேலை செய்வது 'வகுப்பு வாதம்,' 'மதச்சார்பின்மைக்குப் புறம்பான'தென்று அரசியல்வாதிகள் கூறுகின்றார்கள். இது தவறு என்பதை எப்படிப் புரிய வைப்பது?

விடை: மதச்சார்பு இருப்பதில் தோஷமில்லை. மனிதன் ஏதேனும் ஒரு மதத்தைச் சார்ந்தேயிருக்க வேண்டும். அரசாங்கம் எந்த மதத்தையும் சார்ந்ததன்று. "சத்தியமேவ ஜயதே" என்பது நம்முடைய தேசிய லட்சியம். இது மதச் சார்பற்ற தத்துவத்தை அடிப்படையாகக்கொண்டது. இது உபநிடத வாக்கியம். 'தர்மசக்கரம்' நம்முடைய தேசியக் கொடியில்

இடம் பெறுகிறது. நலம் தருகிற மதங்களனைத் திற்கும் ஆதரவு தருவது ஹிந்து மதத்தின் சிறப்பு. அரசியல் வாதிகள் என்ன வேண்டு மென்றாலும் சொல்லிக் கொண்டிருக்கட்டும். மதத்தை நாம் தீவிரமாகக் கையாண்டுகொண் டிருப்போம். அதுதான் உலகில் உள்ள எல்லாக் கேடுகளுக்கும் சிகிச்சை. தேவாராதனைக்கு நிகராக மானுட சேவை செய்தால் எல்லா நலனும் உண்டாகும். யார் எதைப் பேசின லும் நாம் தீவிரமாகச் சமயத்தைக் கடைப்பிடிப் போம். அதுவே பரிகாரம்.

7. கேள்வி : சங்கத்தின் நடைமுறைகள் குறித்து உங்களுடைய கருத்து என்ன ?

விடை : விவேகானந்தரின் கொள்கையை நடைமுறையில் செய்து வருவதால் இந்தச் சங் கத்திற்கு இடம் கொடுத்து வருகின்றோம். "பலமே வாழ்வு, பலஹீனமே மரணம்" இது சுவாமி விவேகானந்தரின் திட்டம். சங்கம் விவேகானந்தர் கண்ட கனவை நனவாக்கு கின்றது. உடல், மனம், அறிவு மூன்று துறை களிலும் இங்கு பயிற்சி அளிப்பதால் இது 'மனிதர்களை' உருவாக்குகின்ற திட்டம். (Man Making Mission) எனவே இதற்கு முன் திருப்பராய்த்துறையிலும் இடம் கொடுத்தோம். இப்பொழுதும் இடம் கொடுத்திருக்கின்றோம். எப்பொழுதும் எந்த உதவியையும் ஆர். எஸ். எஸ். சங்கத்துக்குச் செய்யத் தயாராக இருக்கின்றோம்.

8. கேள்வி : அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம். இது நம்முடைய அடிப்படை நம்பிக்கை. சங்கத்திற்கு வந்து தேசபக்தி வளர்ந்த பிறகு முழுநேர ஊழியனாக ஆக வேண்டுமென்ற துடிப்பு ஏற்படுகின்றது. தாய் தந்தையர் மறுக்கின்றார்கள். என்னசெய்வது?

விடை: "மாத்ரு தேவோ பவ, பித்ரு தேவோ பவ, ஆசார்ய தேவோ பவ" இவையெல்லாம் வேத வாக்குகள். தாய் தந்தையரைத் தெய்வ சொரூபமாகக் கருதுதல் மிகவும் முக்கியம். பக்தி அன்னையிடத்துத் துவங்குகின்றது. ஆனால் அங்கேயே முடிவுபெறக் கூடாது. மாத்ருபக்தி ஏனைய பக்திகளுக்கு இடைஞ்ச லாக வரக்கூடாது. தக்க தருணத்தில் தாயன்பு, தந்தையன்பு, அதற்கு மேல் சென்று பொதுமக்களன்பு, நாட்டுமக்களன்பு இவைகள் வளர்ந்து வரவேண்டும். இதற்கு இடைஞ்சல் பண்ணுகின்றவர்கள் விவேகிகள் அல்லர். தக்க முறையில் அவர்களுக்குச் சமாதானம் சொல்லி விட்டு அவர்களை மீறிப்போனால் குற்றமாகாது. இதற்கு அனுமதி என்னவென்றால், தாயைமீறி நடந்தான் பரதன். அது மட்டுமன்று; இராம னைக் காட்டுக்கு அனுப்பியதற்காகத் தாயின் மீது தீவிர நடவடிக்கை எடுக்கின்றான். தந்தை சொல்லை மீறி நடந்தான் பிரகலாதன். தமை யன் சொல்லை மீறி நடந்தவன் விபீஷணன். கடவுள் நாட்டம் பண்ணுகின்றவர்கள், பெற் றோரை மீறிநடப்பது குற்றமாகாது. கால மெல்லாம் தாய் தந்தையரோடு வாழ்ந்திருப்பது வாழ்க்கையின் குறிக்கோளன்று. அந்தப் பரு வம் தாண்டிய பிறகு, அறிவு வாய்ந்த தாய் தந்தையரே மக்களைப் பெரிய காரியத்திற்கு அனுப்பிவைக்க வேண்டும். அந்தப் பரிபாகம் அவர்களுக்கு வராதிருந்தால், அவர்களை ஆயத் தப்படுத்துவது மக்களுடைய கடமையாகின் றது. தக்க விவேகத்தைப் புகட்டி அவர்களிட மிருந்து பிரிந்து பழகுவதுதான் சரியானமுறை.

9. கேள்வி : ஆர். எஸ். எஸ். வளர்ச்சியடைய தங்களுடைய ஆலோசனை என்ன ?

விடை: ஒரு லட்சியத்தை நாம் சரியாக அறிந்து கொண்டதற்கறிகுறி அதன்பால் நம்முடைய ஜீவிதத்தை ஒப்படைப்பது. பரமஹம்சர் ஒரு உவமானக் கதையின் மூலமாக இதனை விளக்கு கின்றார். பணக்காரன் ஒருவனிடம் விலை யுயர்ந்த வைரம் ஒன்றிருந்தது. அதை விற்பனை பண்ணுவதற்காக வேலைக்காரன் மூலம், மார்க் கெட்டுக்கு அதை அனுப்பி வைத்தான். கத்தரிக் காய் கடைக்காரன், அரிசிக் கடைக்காரன், ஜவுளி வியாபாரி ஆகியோர், முறையே இரண்டு கூடை கத்தரிக்காய், இரண்டு மூட்டை அரிசி, மூன்று மூட்டை ஜவுளி என அவரவர் அறிவுக் கேற்ற பிரகாரம் மதிப்புப் போட்டார்கள். ஆனால் வைர வியாபாரி அதற்கு இரண்டு லட்சம் ரூபாய் தருகின்றேன்; இது அற்புத மான வைரம்" என்றான். இதுபோன்றே பலர் தம்முடைய வாழ்க்கையில் குமாஸ்தாவாக வக்கீ லாக, டாக்டராக, இஞ்ஜினியராக இருக்கலாம் என்று மதிப்புப்போடுகிறார்கள். ஆனால் வாழ்க் கையைத் தெய்வத்தின்பால் ஒப்படைத்து, நாம் தெய்வீகமடைவதுடன் மற்றவர்களையும் தெய் வீகமடையச் செய்வதுதான் வாழ்க்கையைச்

சரியாகப் பயன்படுத்தி மதிப்பீடு செய்வதாகும். இதுவே விவேகம். சங்க உறுப்பினர்கள் இதன் தத்துவத்தை அறிந்துகொண்டு இதைத் தங்களுடைய ஜீவிதத்தின் மூலமாக மற்றவர்களுக்கு விளக்கவேண்டும். அகங்காரமில்லாமல், ஈசுவர சேவைக்கு நிகராக சமுதாயப் பணிவிடை செய்வோமானல் மற்றவர்களும் நம்முடன் வந்து சேர்வார்கள்.

10. கேள்வி: பிளவுபடாத நம்முடைய பாரத தேசம் இன்று பாகிஸ்தான், பங்களா தேசம் என்றெல்லாம் பிளந்துள்ளது. இதை நாம் மீண்டும் பெற என்ன செய்யவேண்டும்?

விடை: பாரதம ஐம்பத்தாறு தேசங்களாகப் பிரிந்து இருந்தபோதும் பண்புத்துறையில் என்றைக்கும் கைலாசத்தில் இருந்து கன்னியாகுமரி வரை ஒரே கோட்பாடு இருந்தது. அரசர்களும் ஆட்சி முறைகளும் பல்வேருக இருந்தாலும் பண்பில் ஒரே நாடாக இருந்து வந்திருக்கின்றது. வெள்ளையன் போகிற போக்கில் பிளவு படுத்தி வைத்துவிட்டுப் போனுன். நமக்கு வரவேண்டியது, பாக்கி இருப்பது பாக்கிஸ்தானம். நாம் தக்க முயற்சி எடுத்துக் கொண்டால், வலிவு படைத்தவர்களாவோமானல், ஏற்றகாலம் வருகின்றபொழுது கலபத்தில் நமது நாடு நம்முடையதாகவே ஆகப் போகின்றது. சந்தேகமே இல்லை. அதற்கு ஆயத்தப் படுத்துவதுதான் நம்முடைய கடமை. பாண்டவர்கள் தங்களுக்குரிய நாட்டை இழந்து பன்னிரண்டு ஆண்டுகள் வனவாசமும், ஓர் ஆண்டு அஞ்ஞாதவாசமும் செய்தார்கள். அக்காலத்தில் அவர்கள் தங்களைத் தவத்தின் மூலம் வலிவு படைத்தவர்களாக்கினுர்கள். அவர்களுக்குத் துரோகம் செய்த துரியோதனன் தன்னை எவ்வளவு பலப்படுத்தியும் கடைசியில் அழிந்துபோனுன். தர்மத்தைக் கடைப்பிடித்துத் தங்களை வலிவு வாய்ந்தவர்களாகச் செய்துகொண்ட பாண்டவர்கள் தங்களுக்குரிய நாட்டைப் பெற்ருர்கள். தர்மத்துக்கும், வலிவுக்கும் முன் பிரச்னைகளெல்லாம் விளையாட்டுப் போன்று தீர்ந்துவிடுகின்றன. இதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு நாம் நேர்மையும் வலிவும் படைத்தவர்களாவோமானல் பிரச்னைகளெல்லாம் விளையாட்டுப்போன்று தீர்ந்துவிடும். சர்வதேசப் பிரச்னை எழுமானுல், நமக்குத் தக்க வலிமை வருகின்றபொழுது, "அவர்களுக்குரியதை அவர்கள் எடுத்துக்கொள்கிருர்கள். நாம் ஏன் தலையிடவேண்டும்" என்று ஒதுங்கிவிடுவார்கள். அங்கிருக்கின்ற மக்களையும் நாம் கண்ணியமாக நடத்துவோம். இது நடக்கத்தான் போகின்றது. கவலைவேண்டாம். (முற்றும்)

பழனியாண்டவர் மலையில் ஐக்கியவழிபாடு

திரு. S. விசுவநாதன் அவர்கள் பிரான்ஸில் இருபது ஆண்டுகள் ஆசிரியராகப் பணிபுரிந்து ஒய்வுபெற்றபின் பாண்டிச்சேரியில் வசித்துவந்து 1975ஆம் ஆண்டு காலமாகிவிட்டார். அவர் தம் வாழ்நாளில் சம்பாதித்த சொத்து முழுவதையும் சத் காரியங்களுக்குப் பயன்படுத்தத் தீர்மானம் செய்து தபோவனத்திடம் ஒப்படைத்தார். அவர் ஒப்படைத்த சொத்திலிருந்து அவர் விருப்பப்படி கல்விக்காகவும், தர்மசக்கர சகாய சந்தாவுக்காகவும் தபோவனம் செலவு செய்துகொண்டிருக்கிறது. பழனியில் ஆண்டுதோறும் ஸ்ரீதண்டாயுதபாணி சுவாமிக்கு அபிஷேக ஆராதனையும், பக்தர்களுக்கு அன்னதானமும் செய்ய வேண்டுமென்பது அவருடைய விருப்பங்களுள் ஒன்ருகும். தபோவனம் இவ்வாண்டு முதல் அவருடைய இவ்விருப்பத்தை நிறைவேற்றத் திட்டமிட்டுள்ளது. இவ்வாண்டு நவம்பர் மாதம் 25ஆம் தேதி செவ்வாய்க்கிழமையன்று திருப்பராய்த்துறை குருகுல மாணவர்கள் அனைவரையும் பழனிக்கு அழைத்துச் சென்று ஸ்ரீ தண்டாயுதபாணி சந்நிதிமுன் ஐக்கியவழிபாடு செய்ய ஏற்பாடாகியுள்ளது. அன்று ஸ்ரீ தண்டாயுதபாணிக்கு அபிஷேகமும் ஆராதனையும் நிகழும். நண்பகல் உச்சிக் கால பூஜைக்குப் பின் பக்தர்களுக்கு உணவு வழங்கப்படும். அன்று நிகழும் ஐக்கியவழிபாட்டிலும், சமாராதனையிலும் கலந்துகொள்ளுமாறு அன்பர்களும், தாய்மார்களும் அன்புடன் அழைக்கப்படுகிருர்கள். பகல் 12 மணியிலிருந்து 1 மணிவரையில் ஐக்கியவழிபாடு நிகழும்.

ஸ்ரீ லலிதா வியாக்கியானம்-147

853. शान्त्यतीत कलात्मिका சாந்த்யதீத கலாத்மிகா — சாந்த்யதீதம் என்ற கலை வண்ணமாயிருப்பவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

சாந்த்யதீதம் என்பது ஆகாச தத்துவத்துக்குரிய கலையாகிறது. பஞ்சபூதங்களுள் முதல் பூதமாகவும் மிக சூட்சுமமாகவும் இருப்பது ஆகாசம். இது எங்கும் வியாபித்திருக்கிறது. இதன் தன் மாத்திரை ஓசை. ஆயினும் இந்த ஆகாசம் ஓசையற்று யாண்டும் மௌனமாயிருக்கிறது. ஓசையின் திரள் பிரணவம். பிரணவத்தில் இரண்டு கூறுகள் உள. அவை முறையே மாத்ரப் பிரணவம் எனவும், அமாத்ரப் பிரணவம் எனவும் இயம்பப்பெறுகின்றன. மாத்ரப் பிரணவம் ஓசையாக வடிவெடுத்து இருக்கிறது. அமாத்ரப் பிரணவமோ சலனமற்று ஓசையற்று இருக்கிறது. இக்கோட்பாடு நன்கு விளங்குவதற்கு மற்றொரு பூதத்தின் பாங்கை ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்வோம். அப்பு அல்லது ஜலம் சுவையற்றதாயிருக்கிறது. எனினும் ஏனைய சுவைகளை அது எடுத்து விளக்க வல்லதாகிறது. கல்லைத் தண்ணீரில் போட்டால் அது கரைவதில்லை. தண்ணீரிலும் சுவை உண்டாவதில்லை. மற்று கற்கண்டைத் தண்ணீரில் போட்டால் அது கரைகிறது. அதன் சுவையைத் தண்ணீரின் துணைகொண்டு நாம் அறிகிறோம். தண்ணீரின் தன் மாத்திரை சுவை எனினும் அத்தண்ணீரானது தன்னளவில் சுவையற்று இருக்கிறது. சுவையற்று இருந்துகொண்டு ஏனைய சுவைகளை எடுத்துக்காட்ட வல்லதாய் நீர் அமைந்திருக்கிறது. அதே பாங்கில் ஆகாசத்தின் தன் மாத்திரை சப்தம் எனினும் அது தன்னளவில் நிசப்தமாயிருக்கிறது. ஏனைய பூதங்களின் கூட்டுறவால் வருகிற சலனத்தை முன்னிட்டு அதனிடத்து ஓசை உருவெடுக்கிறது. அப்படி உருவெடுத்திருக்கிற ஓசையின் தொகையே மாத்ரப் பிரணவம் என மொழியப் பெறுகிறது. ஆகாசத்தின் ஓசையைக் கடந்த நிலை சாந்த நிலையாம். ஓசையை உண்டுபண்ணிச் சாந்தத்தைக் கலைக்கலாம். ஆனால் ஓசையற்ற நிலையிலுள்ள சாந்தத்தை யாருமே கலைக்க முடியாது. ஆதலால் அமாத்ரப் பிரணவமும், சாந்த நிலையும் ஒன்றேயாம். அது பிரபஞ்சத்துக்கு அப்பால் இருப்பதால் சாந்த்யதீதம் என இயம்பப் பெறுகிறது. ஜீவாத்மன் தன்னுடைய ஜீவ போதத்தை ஒதுக்குமிடத்து அவன் சாந்த்யதீத நிலையை எய்துகிறான். சாந்த்யதீதக் கலையாக அம்பிகை இலங்குகின்றாள். சமுத்திரத்திற்குள் வீழ்ந்த மழைத்துளி சமுத்திரத்தில் ஒன்றுபடுவதற்கு நிகராக ஜீவபோதத்தை ஒதுக்குகிற ஆத்மன் பரமாத்மனில் இரண்டற்றவனாகின்றான். அத்தகைய அத்வைத நிலையில், இரண்டற்ற நிலையில் ஓசை ஒலியெல்லாம் கடந்த நிலையில் பரதேவதையாகிய அன்னை பராசக்தி யாண்டும் இலங்கிக்கொண்டு இருக்கிறாள். அத்தகைய பராசக்தியை உபாசிப்பது முடிந்த கலையாகிறது. அக்கலையின் வாயிலாக ஜீவாத்மனுக்குப் பரதத்துவத்தில் ஒன்றுபடுவது சாத்தியம் என்னும் கோட்பாடு இந்த நாமத்தில் அடங்கியிருக்கிறது.

854. गम्भीरा கம்பீரா — அளப்பரியவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

புறத்தே தென்படுகின்ற வெட்ட வெளியானது அகண்டாகாரத்தில் விரிந்து ஓடிக்கொண்டிருக்கிறது. அதே போக்கில் கண்மூடி உள்ளத்தின் உள்ளேயிருக்கின்ற வெட்ட வெளியின்கண் கருத்தைச் செலுத்துவோமானால் அந்த வெட்ட வெளியும் அகண்டாகாரத்தில் விரிந்துகொண்டுபோகிறது. ஆழ்ந்து அந்த உள் வெளியின்கண் கருத்தைச் செலுத்துகிறவர்கள் ஆழ்வார்கள் ஆகிறார்கள். எவ்வளவுதான் ஆழ்ந்து மூழ்கினாலும் அந்த ஆழத்துக்கு முடிவு இல்லை. ஆழத்திலும் அது அகண்டாகாரத்தில் போய்க்கொண்டேயிருக்கிறது. மேல் நோக்கிப் பார்த்தாலும் அதனுடைய உச்சநிலை முடிவில்லாது மேல் நோக்கி விரிந்துகொண்டே போகிறது. இதன் விளைவாக அகம் புறம் என்னுதபடி அகண்டாகாரப் பெருவெளியே யாண்டும் நிறைந்திருக்கிறது. இந்த அகண்டாகாரப் பெருவெளியில் அந்தக்கரணத்தை விரிவடையச் செய்துகொண்டு அம்பிகையின் நாமத்தை ஜபம் செய்தால் அந்த நாமத்துக்கு அலாதியான வீரியம் வந்தமை

கிறது. இந்தப்பாங்கில் அன்னையின் நாமத்தை உச்சரிப்பதால் ஆத்ம சாதகன் ஒருவன் அதி விரைவில் தெய்விகத்தில் திளைத்தவனாகிறான். கம்பீரா என்னும் நாமத்தில் இந்த அரிய கோட்பாடு அடங்கியிருக்கிறது.

855. गगनान्तस्था ககனாந்தஸ்தா—ஆகாசம் அல்லது வெட்டவெளியின் மத்தியில் இருப்பவள் என இந்த நாமம் பொருள்படுகிறது.

மானுடன் ஒருவன் தன் அமைப்பை எவ்வளவுக்கெவ்வளவு உருவத்தில் அமைத்துக்கொள்ளுகின்றானோ, அவ்வளவுக்கவ்வளவு அவன் எல்லையுள் அடங்கிய இன்ப துன்பங்களுக்கு ஆளாகிறான். அதற்கு மாறாக அவன் தன் அந்தக்கரணத்தை அகம் புறம் என்னாதபடி அகண்டாகாரத்தில் எவ்வளவுக்கெவ்வளவு விரிவடையப் பண்ணுகின்றானோ அவ்வளவுக்கவ்வளவு அவன் துன்பத்தினின்று விடுதலையடைகிறான். எல்லைமருவாத பேரின்பமே எஞ்சி நிற்கிறது. அந்தப் பேரின்ப சொரூபிணியாக அம்பிகை இலங்குகின்றாள். ஆத்ம சாதகன் தனக்குத் தானே கற்பித்துக் கொள்ளுகிற இன்பதுன்பங்கள் பொருளற்றவைகள். பொருளற்றவைகளைப் பொருள் உற்றவைகளாகப் பாவித்து மனோவிகாரம் அடைவது அக்ஞானத்தின் விளைவாம். கண்டமாயுள்ள பிரபஞ்சத்தில் கட்டுண்டு கிடப்பது அக்ஞானத்தை வளர்க்கிறது. பிரபஞ்சப்பற்றுதலிலிருந்து மனதை விலக்கி எடுக்கவேண்டும். அகண்டாகார வெட்டவெளியில் வீற்றிருக்கின்ற அன்னை பராசக்தியின் உபாசனை ஒன்றே இவ்வுலக சம்பந்தமான இன்பதுன்பங்களைத் துடைத்துத்தள்ளுவதற்கு உற்ற உபாயமாம்.

856. गर्विता கர்விதா—கர்வம் அல்லது தற்பெருமையோடு கூடியிருப்பவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

உலக மக்களுக்கிடையில் கர்வம் அல்லது தற்பெருமை குடிகொண்டிருப்பதைக் காண்கிறோம். பல காரணங்களை முன்னிட்டு மனிதனுக்குக் கர்வம் வருகிறது. பிறப்பை முன்னிட்டு ஒருவனுக்குக் கர்வம் வருகிறது. நல்லதும், மேலானதுமான குடியிலே அல்லது குடும்பத்திலே அல்லது வமிசத்திலே தான் பிறந்திருப்பதாக மானுடன் ஒருவன் எண்ணி அகந்தை பூணுகிறான். தான் பிறந்திருக்கிற ஊரை முன்னிட்டு, அல்லது நாட்டை முன்னிட்டு இன்னொருவன் அகந்தை கொள்ளுகிறான். தான் படைத்திருக்கிற மேனி அழகை முன்னிட்டு மற்றொருவன் தற்பெருமை பூணுகிறான். தனக்கு வாய்த்துள்ள செல்வத்தை முன்னிட்டு இன்னொருவன் செருக்கு அடைகிறான். நோயற்ற வாழ்வு என்னும் குறைவற்ற செல்வத்தை முன்னிட்டு இன்னொருவன் கர்வம் பூணுகிறான். தன்னுடைய ஆற்றலை முகாமையாக வைத்துக் கொண்டு வேறு ஒருவன் வீண்கர்வம் படைத்தவனாகிறான். தன் அறிவை அடிப்படையாக வைத்துக்கொண்டு இன்னும் ஒருவன் அகந்தை பூணுகிறான். தனக்கு வாய்த்துள்ள பதவியை முன்னிட்டோ, அதிகாரத்தை முன்னிட்டோ, அல்லது நட்பை முன்னிட்டோ மற்றும் ஒருவன் அகங்காரம் பூணுகிறான். இவை யாவுக்கும் மூல காரணமாயிருப்பவள் அன்னை பராசக்தி என்பதை அறிய வருகிறவன் பாக்கியவான். உலகில் எங்கெங்கெல்லாம் என்னென்னவிதமான மகிமைகள் வந்து அமைந்திருக்கின்றனவோ அவை யாவுக்கும் பிறப்பிடம் அன்னை பராசக்தி யாவாள். அகிலாண்டகோடிகளை ஈன்றெடுத்திருக்கின்ற அன்னை பராசக்தி தன்னுடைய அத்தகைய பேரமைப்பில் திருப்தி அடைந்திருக்கிறாள். அவள் அடைந்திருக்கிற திருப்தி அவளுடைய கர்வம் என ஈண்டு இயம்பப் பெறுகிறது. அன்னை பராசக்தியின் கர்வம் நிரந்தரமானது. மானுடன் பூணுகிற கர்வம் நீர்க்குமிழி போன்று நிலையற்றதாகிறது. ஆதலால் எக்காரணத்தை முன்னிட்டாவது மனிதனுக்கு ஏதேனும் கர்வம் உண்டாகுமானால் அதை அன்னைக்குரியதாக ஒப்படைக்க வல்லவன் நல்ல ஆத்மசாதகன் ஆகிறான். அப்படி ஒப்படைக்கிறவன் உள்ளத்தினுள் ஓர் ஒப்பற்ற தெய்வீக மனப்பான்மையை வரவழைத்துக் கொள்ளவேண்டும். அன்னையின் அருளால் அந்த அரிய பெரிய காரியம் தன் மூலம் நிறைவேறியது எனத் திருப்தியடைவது கர்வம் அடைவதற்கு நிகர். அத்தகைய திருப்திகரமான மனப்பான்மையுடன் தான் சாதித்ததை அன்னையிடம் ஒப்படைப்பது முறை. அதன் மூலம் சாதகன் மேலும் மேலும் முன்னேற்றமடைகிறான்.

857. गानलोलुपा கானலோலுபா — இசையில் மனதைச் செலுத்துபவள் என்பது

இந்த நாமத்தின் பொருள்.

ஒழுங்குப்பாடுடன் அமையும் ஓசை இசை எனப்படுகிறது. சரீரம் தாங்கியிருக்கும்உயிர் வகைகளுள் பறவையிடத்தும், மக்களிடத்தும் இசையில் பண்பாட்டைப் பெரிதும் காண் கிறோம். மற்ற ஜந்துக்களிடத்து இன்னிசை இயல்பாக அமையவில்லை எனினும் அவை யாவும் இன்னிசைக்கு வசப்படுகின்றன. கண்ணன் குழலோசையைக் கேட்டு ஜீவ ஜந் துக்களனைத்தும் தங்களிடத்திருந்த ஜீவ போதத்தை மறந்து அபேத நிலையில் கண்ணன் எதிரே வந்து சேர்ந்தன என்றால் கானத்தின் மகிமை அச்செயலின் மூலம் வெளியாகிறது. லலித கலைகளில் ஒன்றாகக் கானம் இருக்கிறது. லலித கலையை Fine arts என்று ஆங்கிலத்தில் பகருகின்றோம். முறையாகக் கானம் அமையு மிடத்து, அதன் விளைவாக மனம் குவிகிறது. குவிந்த மனம் மனாதீதத்தை எட்டவும் துணை புரிகிறது. ஜீவர்களிடத்திலுள்ள தெய்வீக இயல்பை நினைவூட்டும் கலைகளுள் கானம் அல்லது இன்னிசை உச்சநிலை பெறுகிறது. உயிர்கள் அனைத்துக்கும் நலன் வழங்கவல்லது எதுவோ அது இயல்பாகவே அன்னை பரா சக்திக்கும் பிரியமானதேயாம். ஆதலால் இன் னிசை வல்லமை ஆத்மசாதகன் ஒருவனிடம் அமைந்திருக்குமானால் அதை அவன் அம்பிகை வழிபாட்டுக்கு நன்கு பயன்படுத்தலாம்.

இசையை வழிபாட்டுக்குப் பயன்படுத்து வதில் இடைஞ்சலும் ஒன்று உளது. பாடகர் கள் பலர் தாளம், ராகம் அமைந்துள்ள பாட்டி லேயே கருத்தைச் செலுத்துகிறார்கள். பக் திக்கோ பாவனைக்கோ ஆங்கு இடமில்லாது போகிறது. ஆகவே பக்திக்கு அன்னியமா யுள்ள இன்னிசை எவ்வளவு சிறப்பு வாய்ந்த தாயிருந்தாலும் ஆத்மசாதகன் அதில் கருத்தைச் செலுத்தலாகாது. பக்தி பரவசத்தோடுகூடிய பாடல் கிடைப்பதற்கரிய பேறுஆம். அம்பி கைக்குப் பிரியமான அத்தகைய கானத்தை ஆத்மசாதகன் நன்கு பயன்படுத்த வேண்டும்.

858. कल्पनारहिता கல்பனா ரஹிதா— கற்பனை ஏதும் இல்லாதவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

மனதில் உண்டாகும் விவகாரங்கள் கற்பனை கள் என்று கூறப்படுகின்றன. உறங்கும் பொழுது மனிதன் கனவு காண்கின்றான். அவன் காண்கின்ற கனவு உலகம் அவனுடைய சொந்தக் கற்பனையாம். கனவுகாண்பவனுடைய மனோ விகாரத்திற்குப் புறம்பாக அவன்காண் கிற சொப்பன உலகம் இல்லவேயில்லை. மனி தன் காண்கிற சொப்பனத்தினின்று அரிய பாடம் ஒன்றை ஆத்மசாதகன் கற்றுக்கொள்ள லாம். கனவு உலகும், நனவு உலகும் ஒன்றை ஒன்று ஒட்டியிருக்கின்றன. நனவிலே மனிதன் படைத்திருக்கிற பாங்குகள் யாவும் கனவிலும் தோன்றுகின்றன. ஆகவே சாதகன் ஒருவனு டைய பாங்கு எத்தகையது என்பதை அவன் காணும் கனவே எடுத்துக் காட்டுகிறது. இனி கனவில் காண்பதெல்லாம் மனதின் கற்பனைகள் என்றால் நனவில் காண்பவைகளும் மனதின் கற்பனைகளேயாம். நல்ல மனம் படைத்திருக் கிறவனுக்கு நனவிலும், கனவிலும் நல்ல கற்பனைகளே வடிவெடுக்கின்றன. பின்பு கெட்டமனம் படைத்திருப்பவனுக்கு நனவிலும், கனவிலும் கீழான கற்பனைகளே வடிவெடுக் கின்றன. ஆத்ம சாதகன் நல்ல சித்த விருத்தி கள், அல்லது நல்ல எண்ணங்கள், அல்லது நல்ல கற்பனைகள் உள்ளத்தில் உருவெடுக்கச் செய்தால் அந்த நல்ல கற்பனைகள் கெட்ட கற்பனைகளை ஒதுக்கித்தள்ளுகின்றன. நல்லகற் பனைகள் படைத்திருப்பவன் அம்பிகை உபா சனைக்கு முற்றிலும் தகுதி உடையவன் ஆகி றான். உபாசனை தீவிரமாக வாய்க்குமிடத்து மனோநாசம் தானாக வந்து அமைகிறது. மனோ நாசத்தில் ஆத்மசாதகன் கல்பனாரஹிதனாக அமைகிறான். அங்ஙனம் சித்தவிருத்தியற்ற நிலை, எண்ணங்கள் ஒடுங்கிய நிலை கல்பனா ரஹிதம் எனப்படும். மனாதீத நிலையை ஆத்ம சாதகன் அடைகின்ற பொழுது சுத்த சைதன்ய மாயுள்ள அன்னை பராசக்தியோடு அவன் ஒன்றுபடுகிறான். பிரபஞ்சம் என்னும் கற் பனைக்கு அப்பால் அன்னை பராசக்தி யாண்டும் சுத்த சைதன்யமாகவே இலங்கிக் கொண்டு இருக்கிறாள். ஆகவே அவள் கல்பனாரஹிதா என இயம்பப் பெறுகிறாள். அந்நிலையை அடைகிற ஆத்மசாதகனுக்கே அவளுடைய நிஜ நிலை நன்கு விளங்குகிறது. மனதிலுள்ள விகா ரங்கள் ஒழிந்துபோனால் பிரபஞ்சக் காட்சி போய்ச் சைதன்யக் காட்சி உண்டாகிறது.

ஸத் ஸம்பாஷணை

கேள்வி: (255) உபநிஷத் வாக்கியங்களாகிய மாத்ரு தேவோபவ, பித்ரு தேவோ பவ, ஆச்சாரிய தேவோ பவ, அதிதி தேவோ பவ என்னும் ஆப்த மொழிகளோடு மூர்க்க தேவோ பவ என்று புதிதாக இணைத்து விவேகானந்த சுவாமிகள் பகர்ந்துள்ளார். அப்படியானால் மூர்க்கனைத் தண்டிக்கக் கூடாதா?

மூர்க்கன் ஒருவன் செய்கிற அடாத செயலைக் குறித்து அரசாங்க வர்க்கம் அவசியம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். முறை தவறி நடப்பவர்கள்மீது அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்காவிட்டால் தீங்கு வளர்ந்து கொண்டே போகும். ஆனால் அதிகார வர்க்கம் செய்கின்ற தர்மத்தைத் துறவியர்கள் செய்யலாகாது. (Resist not evil) தீமையை எதிர்க்காதே என்னும் கோட்பாடு யதி தர்மம். இது அலாதியாகத் துறவியர்களுக்கே உரியது. அரசாங்கம் மட்டுமன்று; கிரஹஸ்தாச்ரம தர்மமும் தீமையை எதிர்த்தலேயாம். தீமையை எதிர்த்து அதைத் தண்டித்து அடக்கி வைப்பது இவ்வுலக வாழ்க்கைக்குரிய கடமையாகும். துறவறத்தைக் கையாண்ட அப்பர் சுவாமிகளும் மாணிக்கவாசகரும் இன்னல்கள் பலவற்றிற்கு ஆளானார்கள். இன்னல்கள் புரிந்தவர்களைத் தண்டிக்க வேண்டுமென்று தெய்வத்திடத்தும் அவர்கள் பிரார்த்தனை பண்ணவில்லை. தங்களுக்கு வந்த துயரத்தைப் பொறுமையாக ஏற்றுக்கொண்டு அத்துயரத்தினின்று அவர்கள் மீண்டார்கள். இம்முறையை உலக மக்கள் எல்லாரும் கையாள முடியாது. கையாள வேண்டுமென்று சாஸ்திரமும் ஆணையிடவில்லை.

விவேகானந்த சுவாமிகள் உபநிஷதங்களில் அடங்கியுள்ள நான்கு ஆப்த வாக்கியங்களை அனுசரித்துத் துக்கி தேவோ பவ; தரித்திர தேவோ பவ; மூர்க்க தேவோ பவ என்னும் மூன்று முதுமொழிகளை இணைத்துள்ளார். நரர்களை நாராயண சொரூபமாகக் கருதி அவர்களுக்குப் பணிவிடை பண்ணுவது தலைசிறந்த நாராயணம் அல்லது மானுட சேவை என்று விவேகானந்த சுவாமிகள் வற்புறுத்தியிருக்கிறார். துக்கத்தில் அழுந்திக் கிடக்கிற ஒருவனை அனுதாபத்தோடு அணுகி அவனுக்கு முறையாகப் பணிவிடை பண்ணினால் அதனால் அவன் பெரிதும் ஆறுதல் அடைகிறான். அதற்கு மாறாகப் பழவினைப் பயனாக அவன் துக்கத்தில் அழுந்திக்கிடக்கிறான் என்னும் மனப்பான்மையுடன் அவனை விட்டு ஒதுங்கிப் போவது பக்தன் ஒருவனுடைய பாங்கு ஆகாது. பக்தன் ஒருவன் யாண்டும் துக்கப்படுபவர்களுக்கு முறையாக ஆறுதல் வழங்கவே முயன்று வருகிறான். இனி 'தரித்திர தேவோ பவ' என்பது வறுமை நோயில் வருந்துகிற ஒருவனுக்கு நேர்மையான உழைப்பு முறையும், பொருத்தமான மனப்பான்மையும் வழங்குவது நல்ல மானுட சேவையாகிறது. அத்தகைய மானுட சேவையே யோகியின் மனதைப் பண்படுத்துகிறது. அடுத்தபடியாக மூர்க்கன் என ஒதுக்கப்படுபவன் அறிவிலியாகவிருக்கலாம் அல்லது முரடனாகவிருக்கலாம். நரசேவையே நாராயண சேவை என்னும் கொள்கையில் உறுதி படைத்திருக்கும் யோகி மூர்க்கனைக் கண்டு ஒதுங்குவதில்லை, அல்லது அவன்மீது கண்டிப்பான நடவடிக்கை எடுப்பதில்லை. இதற்குச் சான்று ஒன்று எடுத்துக் கொள்வோம்.

விவேகானந்தர் காலத்தில் பவ ஆஹாரி பாபா என்னும் சான்றோர் ஒருவர் இருந்தார். சமைப்பதற்கு அவர் ஒரே ஒரு பித்தளைப் பாத்திரம் வைத்திருந்தார். அதை ஒரு திருடன் வந்து திருடினான். திருடிக்கொண்டு போகிற வேளையில் பவ ஆஹாரி பாபா அவனைச் சந்திக்க நேர்ந்தது. உடனே பாத்திரத்தைக் கீழே வைத்து விட்டுத் திருடன் ஓட்டம் பிடித்தான். அந்தப் பாத்திரத்தைக் கையில் தூக்கிக்கொண்டு பவ ஆஹாரி பாபா அவனைப்பின் தொடர்ந்து ஓடினார். பாத்திரமும் கையுமாகப் பிடித்து அவனைப் போலீஸ்காரனிடம் ஒப்படைக்கத் துரத்திக்கொண்டு வருகிறார் என்று எண்ணி கனவேகமாகத் திருடன் ஓடினான். இந்தச் சான்றோரோ அவனை விடவில்லை. துரத்தி ஆளைப்பிடித்துக்கொண்டார். இருவரும் விரைந்து மூச்சு வாங்குவது ஓய்வு அடையும் வரையில் பவ ஆஹாரிபாபா காத்திருந்தார். பின்பு அன்போடு அவர் பகர்ந்ததாவது:

"அன்பா, எப்பொழுது இந்தப் பாத்திரத்தில் நீ பற்றுவைத்தாயோ அப்பொழுதே இந்தப் பாத்திரம் உனக்குரியது ஆயிற்று; அது எனக்குரியது அன்று; தயவு செய்து இதை எடுத்துக் கொண்டுபோ.'' பவ ஆஹாரி பாபாவின் தூய மனப்பான்மையும், உள்ளன்பும் அந்தத் திருடனுடைய மனதை அக்கணமே மாற்றிவிட்டது. அவன் இயம்பியதாவது: "பெரியோய், எனக்கு இப்பொழுது புத்தி வந்தது. திருடுகிற இந்தப் பொல்லாத செயலை இனிச் செய்யமாட்டேன்." கெட்டவனை நல்லவனாக்குவதற்கு இது அன்பு முறை. எல்லாராலும் இதைக் கையாள முடியாது. எனவே மூர்க்கதேவோ பவ என்னும் கோட்பாட்டை மனபரிபாகம் அடையாதவர்கள் கையாண்டால் அது கேடாய் முடியும்.

கேள்வி: (256) சமாதி நிலை எத்தகையது? அந்நிலையில் பரம்பொருளோடு நாம் ஒன்றுபட்டு இருக்கிறோமா?

சமாதி நிலைக்கும், சுஷுப்தி நிலைக்கும் பொது இயல்புகள் சில உள. சுஷுப்தி நிலை என்பது கனவற்ற உறக்கம். சமாதிநிலை என்பது தெளிவடைந்துள்ள விழிப்பு நிலை. சமாதியிலும் சுஷுப்தியிலும் உலகத்தைப் பற்றிய உணர்வு மறைந்துபோகிறது. அந்த இரண்டு நிலைகளும் காலத்துக்கு அப்பாற்பட்டன. தேசம் அல்லது இடம் எனப்பகரப்படும் நிலப்பிரதேசமும் ஆங்கு இல்லை. செயல்களனைத்தும் ஆங்கு ஒடுங்கிப் போகின்றன. பின்பு சமாதி நிலையில் பண்பட்டுள்ள சாதகனுடைய அறிவு பேரறிவாகவும், அன்பு பேரானந்தமாகவும் மிளிர்கின்றன. யான், எனது என்னும் செருக்கு சமாதி நிலையில் இல்லை. அயர்ந்த உறக்கத்திலோ மானுடன் ஒருவன் தன்னையும் அறிவதில்லை; உலகையும் அறிவதில்லை; பரமனையும் அறிவதில்லை. அஞ்ஞானத்தில் மூழ்கி அவன் ஜடம் போன்று இருக்கிறான். சமாதி நிலையிலோ பரம்பொருள் உணர்வில் தன்னுடைய ஜீவபோதத்தை ஒடுக்கிய பேரானந்தப்பெரு நிலையில் இருக்கிறான். இத்தகைய சமாதிநிலை எய்துவதே வாழ்க்கையின் மேலான குறிக்கோள் ஆகிறது. ஆத்ம சாதனங்களை முறையாக அனுஷ்டிக்கிறவன் மனபரிபாகம் அடைந்து பரமனிடத்து இரண்டற இணைந்து இருக்கிறான். இதுவே சமாதி நிலைக்கும் சுஷுப்தி நிலைக்கும் இடையிலுள்ள ஒற்றுமை வேற்றுமைகளாம். சமாதி நிலையை இறைவன் அருளால் இறைவனை வழிபாடு செய்கிறவன் அடையப் பெறுகிறான்.

கேள்வி: (257) அடியாத பிள்ளை படியாது என்பதை நவீனக் கல்வி முறை ஏற்பது இல்லை. உங்கள் கருத்து என்ன?

வளர்ந்து வருகிற சிறுவன் முதலில் உடல் மயமாய் இருக்கிறான். உடல்மயமாய் இருப்பது சிற்றுயிர்களின் பாங்கு. அறிவுபடைத்துள்ள மனிதன் உடல் உணர்வைத்தாண்டிப் பகுத்தறிவு நிலையை எட்டுகிறான். பகுத்தறிவு நிலையில் இருப்பவனுக்குப் பகுத்தறிவு நிலையில் வைத்து ஆமோதிப்பதையும், ஆட்சேபிப்பதையும் தெரிவிக்கலாம். பண்பட்டுள்ள ஒருவனிடம் 'நீ செய்தது சரியன்று' என்று இயம்புவது தண்டனைக்கு நிகர். பண்பிலே இன்னும் மேலே போனவனிடம் அவன் செய்த குற்றத்தை முன்னிட்டு மௌனம் சாதிப்பது இன்னும் பெரிய தண்டனையாகிறது. பண்பாடு இன்னும் உடல் நிலையில் இருக்கின்ற மாணாக்கனுக்கு அடி விளங்குகிறது; கண்டித்துச் சொல்வது விளங்காது. ஆக அந்தந்த நிலையிலிருக்கின்ற மனிதனுக்கேற்ப அறிவுறுத்தும் முறை வேறுபடுகிறது. பாடம் படிக்காவிட்டால் அடி கிடைக்கும் என்று எச்சரிக்கை பண்ணலாம். அந்த எச்சரிக்கை போதவில்லை என்றால் அடி கொடுத்தால் அவன் வழிக்கு வருகிறான். இதை அனுபவபூர்வமாக அறிந்துகொள்ளலாம். கணபதி முன்னிலையில் தலையில் குட்டிக்கொண்டு தோப்புக்கரணம் போடுவது சரீர சம்பந்தமான பாடம். சான்றோர்களுக்கு இது தேவையில்லை. சிறுவர்களுக்குக் குட்டிக்கொண்டு தோப்புக்கரணம் போடுவது விளங்குவதுபோன்று நான் நன்னெறி பிசகேன் என்னும் வாய்ப்பேச்சு பயன்படாது. இன்ன காரியத்தை நன்றாகச் செய்தால் மிட்டாய் தருகிறேன் என்பது சிறுவனுக்கு விளங்குகிறது. அதைச் செய்தால் நீ மேலோன் ஆவாய் என்பது விளங்காது. பாடம் படிக்காவிட்டால் அடி கிடைக்கும் என்பது விளங்குகிறது; பாடம் படிக்காவிட்டால் நீ அறிவாளியாகமாட்டாய் என்பது விளங்காது. ஆதலால் அடியாத பிள்ளை படியாது என்பது உண்மைக்கு ஒத்ததாம்.

வாசுதேவமனன விளக்கம்

(சுவாமி ஸதானந்தர்)

ஆத்மா மூன்று சரீரங்களைக் காட்டிலும்வேறு பட்டது; மூன்று அவஸ்தைகளுக்கும் சாக்ஷி; ஐந்துகோசங்களுக்கும் வேறுபட்டது, ஸச்சிதானந்த ஸ்வரூபம் என்று ஆத்மாவிற்கு நான்கு லக்ஷணங்கள் சொல்லப்பட்டுள்ளன. இதுவரை ஸ்தூல, சூக்ஷ்ம, காரண சரீரங்களைக் காட்டிலும் வேறானது என்பது விளக்கப்பட்டது. இனி, மூன்று அவஸ்தைகளிலும் சம்பந்தப்படாமல் சாக்ஷியாக இருந்துகொண்டு அவைகளை ஆத்மா பார்த்துக்கொண்டிருக்கிறது என்கிற இரண்டாவது லக்ஷணத்தை அறிந்து கொள்வோம். ஸத்வம், ரஜஸ், தமஸ் ஆகிய மூன்று குணங்களால் ஆனது மனது; ஆயினும் சத்வகுணத்தையே பிரதானமாக உடையது. ஸாத்விகமான மனதால்தான் ஆத்மாவை அறிய முடியுமே தவிர ராஜச, தாமஸ குணங்கள் நிறைந்த மனதால் அறிய முடியாது. ஸத்வகுணம் சூக்ஷ்மமானது. ரஜோகுணம் சஞ்சலமானது. தமோகுணம் ஸ்தூலமானது. சிறு துரும்புமட்டும் நுழையக்கூடிய ஒரு துவாரத்தில் எப்படிப் பெரிய தூண் நுழையாதோ, காற்றினால் தீபச்சுடர் அசைந்துகொண்டிருக்கும்போது எப்படி நன்கு வர்ணங்களைப் பிரித்து அறிய முடியாதோ, அதேபோன்று ஆத்மாவை அறியவேண்டுமாயின் சூக்ஷ்மமான ஸாத்விக மனதினால்தான் அறிய முடியும். சஞ்சலமான மனத்தாலும், இருள் சூழ்ந்த, தமோகுண மனத்தாலும், அதி சூக்ஷ்மமான ஆத்ம ஸ்வரூபத்தை அறிய முடியாது. (உயிர் வகைகள் பரிணமத்தில் மேலே வரவர அதிக இந்திரியங்களைப் பெற்று இவ்வுலகை அதிகம் அறிகின்றன; இன்பம் அடைகின்றன. ஐந்து இந்திரியங்களையும் பெற்றன பிறகு அவைகளை வைத்துப் பொருள்படுத்துகிற, அறிகிற மனது தூயது ஆக ஆக இப்பிரபஞ்சமே தெய்வக் காட்சி தருகிறது. மாசற்ற மனது சுத்தமான கண்ணாடி போன்றது. அதுவே ஞானக்கண் என்றும் சொல்லப்படுகிறது. இந்திரியவளர்ச்சி ஸ்தூல சரீரத்தோடு சம்பந்தப்பட்டது. மன வளர்ச்சி சூக்ஷ்மமானது. வாழ்வு, எண்ணம் தூயது மேலானது ஆக ஆக மனம் தூயது ஆகிறது. தூயமனதில் கடவுள் தத்துவங்கள் இப்பிரபஞ்சத்தைப் பற்றிய மேலாம் உண்மைகள் தாமே ஓதாது விளங்குகின்றன.)

மூவகை அவஸ்தைகள் என்பன என்ன? விழிப்பு, சொப்பனம், கனவற்ற ஆழ்ந்த உறக்கம் என்கிற மூன்று நிலைகள் அவஸ்தா திரயம் எனப்படுகின்றன. எல்லா இந்திரியங்களாலும் வெளி விஷயங்களை அறிவது விழிப்பு. விழிப்பு நிலையில் ஏற்பட்ட அறிவின், அனுபவங்களின் சம்ஸ்காரத்தால் அந்தக்கரணமே அனுபவிப்பவனாகவும், அனுபவிக்கப்படும் பொருள்களாகவும் மாறுதல் அடைவது, வடிவு எடுப்பது சொப்பனம். ஸ்தூல, சூக்ஷ்ம ஜகத் எல்லாம் அவைகளுக்குக் காரணமான அக்ஞானத்தில் லயமான பின்பு சாக்ஷியால் மட்டுமே அறியத்தக்க அக்ஞானம் மட்டும் மீதம் இருப்பது சுஷுப்தி அல்லது ஆழ்ந்த கனவற்ற உறக்கம். இம்மூன்று அவஸ்தைகளுக்கும் சாக்ஷியாக ஆத்மா இருக்கிறது என்று சொல்லப்பட்டதே அது எப்படியெனில் ஆத்மாவினிடத்தில் சாக்ஷியின் லக்ஷணங்கள் இருப்பதால்தான் அங்ஙனம் சொல்லப்படுகிறது. சாக்ஷியின் லக்ஷணம் என்ன? ஒரு மனிதன் வேறு ஒருவனுடைய அவஸ்தைகள், அவற்றின் காரியங்கள், அவற்றினால் ஏற்படும் இன்ப துன்ப அனுபவங்கள் இவற்றையெல்லாம் தன்னிடம் ஒருவித மாறுபாடும் இல்லாமல் நேரில் பார்ப்பதுதான் சாக்ஷித் தன்மை எனப்படுகிறது. ஒரு சைத்ரிகன் நல்ல சித்திரம் ஒன்றைச் சந்தையில் விற்பனைக்கு வைத்தான். அதை ஒருவன் பார்த்தான். விலை பேசினான். குறைந்த விலைக்கு வாங்கப் பேரம் பேசினான். விற்பவனோ அதிக விலைபெற அவனது நியாயங்களைச் சொன்னான். மூன்றாவது மனிதன் அப்படத்தை உற்றுப் பார்த்து மிகவும் மகிழ்ந்தான். அவனுக்கு வாங்க வேண்டும் என்கிற எண்ணமில்லை. விற்கிறவன் நிலையிலும் அவன் இல்லை. அதனால் அவனுக்கு அப்படத்தை நன்கு ரசிக்க முடிந்தது. அதன் சிறந்த அம்சங்கள் எல்லாம் மனதில் பட்டன. அதே போன்று இப்பிரபஞ்சப் பொருள்களை

உன் உடைமை ஆக்க முயலாமல் சாக்ஷிமாத்திர மாய்ப் பார், ரசி, மகிழ். அத்தகையவனே அதிக இன்பம்பெறுபவன் ஆகிறான். ஆறுகளும் மழை யும் எவ்வளவு நீரைக்கொட்டினாலும் எவ்வளவு நீர் ஆவியாக வெளியே சென்றாலும் கடல் எங்ஙனம் தன்நிலையில் திரியாது இருக்கிறதோ அங்ஙனம் இவ்வுலகம் தரும் இன்பதுன்பங் களால் யார் பாதிக்கப்படாமல் மகிழ்ச்சியும் துயரமும் அடையாமல் இருக்கிறார்களோ, எதற் கும் சாக்ஷிமாத்திரமாய் இருக்கிறார்களோ அவர் கள் ஸ்திதப்பிரக்ஞர்கள் எனப்படுகிறார்கள். முகம்பார்க்கும் கண்ணாடி பார்க்கிறவர்களின் பலவிதமான முக அமைப்புக்களையோ, உள்ள உணர்ச்சிகளையோ எப்படி வாங்கிக்கொள் ளாது தன்மாத்திரமாய் இருக்கிறதோ அப்படிச் சாக்ஷிமாத்திரமாய் ஆத்மா இருக்கிறது. ஜாக்கி ரதா அவஸ்தையில்,பிரத்யக்ஷ வியவகாரங்களில் கடல்போன்றும் கண்ணாடிபோன்றும் சாக்ஷி மாத்திரமாய் இருந்த பெரியோர்கள் உண்டு. அவர்கள் ஜீவிதமே ஆத்மசாதகர்களுக்கு, பக் தர்களுக்கு, ஞானியர்களுக்கு உயிரூட்டுகிறது; சாஸ்திர உண்மைகளைப்பிரத்யக்ஷமாக்குகிறது. பகவான் கிருஷ்ணர், பீஷ்மர், ஜனகர், சுகர் போன்றவர்கள் அளவற்ற வியவகாரங்களுக்கு இடையில் ஆத்மசொரூபத்தில் மூழ்கியவர் களாய்த் தங்களில் தாங்களாய் இருந்தார்கள். ஆத்மாவின்சாக்ஷித்தன்மையை அவர்கள் பெற் றதின் விளைவு அது. அதாவது அவர்கள் ஆத்ம போதம், சிவமயம் ஆகிவிட்டார்கள். ஆத்மா எப்போதும் இந்த நிலையில் இருக்கிறது. ஜீவனின் மூன்று அவஸ்தைகளையும் அந்த அவஸ்தைகளின் வியவகாரங்களையும், அதனால் ஜீவன் அனுபவிக்கிற இன்பதுன்பங்களையும், எந்த விதமான மாறுதலும் இல்லாமல், அடை யாமல் நேரில் பார்த்துக்கொண்டிருக்கிறது. இங்கு நமக்கு ஒரு சந்தேகம் எழுகிறது. நாம் அன்றாட வாழ்க்கையில் பெறுகிற வெற்றி தோல்விகள், பெருமை சிறுமைகள் நமக்கு மகிழ்ச்சியையும் துக்கத்தையும் தருகின்றன. இது அந்தக்கரணத்தின் வேலை, அனுபவம். அந்தக்கரணம் ஜடமே ஆனாலும் ஆத்மாவின் முன்னிலையில் அதற்கு உணர்வும், அறிவும் உண்டாகின்றன. நான் யார் என்கிற ஆராய்ச்சிசெய்தால் இவ்வுடல் அன்று, அந்தக் கரணம் அன்று, உயிர் அன்று, இவை யாவற் றையும் தம் விளையாட்டுப் பொருள்களாக வைத்து அலகிலா விளையாட்டு உடையவர் தாம் ஆத்மா. அவர்தாம் நான் என்பதற்கு இலக்காவார். ஆகையால் எப்படி ஆராய்ந் தாலும் ஆத்மாவின் சாக்ஷித்தன்மை நிரு பணமாகிறது. ஆத்ம சாதகனே இந்தச் சாக்ஷித்தன்மையை உணர்ந்து அறிந்து பற்றிக் கொள்கிறான்.இதை வேறு உதாரணங்களாலும் விளக்குகிறார்கள். விழிப்பு நிலை என்பது ஒரு பெரியபட்டணம் போன்றுள்ளது. அதன் பிர காரங்கள், கோட்டைகள் போன்றது சொப்பன வஸ்தை. அப்பெரியபட்டணத்தின் மத்தியில் உள்ளஒரு மாளிகைபோன்று உள்ளதுசுஷுப்தி நிலை. அந்த மூன்றிற்கும் யஜமானனான பிரபு வைப்போல்இருப்பவன் அந்த மூன்று அவஸ்தை களிலும் பற்றுதல் உள்ள ஜீவன். அந்தப் பிரபு கோட்டைக்குவெளியில் இருந்துகொண்டு சுகம். துக்கம் ஆகியவைகளை அனுபவித்து அதனால் சந்தோஷத்தையும் வருத்தத்தையும் அடைந்து பிறகு அந்தக் கோட்டைக்கு உள்ளே யும் சுகம் துக்கம் இரண்டையும் அனுபவித்து இன்ப துன்பம் அடைந்து பிறகு மாளிகைக் குள் வந்து எல்லாவியவகாரங்களையும் விட்டு விட்டுச் சும்மா இருந்துகொண்டு தன் பத்தினி யுடன் சுகமாக இருப்பானே அதுபோன்று ஜீவாத்மாவும் விழிப்பில் ஸ்தூல சரீரத்தில் அபிமானம் கொண்டு மனம் வாக்கு காயம் என்னும் மூன்று கரணங்களாலும் காரியங் களைச் செய்துகொண்டு **விசுவன்** என்ற பெயரு டன் இருந்துவிட்டுப் பிறகு சொப்பன நிலையில் சூக்ஷ்ம சரீரத்தில் அபிமானம் கொண்டு மனோ மயமான முக்கரணங்களால் குணமாகவும் தோஷமாகவும் உள்ள காரியங்களைச் செய்து கொண்டு **தைஜஸன்** என்ற பெயருடன் இருந்து விட்டுப் பின்னால் காரண சரீரத்தில் அபி மானம் கொண்டு சுஷுப்தி அவஸ்தையில் மனம் வாக்கு காயம் என்னும் திரிகரணங்களை யும் அடங்கும்படி செய்து **பிராக்ஞன்** என்ற பெயருடன் நித்தியானந்த சுகத்தை அனுபவித் துக்கொண்டிருக்கிறான்.

இப்படி ஆத்மா மாறுபாடு இல்லாமல் ஒரே நிலையில் இருப்பவனாகவும் ஆகாசம்போல் எதி லும் பற்று அற்றவனாகவும் இருந்து கொண்டே

ஜாக்கிரத, சொப்பன, சுஷுப்தி ஆகிய மூன்று நிலைகளிலும் சைதன்ய ரூபமாக, சாக்ஷியாக இருக்கிறான். இதைச் சுருதி, யுக்தி அனுபவங்களால் அறியவேண்டும். ஆத்மா சாக்ஷியாகவும், அறிபவனாகவும், தனிப்பட்டவனாகவும் குணமற்றவனாகவும் இருக்கிறான். ஸாக்ஷீ சேதா கேவலோ நிர்குணஶ்ச என்று சுருதி விளக்குகிறது. முன் சொன்ன பட்டண உதாரணம் யுக்தி. இனி அனுபவத்தைப் பார்ப்போம்.

நேற்று நாம் அனுபவித்த அவஸ்தாதிரயங்களை இன்று நாம் நினைத்துப் பார்க்கிறோம்; ஞாபகத்துக்குக் கொண்டுவருகிறோம். முன்னே அனுபவிக்கப்பட்டதுதான் பின்னால் நினைவுக்கு வரும். இப்பொழுது நினைவுக்கு வருகிறபடியால் முன் தினம் அவஸ்தாதிரயங்களுடன் சம்பந்தப்படாமல் அவற்றை நேரில் கண்டிருக்கிறோம் என்று தெரிகிறது, உண்மையாகிறது. இதனால் ஆத்மா அவஸ்தாதிரயசாக்ஷி என்பது உறுதியாகிறது. இதனால்தான் ஒவ்வொரு நாளும் நாம் அவஸ்தாதிரயங்களைப் புதியது புதியதாக அனுபவிக்கிறோம். மேலும் முன் காலத்தில் இருந்த அவஸ்தாதிரயங்களையும் எதிர்காலத்தில் வரப்போகும் அவஸ்தாதிரயங்களையும் வரிசையாக ஆத்மா அனுபவிக்கிறபடியால் மாறிமாறி வரும் அவஸ்தாதிரயங்கள் நீங்கின போதிலும் அவற்றைப் பார்க்கும் ஒரே ஆத்மா நித்தியமாக மாறாமல் இருக்கிறான் என்பதும் தெரியவருகிறது.

கேள்வி: உலகில் யாருக்கு அவஸ்தைகள் உள்ளனவோ, அவன்தான் சாக்ஷியாக, அவஸ்தைகளைப் பார்க்கிறவனாக இருக்க முடியும். ஆனால் இப்பொழுது அவஸ்தைகள் அற்றவனை, வேறு ஒன்றை—ஆத்மாவை—சாக்ஷியாகக் கூறப்பட்டது எங்ஙனம் பொருந்தும்?

பதில்: அந்தக்கரணத்தில் தோன்றும் சைதன்யம் பிரதிபிம்பம்தான். ஆத்மாவின் பிரதிபிம்பம்தான் ஜீவன் எனப்படுகிறது. இவனுக்குச் சிதாபாசன் என்று பெயர். இந்தத் தோற்றம், ஜீவசொரூபம் பொய்யானது, கல்பிதம். இவனுக்குத்தான் இந்த அவஸ்தைகள் எல்லாம். (ஜீவனும் கல்பிதம், அவஸ்தைகளும் கல்பிதம், அதாவது கற்பனை என்பது முடிந்த உண்மை.) சுஷுப்தியில் அந்தக்கரணம் ஒடுங்கிப் போனபோது அந்தக்கரண பிரதிபிம்பமான ஜீவனும் மறைந்து விடுகிறது. அப்பொழுது ஜீவன் என்பது இல்லை. ஆகையால் ஜீவன் எப்படி சுஷுப்தி அவஸ்தைக்குச் சாக்ஷியாக இருக்க முடியும்? ஆகவே பிம்பத்துக்கு—ஜீவனுக்குக் காரணபூதமான ஆத்மாதான் சுஷுப்திக்குச் சாக்ஷியாக இருக்கிறான் என்பதைக் கட்டாயம் ஒப்புக்கொண்டாக வேண்டும். இனி இந்த ஆத்மாவே விழிப்பு, சொப்பன நிலைகளிலும் சாக்ஷியாக இருக்கிறான் என்பதை ஒப்புக்கொள்வது சுலபம். ஏனென்றால் மூன்று அவஸ்தைகளிலும் ஒரே சாக்ஷி இருப்பதுதான் பொருத்தம். ஜீவனுக்கு மாறுதல் ஏற்படுவதால் சாக்ஷியாக இருக்கும் நிலைமை அவனுக்குக் கிடையாது ஆத்மாவோ மாறுதல் அடையாததால் சாக்ஷியாக இருக்கும் நிலைமை அதற்குப் பொருந்தும். ஜீவன் எப்படி மாறுதல் உடையவன் எனில் 'நான் சுகமாய் இருக்கிறேன், நான் துக்கப்படுகிறேன்' என்று அந்தக்கரண விருத்தியோடு சேர்ந்துகொண்டு விடுவதால் ஜீவனிடம் மாறுதல்கள் ஏற்பட்டுவிடுகின்றன. ஆகவே ஜீவன் சாக்ஷியாக இருக்கமுடியாது.

அப்படியானால் ஜீவனைத் தவிர, வேறான சாக்ஷியாக இருக்கும் அந்த ஆத்மா யார்? அவனது லக்ஷணம் என்ன? அவன் இருக்கிறான் என்பதற்கு என்ன பிரமாணம்? அதை அறிவதற்கு உபாயம் என்ன?

எந்த மாறுதலும் அடையாதும், எப்போதும் தன் நிலையில் இருப்பதும், கண்ணாடி போன்றும், சினிமாத்திரை போன்றும், ஒரே மாதிரியாக உள்ளது சாக்ஷியாகும். அதுவே ஆத்மா. அவன் ஆகாயம் போல் எங்கும் நிறைந்தவன்; சச்சிதானந்த ரூபன். அவனே அந்தக்கரணத்தில் பிரவேசித்து ஜீவ ரூபத்தை அடைந்து பிரபஞ்ச காரியங்களை நடாத்துகிறான். இப்படிப் பட்ட பாரமார்த்திகமான ஆத்மா உண்டு என்பதற்கு வேதமே பிரமாணம். வேதம் என்பது ஞானிகள் தங்கள் அனுபவத்தில் கண்டறிந்த உண்மைகள் ஆகும். அவர்களிடம் இருந்த ஞான நாட்டத்தையும் தீவிரத்தையும் உள்ளத் தூய்மையையும் நாம் பெற்றால் அவ்வுண்மைகளைத் தரிசிக்கலாம். ஆத்ம சிந்தனை ஆரோக்கியமான மனதை மலரச் செய்கிற சிந்தனை ஆகும். ஆத்மனை நாம் சதா சிந்திக்க வேண்டும்.

திரு வ. வெ. சு. ஐயர் நினைவுகள்

(24—10—80 அன்று திருச்சி வானொலி நிலையத்தில் ஒலிபரப்பப்பட்ட ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தரின் உரை)

துறவு வாழ்வில் ஈடுபாடுடைய நான் 1923 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் கல்கத்தாவிற்கு அருகில் பேலூரில் உள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தில் சேர்ந்துகொண்டேன். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு ஏகாந்தத்தில் சில மாதங்கள் இருந்துகொண்டு தவத்தில் ஈடுபட வேண்டும் என்னும் எண்ணம் வந்தது. மடத்துத் தலைவரும் அதற்கு எனக்கு அனுமதிகொடுத்தார். திருநெல்வேலி ஜில்லாவிலிருக்கும் குற்றாலத்தில் ஏதேனும் ஒரு வசதியான இடத்தில் தங்கியிருந்து தவம் புரியத் தீர்மானிக்கப்பட்டது. 1925 ஆம் வருஷம் மார்ச் மாதம் இறுதியில் சென்னை எழும்பூர் ஸ்டேஷனிலிருந்து தென்காசிக்குப் புறப்பட்டுச் சென்றேன். சேரன்மகாதேவியிலிருந்த பாரத்வாஜ ஆச்ரம நிர்வாகத்தோடு சம்பந்தப்பட்டிருந்த திரு மஹாதேவஐயர் அவர்கள் அதே வண்டியில் தம் ஆச்ரமத்துக்குப் போய்க்கொண்டிருந்தார். என்னோடு அறிமுகம் ஆனபிறகு வழியில் இருக்கும் அந்த ஆச்ரமத்தை நான் போய்ப் பார்க்க வேண்டுமென்று அவர் விரும்பினர். அரை மனதோடு நான் இசைவு கொடுத்தேன். சிலமணி நேரம் அங்குத் தங்கியிருந்து அதைப் பார்த்துவிட்டுப் போகலாம் என்று நான் எண்ணினேன்.

அடுத்த நாள் முற்பகலில் பாரத்வாஜ ஆச்ரமத்துக்கு நான் போய்ச்சேர்ந்தேன். ஆங்கு ஆச்ரமக் குலபதியாயிருந்த திரு வ. வெ. சு. ஐயருக்கு நான் பேலூர் மடத்திலிருந்து வந்த ஒரு பிரம்மச்சாரி என அறிமுகப் படுத்தப்பட்டேன். குசலப் பிரச்னைகள் செய்து அவர் என்னை அன்போடு வரவேற்றார். அவரைப் பார்த்ததும் நான் சிலமணி நேரத்தில் அந்த ஆச்ரமத்தை விட்டு வெளியேக வேண்டுமென்று கொண்டிருந்த எண்ணத்தை மாற்றிக்கொண்டேன். தெய்வீகப்பொலிவு படைத்திருந்த அப்பெருமகனரோடு நெருங்கிப் பழகவேண்டும் என்னும் அவா என் உள்ளத்தில் ஆர்வத்துடன் எழுந்தது.

தோற்றத்தில் திரு. வ. வெ. சு. ஐயர் பழங்காலத்து ரிஷிகளில் ஒருவர் போன்று தென்பட்டார். நன்கு வளர்ந்து பொருத்தமான வடிவுடன் அவர் விளங்கினர். உடல் திட்பம் வாய்க்கப் பெற்றவர் என்பது சொல்லாமலே விளங்கிற்று. கவர்ச்சிகரமான முகவிலாசத்தில் சாந்தமும், இனிமையும் திகழ்ந்து கொண்டிருந்தன. அவருடைய குரலோசை கம்பீரமும், உறுதியும் வாய்க்கப் பெற்றதாய் இருந்தது. சில நாள் இங்குத் தங்கியிருந்து செல்லலாமே என்றார். மகிழ்வுடன் நான் அதற்கு இசைவு கொடுத்தேன். மூன்று நாள் பாரத்வாஜ ஆச்ரமத்தில் திரு. வ. வெ. சு. ஐயரோடு வாழ்ந்திருக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அந்த வாய்ப்பைக் கிடைப்பதற்கரிய பேறு என்றே இதுகாறும் கருதி வருகிறேன். முற்பகலில் ஒருதடவை பிற்பகலில் ஒருதடவை ஆக நாளொன்றுக்கு இரண்டு தடவை நாங்கள் இருவரும் ஆச்ரமத்திண்ணையில் அமர்ந்துகொண்டு உரையாடினேம். ஆச்ரம வாசிகள் மற்றும் சிலர் அருகில் அமர்ந்துகொண்டு எங்கள் பேச்சுக்குச் செவி சாய்த்துக் கொண்டிருந்தனர். அவ்வேளைகளில் அவருடைய செல்வி ஒருத்தி பெரிதும் அவர் தொடையின் மீது சாய்ந்து உட்கார்ந்திருப்பாள்.

விவேகானந்த சுவாமிகள் நிறுவிய பேலூர் மடத்தின் பயிற்சித் திட்டத்தைப் பற்றி ஐயர் அவர்கள் என்னை விசாரித்தார். விரிவாக நானும் எங்களுடைய ஆன்மீக வாழ்க்கைத் திட்டத்தை எடுத்து விளக்கினேன். அதில் அவர் ஊக்கம் மிகச் செலுத்தினர். அது எனக்குப் பரமதிருப்தியை அளித்தது, ஆதலால் சாதனத்தில் ஈடுபட்டிருக்கும் ஆத்ம சகோதரர் ஒருவரோடு கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளும் பாங்கில் பேலூர் மடத்துப் பயிற்சி முறைகளை நான் அவருக்கு எடுத்துரைத்தேன்.

சந்நியாசிகளும், பிரம்மச்சாரிகளும் அதிகாலையில் எழுந்திருந்து சரீர சுத்தி செய்துகொண்டு தியான மண்டபத்தில் கூடுவார்கள். உஷா பிரார்த்தனைக்குப் பிறகு சுமார் ஒரு மணி நேரம் அனைவரும் ஒன்று கூடி நிமிர்ந்து உட்கார்ந்துகொண்டு தியானமும், ஜபமும் செய்வார்கள். காலையில் ஆறு மணியிலிருந்து ஏழு மணி வரையில் அவரவர்க்கு ஏற்பட்டிருக்

கும் காலைப் பணிவிடைகளைப் புரிவார்கள். எட்டு மணியிலிருந்து ஒன்பது மணி வரையில் மடத்துத் தலைவர் சுவாமிகளை அனைவரும் சென்று தரிசித்து அவரோடு சிறிது உரையாடிவிட்டு வருவார்கள். பத்து மணியிலிருந்து பதினொரு மணிவரையில் சாஸ்திர ஆராய்ச்சிகளும், அதைத் தொடர்ந்து நண்பகல் தியானமும், ஜபமும் நடைபெறும். பகல் பன்னிரண்டு மணிக்குத் துறவியர்களும் மடத்தைப் பார்க்க வரும் அன்பர்களும் ஒன்று சேர்ந்து நண்பகல் உணவு அமுது பண்ணுவார்கள். பிற்பகல் இரண்டு மணி வரை ஓய்வு. அதன் பிறகு தோட்டத்திலும், சமையல்கட்டிலும், காரியாலயத்திலும் பலப்பல பணிவிடைகள்நிகழும். மாலை தியானத்துக்குப் பிறகு அரைமணி நேரம் பஜனை நடைபெறும். இரவு போஜனத்துக்குப் பிறகு சிறு சிறு கும்பல்களாக அமர்ந்து கொண்டு சத்விஷய ஆராய்ச்சியும் சம்பாஷணையும் நடைபெறும். சுமார் பத்து மணிக்கு உறங்கப் போவது வழக்கம்.

நாட்டுமக்களின் நலனுக்காகப் பேலூர் மடம் ஆற்றும் தொண்டு யாது என்று ஐயர் அவர் கேட்டார். எதிர்பாராது அப்போதைக்கப் போது நிகழும் வெள்ளக் கஷ்ட நிவாரணம், புயல்காற்று நிவாரணம், தொத்துநோய் நிவாரணம் முதலியவற்றை ராமகிருஷ்ண மடம் எவ்வாறு நிறைவேற்றி வருகிறது என்பது விவரிக்கப்பட்டது. கல்வித்துறையில் இந்த ஸ்தாபனம் புரியும் சேவையும் எடுத்துச் சொல்லப்பட்டது. தேசபக்தி, தியாகம், பரநல சேவை ஆகிய பண்புகளை மாணுக்கர்களுக்கிடையில் சந்நியாசிகள் முன்மாதிரியாயிருந்து கொண்டு புகட்டிவந்தார்கள். ஆத்மீகத்துறையில் மக்களுக்கிடையில் மேலாம் தத்துவங்கள் எப்படிப் பரப்பப்பட்டன என்னும் பேச்சும் நிகழ்ந்தது. ஆத்மசாதனம் என்னும் பெயரில் பலபேர் பலப்பல முடநம்பிக்கைகளில் உழல்கின்றனர். அத்தகைய பொருளற்ற கொள்கைகளையும், பழக்க வழக்கங்களையும் திருத்தி அமைப்பது துறவியர்களுடைய முக்கியமான செயல்களாம். ஆத்மனோ மோக்ஷார்த்தம் ஜகத் ஹிதாயச— தான் ஆத்ம விடுதலை அடைவதும் உலக நலனுக்காக உழைப்பதும் மடத்தின் குறிக்கோள் என்பதைக் கேட்டு ஐயர் அவர்கள் பெருமகிழ்வெய்தினர்.

ஆத்மாவின் விடுதலைக்காகப் பாடுபடுகிற நீங்கள் நாட்டின் விடுதலைக்காக ஏதாவது முயற்சி எடுத்துக் கொள்ளுகிறீர்களா? என்று ஐயர் என்னைக் கேட்டார். அதற்கு நான் கொடுத்த விடையாவது: "அரசியல் துறையிலோ, சமுதாயச் சீர்திருத்தத் துறையிலோ ஸ்ரீ ராமகிருஷ்ண இயக்கம் ஈடுபடுவதில்லை. அப்படி ஈடுபடுவதால் கருத்து வேறுபாடுகளும் ஆற்றல் விரயமும் வீண் பொழுது போக்கும் பெருமிதமாக உண்டாகும். அதனால் விளையும் நஷ்டம் மிக அதிகமாகும். ஆதலால் அத்துறைகளை அறவே ஒதுக்கி வைத்துவிட்டு நிர்மாணத் திட்டத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ண மடம் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. ஆத்மீகத் துறையில் மறுமலர்ச்சி அமையுமிடத்து ஏனைய துறைகளிலுள்ள குறைநிலைகளெல்லாம் தாமாகவே நிறைநிலைகளாக மாறிவிடும் என்பது எங்கள் கருத்து. இதற்குச் செவி சாய்த்த திருவாளர் ஐயர் சிறிது நேரம் சிந்தனையில் மூழ்கியிருந்தார். மேலும் இக்கேள்வியில் அவர் பிரவேசிக்கவில்லை.

திருவாளர் ஐயர் அவர்கள் நடாத்தி வந்த குருகுலத்தை நான் மூன்று நாள் கவனித்தேன். அது முற்றிலும் பண்டைக் காலத்து நடைமுறையில் இருந்ததாக எனக்குத் தென்பட்டது. அதிகாலையில் எழுந்திருந்தது முதற்கொண்டு இரவில் படுக்கப்போகும் வரையில் குருவும் சிஷ்யர்களும் ஒரு குடும்பம் போன்று சேர்ந்து இருந்தனர். பணிவிடை பண்ணுதல், பாடம் கற்பது, உணவு அருந்துவது, தேகப்பயிற்சி பண்ணுவது ஆகியவைகள் ஒன்றோடொன்று இனிது பிணைந்திருந்தன. தந்தையோடு மைந்தர்கள் இணங்கியிருப்பது போன்று பிள்ளைகள் சுமார் பதினைந்து பேர் யாண்டும் ஐயர் அவர்களைச் சூழ்ந்துகொண்டே இருந்தனர். அவர் இடையிடையே சிஷ்யர்களுக்குஎடுத்து இயம்பியது வாழ்க்கைக்குப் பயன்படும் மேலாம் கருத்துக்களாகவிருந்தன. புஸ்தகங்கள் மூலமாக அவர்கள் பெற்ற கல்வி மிகக் குறைவு. வாழ்க்கையின் வாயிலாகவே வேண்டியவற்றை அவர்கள் பெற்று வந்தனர்.

பேச்சுக்கிடையில் ஐயர் அவர்கள் குற்றாலத்தின் சூழ்நிலை தவத்துக்கு ஒத்து வராது

என்று இயம்பி என்னைப் பாபநாசத்துக்குப் போகும்படி தெரிவித்தார். நானும் அதற்கு இசைந்துகொண்டேன். பாபநாசத்தின் உட்புறத்தில் அகஸ்தியர் கோயிலில் ஓர் அறையில் தங்கியிருந்து நான் தவம் புரிந்து வந்தேன். ஜூன் மாதம் துவக்கத்தில் திரு ஐயர் அவர்கள் குருகுலவாசிகளுடன் உல்லாசப் பிரயாணமாக அங்கு வந்து சேர்ந்தார். தவ வாழ்க்கையைப் பற்றி நாங்கள் சிறிது உரையாடினோம். அப்பேச்சை மேலும் தொடர்ந்து வைத்துக்கொள்வோம் என்று சொல்லிவிட்டு ஸ்ரீ ஐயர் அவர்கள் தமது ஜபமாலை, ஆசனம் முதலியவைகளை என் பொறுப்பில் வைத்துவிட்டுச் சிஷ்யர்களுடன் அருகிலிருந்த கல்யாண தீர்த்தத்துக்குப் போனார். சுமார் இரண்டு மணி நேரத்துக்குப் பிறகு திருவாளர் ஐயர் அவர்களின் பெண் குழந்தை கால் வழுக்கி ஓடும் நதிக்குள் விழ அக்குழந்தையைக் காப்பாற்றத் தந்தையும் நதிக்குள் குதித்து இருவரும் அருவியில் அகப்பட்டுக்கொண்டனர் என்னும் செய்தி வந்தது. இருவருடைய உடலங்களும் அடுத்த நாள்தான் தென்பட்டன. இது குருகுலத்திற்கு மட்டுமன்று நாட்டுக்கே விளைந்த பெரிய நஷ்டமாகும். ஐயர் அவர்களின் உடலம் மறைந்தது எனினும் தேசீயப் பண்பாட்டைப் பற்றிய அவருடைய பேரியக்கம் படிப்படியாக வளர்ந்துகொண்டே வருகிறது.

சுவாமி துரியானந்தரின் போதனைகள்

ஒரு நாள் சுவாமி துரியானந்தர் சமையல் அறைக்குள் போகும்பொழுது சமையல் செய்த பெண் ஒருத்தி சமைத்த உணவுப் பொருளில் உப்பு இருக்கிறதா என்று சுவைத்துப் பார்த்துக் கொண்டிருப்பதைப் பார்த்தார். அப்பெண்ணுக்கு அவர் கூறிய அறிவுரையாவது: ''நீ, சமைத்த உணவைத் தெய்வத்துக்கு நைவேத்தியமாகப் படைக்கவேண்டும். குடும்பத்தினருக்காகவோ, எங்களுக்காகவோ நீ சமைக்கவில்லை. ஆச்ரமத்தில் தெய்வத்துக்கு நைவேத்தியமாகப் படைப்பதற்குத்தான் நீ சமைத்துள்ளாய். அங்ஙனமே நீ குடும்பத்திலும் சமைக்கும்பொழுது தெய்வத்துக்கு நைவேத்தியத்துக்குச் சமைக்கிறேன் என்ற உணர்வுடன் சமைக்கவேண்டும். சமைத்த உணவைத் தெய்வத்துக்கு நைவேத்தியமாகப் படைத்து அதைப் பிரசாதமாகக் குடும்பத்திலுள்ள அனைவர்க்கும் பகிர்ந்து கொடுக்கவேண்டும். சமையல் அறையைக் கோயிலாகக் கருதவேண்டும். சமையல் அறையையும் அது சம்பந்தமான மற்ற இடங்களையும் மிகவும் தூய்மையாகவும், புனிதம் நிறைந்ததாகவும் வைத்திருக்க நீ பழகிக்கொள்ளவேண்டும். குளித்து விட்டுப் புது ஆடைகளை அணிந்துகொண்டு பிரார்த்தனை செய்து விட்டுத்தான் ஒவ்வொரு நாளும் சமையல் அறைக்குள் நுழையவேண்டும். அப்பொழுதுதான் நீ சமைக்கும் உணவு புனிதமும், தூய்மையும் உடையதாக அமையும். அது நைவேத்தியத்துக்கு ஏற்றதாக அப்பொழுதுதான் ஆகிறது. புனித மனப்பான்மையோடு சமைத்துத் தெய்வத்துக்குப் படைத்துப் பிரசாதமாக ஏற்றுக்கொள்ளும்பொழுது நாம் உண்ணும் உணவு பரிசுத்தமும் அருளும் கலந்ததாகிறது. இங்ஙனமே நாம் செய்யும் ஒவ்வொரு செயலையும் ஈசுவர ஆராதனையாகச் செய்து பழகவேண்டும். அப்பொழுதுதான் நாம் ஆத்மீகத்துறையில் முன்னேற்றம் அடைந்து வரமுடியும்.''

விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும்

(திரு. V. சோமு B. Sc., M. Ed.,)

6. பக்தனது மனமும் ரசாயனம் பூசிய கண்ணாடியும்

புகைப்படம் எடுப்பது ஒரு சிறந்த பொழுது போக்கு. இதைப் போட்டோகிராபி (Photography) என்று சொல்லுகிறோம். இப் புகைப் படக்கலை முதன்முதலாகத் தோன்றிய தேசம் பிரான்ஸ் (France) ஆகும். 1839 ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த "நெய்ப்பீ" (Neipee) என்பவர் ரசாயன ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தபோது ஓர் உலோகத் தகட்டின்மேல் பிம்பத்தைப் பதியவைப்பதில் வெற்றி பெற்ருர். அதன் பிறகு வெட்ஜ்வுட் (Wedge Wood) என்ற விஞ்ஞானி இம்முறையைப் பின்பற்றி வெள்ளிநைட்ரேட் என்ற வேதிப்பொருளைப் பூசிப் புகைப்படம் எடுத்தார். 1841ல் ஹென்றி டால்போட் (HenryTolfot) என்பவர் வெள்ளியின் சேர்மங்களை ரசாயன முறையில் தயார் செய்து அவற்றைக் காகிதத்தின் மேல்பூசிப்படமெடுக்கும் முறையைக் கண்டுபிடித்தார். ரசாயனக் கலவையைக் காகிதத்தில் தடவி அது காய்ந்தபின் அதைக் காமிராவினுள் வைத்துப் படம் எடுக்கும் முறையை இவர் கண்டுபிடித்தார். இந்த ரசாயனம் பூசிய காகிதத்தில் உருவம் தலைகீழாகப் பதிவாகும்.

பழங்காலத்தில் புகைப்படம் பிடிப்பதற்குத் தகுதியான சாதனங்கள் அமையவில்லை. ஆனால் சில கலைஞர்கள் ஒரு விதமான நிழற்படத்தை உருவாக்கினர்கள். அதாவது விளக்கின் முன் ஒருவரை அமரச் செய்து அவருடைய உருவத்திற்குப் பின்னல் ஒரு வெண்திரையைக்கட்டி, விளக்கிலிருந்து வரும் வெளிச்சத்தால் ஏற்படும் நிழலைப் பென்சில்கொண்டு வரைந்து பிறகு அந்த இடத்தைக் கறுப்பு வர்ணத்தால் நிரப்பினர்கள். அதாவது மனிதனின் தத்ருபமான நிழற்படம் கிடைத்தது. அதற்குப் பிறகு அறிவியல் முன்னேற்றத்தால் அறிவியலறிஞர்கள் ஒளியினல் பாதிக்கப்படும் ரசாயனப் பொருட்களைக் கண்டுபிடித்தார்கள். இந்த ரசாயனப் பொருளின் அடிப்படையில் தோன்றியதுதான் காமிரா (Camera) என்னும் படம் பிடிக்கும் கருவி.

காமிராவில் முக்கியமான பாகம் லென்சு ஆகும். லென்சு இல்லாவிட்டால் படம் எடுக்க முடியாது. லென்சுக்கு அடுத்தபடியாக முக்கிய பாகம் ஃபிலிம் (Film). இதில்தான் உருவத்தை முதலில் பதியவைக்க வேண்டும். அப்படி அமையும் உருவந்தான் நெகடிவ் உருவம் (Negative Image). பிலிம் சுருளில் எமல்ஷன் (Emulsion) என்ற ரசாயனப் பொருளைத் தடவியுள்ளார்கள். இது ஒளியினல் பாதிக்கப்படுவதால் இதற்கு ஒளிக்கூச்சம் (Light Sensitive) என்று பெயர். ஒளியானது லென்சுமூலம் சென்றதும் ஃபிலிமில் பதிகிறது. இவ்வாறு பதிக்கப்பட்ட ஃபிலிமை நாம் இருட்டறையில் தான் ரசாயனப் பொருள்களைப் பயன்படுத்திக் கழுவவேண்டும். இதற்கு டெவலப்பிங் (Developing) என்று பெயர். நெகடிவில் (Negative). வெள்ளை உருவங்கள் கறுப்பாகவும் கறுப்பு உருவங்கள் வெள்ளையாகவும்இருக்கும். பிறகு இதை ரசாயனப் பொருள் தடவிய காகிதத்தில் ஒற்றி எடுத்து அச்சிட்டு மறுபடியும் ரசாயனப் பொருளில் கழுவினல் படம் கிடைக்கும். இதுதான் போட்டோ கிராபியின் செயல் முறையாகும்.

பக்தி என்னும் ரசாயனப்பொருள் பூசிய மனம் எனும் கண்ணடியில்தான் பாரமார்த்திக விஷயம் என்ற பிம்பம் படியும். பக்தி என்னும் ரசாயனப்பொருள் பூசப்படாத மனம் என்ற கண்ணடியில் பாரமார்த்திக விஷயம் என்ற பிம்பம் படியாது. "பக்தி வலையில் படுவோன் காண்க" என்று ஆன்ருேர் கூறியுள்ளது பக்திக்கு ஈசன் வசப்படுகிருர் என்பதைத் தெரிவிக்கிறது.

"யாருடைய உள்ளத்தில் பக்தி இன்னும் உருவெடுக்கவில்லையோ அவன் பாரமார்த்திக உபதேசங்களை ஏற்றுக்கொள்ள மாட்டான். புகைப்படத்துக்குத் தேவையாயுள்ள ரசாயனப் பொருள் பூசியுள்ள கண்ணடியின் மீது பிம்பம் நன்கு படிகிறது. ஆனல் வெறுங்கண்ணடியில் அது பதிவதில்லை. ரசாயனம் பூசிய கண்ணடிக்கு ஒப்பானது பக்தியின் மூலம் பரிபாகமடைந்துள்ள பக்தனது உள்ளம்."

— ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேசம்

குமரகுருபரர்

(வித்துவான் ஆதி. பாலசுந்தரன் M. A.)

மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழில், பாட்டுடைத் தலைவியாக மதுரை மீனாட்சியம்மை சிறப்பிக்கப்படுகிறாள். மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழில், பிள்ளைத்தமிழ் என்னும் சிறுபிரபந்த நூலின் இலக்கண அமைதியை உட்படுத்தி ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பாடியுள்ளார்.

பிள்ளைத்தமிழ் நூலில் இரண்டாவதாக அமைந்த பருவம் செங்கீரைப் பருவம் ஆகும். "பொருள் தெரியாத ஒலியை எழுப்பும் பருவம் செங்கீரைப் பருவம்; இளங் குழந்தை 'ங்க், ங்க்' என்று கூறக் கேட்டுத் தாய்மார் உவக்கும் பருவம் இது. இவ்வொலி மழலையைக்காட்டிலும் இளம்பருவத்தை உடையது. மழலையென்றாலும் ஒரு வகையில் பொருள் கொள்ளுதற்குரியது. செங்கீரைப் பருவத்தில் மகவு எழுப்புகின்ற ஒலி, வெறும் ஒலிமாத்திரமாகத் தோன்றுவது; தொடையமைதிகள் இல்லாத ஒன்றை யாப்பிலக்கணத்தில் செந்தொடை என்று சொல்லுவது போன்ற சொல்லுக்குரிய அமைதி இல்லாத ஒன்றைச் செங்கீரை என்று சொன்னார்கள் போலும். செங்கீரை என்பதை, "செங்கீரை ஆடுக" என்று சொல்லுவதை நோக்கும் போது, குழந்தைகளிடத்தில் இயல்பாக அமைந்த ஒரு விளையாட்டாக இருக்கக்கூடும். "ஒரு காலைப் பின்னால் மடக்கி, ஒரு காலை எழுந்திருக்கும் பாவனையில் வைத்து, இரண்டு கைகளையும் தரையிலே பதித்து, முகத்தை நிமிர்த்து அசைத்து ஆடுவது செங்கீரைப் பருவம்" இவ்வாறு செங்கீரைப் பருவத்துக்கு விளக்கம் சொல்லுகிறார்கள்.

செங்கீரைப் பருவத்தில் ஸ்ரீ சுவாமிகள் பாடிய பாடல் ஒன்று :

சுற்றுநெடு நேமிச் சுவர்க்குஇசைய எட்டுச்
சுவர்க்கால் நிறுத்தி மேருத்
தூண்ஒன்று நடுநட்டு வெளிமுகடுமூடி இரு
சுடர்விளக்கு இட்டுமுற்ற
எற்றுபுனலில் கழுவு புவனப் பழங்கலம்
எடுத்து அடுக்கிப் புதுக்கூழ்
இன்னமுதஞ் சமைத்து அன்னைநீ பன்முறை
இழைத்திட அழித்து அழித்துஓர்
முற்றவெளியில் திரியும் மத்தப்பெரும் பித்தன்
முன்நின்று தொந்தம் இடவும்
முனியாது வைகலும் எடுத்துஎடுத்து அடுக்கிப் [பெரிய
முதண்ட கூட முடும்
சிற்றில்விளையாடும் ஒருபச்சிளம் பெண்பிள்ளை
செங்கீரை ஆடி அருளே !
தென்னற்கும் அம்பொன்மலை மன்னற்கும் ஒரு [செல்வி
செங்கீரை ஆடி அருளே !

—அம்பிகையாகிய ஸ்ரீ மீனாட்சியம்மை உலகத்தை அடிக்கடி படைக்கின்றாள்; அவ்வாறு படைப்பனவற்றைச் சிவபெருமான் அழித்து விடுகின்றார். இச்செய்கைகளைச் சிறுமியர் சிறுவீடு கட்டி விளையாடுதல், சிறுவர் அச்சிறு வீடுகளை அழித்தல் ஆகிய செயல்களாக உருவகப்படுத்திக் குமரகுருபரர் கூறுகின்றார்.

அம்பிகை புவனங்களைப் படைத்தல் :

உலகத்தைச் சுற்றிலும் சுவரைப் போல அமைந்திருப்பது சக்கரவாளகிரி என்னும் மலை. இந்த மலைதான் சுற்றுச் சுவர். இந்தச் சுவருக்கு ஏற்றபிரகாரம் கைலை, இமயம், மந்தரம் முதலான குலவரைகள் எட்டையும் சுவர்க்கால்களாக நிறுத்தி வைத்து, இவற்றின் நடுவே பாரம் தாங்குவதற்காக மேருமலையைத் தூணாக நிறுத்தி, வெட்டவெளியாகிய ஆகாசத்தை மேற்கூரையாகக் கொண்டு மூடி புவனமாகிய இல்லத்தை அமைக்கிறாள் புவனேஸ்வரியாகிய மீனம்பிகை.

அம்பிகை சிறு சோறு ஆக்குதல் :

அன்னை அமைத்த இல்லத்தில் ஒளி தருவதற்குச் சுடர் வேண்டுமல்லவா! சூரியன், சந்திரன் இரண்டும் இரு சுடர்கள். இந்த இரண்டு சுடர்களையும் ஆக்கினாள் அன்னை. அலைவீசுகின்ற கடலில் புவனமாகிய பழைய உண்கலத்தை எடுத்து அடிக்கடி கழுவிப் புதிய கூழைச் சமைக்கின்றாள்.

இவ்வாறு மீண்டும் மீண்டும் பலமுறை செய்ய, திரும்பத் திரும்ப அழிக்கின்றான் ஒருவன். அவன்தான் வெட்டவெளியில் உன்மத்தனாகத் திரியும் சிவபெருமான். "அன்னையே! நீ உண்டாக்கி வைக்க வைக்க மீண்டும் மீண்டும் அவற்றை அவன் அழித்துவிட்டுச் சும்மா

இருக்கவில்லை. அழித்துவிட்ட எக்காளத்தில், உன் முன்னால் நின்று ஆனந்தக் கூத்தாடுகின்றான் என்கிறார் சுவாமிகள்.

அழித்த இல்லத்தை ஆக்குதல் :

அவன் எவ்வளவுதான் அழித்துக்கொண்டே இருந்தாலும், அன்னையே! நீ கொஞ்சங்கூட வெறுப்போ சினமோ கொள்ளாமல், நாள்தோறும் பிரபஞ்சத்தைப் படைத்தலாகிய காரியத்தைச் செய்கின்றாய்.

பெண்குழந்தைகள் சிறு வீடுகட்டி விளையாடுதல்:

பெண்குழந்தைகள் மணலில் சிறு வீடுகட்டி விளையாடுவது இயல்பு. சிறு வீடுகட்டி, சோறு கறி சமைத்தலாகிய விளையாட்டையும் விளையாடுவார்கள். அப்படி விளையாடும்போது, சிறுவர்கள் வந்து, தங்களையும் விளையாட்டில் சேர்த்துக்கொள்ளுமாறு கேட்பார்கள். பெண் குழந்தைகள் சேர்க்கவில்லை என்றால் மிரட்டுவார்கள். அப்படியும் சேர்க்க மறுத்துவிட்டால், அப்பெண்குழந்தைகள் கட்டிய சிறு வீட்டை அழித்துவிடுவார்கள். அழித்தவீட்டை அப்பெண்குழந்தைகள் திரும்பவும் கட்டுவார்கள். பையன்கள் திரும்பவும் அழிப்பார்கள். இப்படியே இந்த விளையாட்டு நடைபெறும்.

இங்கே அம்பிகை, சிறு வீடுகட்டுதல் என்பது இப்பிரபஞ்சத்தைப் படைப்பது ஆகும். அலைவீசும் கடலாகிய தண்ணீரில் புவனத்தைக் கழுவுதல் என்பது, பிரளயகால வெள்ளத்தில் இவ்வுலகத்திற்கு ஏற்படக்கூடிய அழிவைக் குறிப்பதாகும்.

சிறுவர் சிறுமியர் சிறு வீடுகட்டி விளையாடுவதைப்போல, இப்பிரபஞ்சத்தைப் படைத்து அழிப்பது இறைவிக்கும், இறைவனுக்கும் விளையாட்டுப் போன்றதொரு செயலாகும்.

"ததியுறு மத்தில் சுழலும் என் ஆவி தளர்வு
இலதோர்
கதியுறும் வண்ணம் கருது கண்டாய்"

— தயிரைக் கடைவதற்காகத் தயிர் பானையில் இடப்பட்டிருக்கும். கயிற்றால் இழுக்கப்பட்டு மத்து இடசாரி வலசாரியாகச் சுழலும். பிரபஞ்சம்தான் தயிர்ப்பானை, மத்து என்பது ஜீவன். நல்வினை தீவினை இரண்டும் கயிற்றின் நுனிகள். அபிராமி அம்மை தயிர்கடையும் இடைச்சி. தயிரானது உடைந்து வெண்ணெய் திரண்டுவரும். அப்படி வரும்போது கடைவது நிற்கும். மத்து ஒருபடியாகச் சுற்றாமல், மாறி மாறிச் சுற்றும். அதுபோன்று, ஜீவனானது இப்பிரபஞ்ச வாழ்க்கையில் நல்வினை தீவினைகளால் மாறி மாறிச் சுற்றுகின்றது. அம்பிகையின் கருணைவிலாசம் ஜீவனைப் பிரபஞ்சத்தில் பிறக்கச் செய்கிறது. தயிர் உடைந்து மோர் ஆகி வெண்ணெயும் திரண்டுவிடும். அதே போன்று, ஆன்மா பக்குவநிலை அடைந்துவிட்டால், மோரில் ஒட்டாத வெண்ணெய் போலப் பானையிலே கிடந்தாலும் தனித்துக் கிடக்கும் வெண்ணெயைப் போல—பிரபஞ்சத்தில் ஒட்டாத நிலையில் ஜீவன் இருக்கும். வெண்ணெய் திரண்டு தனியே வந்துவிட்டால் கடைவது நிற்கும். ஆன்மா பக்குவநிலையை அடைந்துவிட்டால், பிறவாப் பெருநிலையை அருளுபவளும் அன்னை அபிராமிதான்.

புவனங்களைச் சிருஷ்டிப்பது பற்றிக் குமரகுருபரர் கூறிய கருத்துக்கு ஏற்றவாறு ஜீவன்களைப் பிரபஞ்ச வாழ்வில் இருந்து விடுவிப்பவள் அபிராமி அம்மை என அபிராமிப்பட்டர் கூறும் கருத்தும் இங்கு ஒப்புநோக்கத் தக்கது.

அங்கே அன்னை மீனாட்சி மீண்டும் மீண்டும் படைத்து, தனு கரண புவன போகங்களை ஆன்மாக்கள் அனுபவிக்கும்படி செய்கிறாள். இங்கே அன்னை அபிராமி, அந்த அனுபவங்களிலிருந்து ஆன்மாக்களை விடுபடும்படி செய்கிறாள். ஆன்றோர்கள் தங்களுடைய அனுபவங்களைச் சொல்லும் விதம் ஒவ்வொரு பாங்கில் அமைந்திருக்கும்.

பிள்ளைத் தமிழ் நூலில் ஐந்தாவதாக அமைந்துள்ள பருவம் முத்தப் பருவம். குழந்தையை முத்தம் தா என்று தாயாரும், பிறரும் வேண்டுவது இயல்பு.

இங்கே குமரகுருபரர் மீனாட்சியம்மையாகிய குழந்தையிடத்து முத்தம் தருமாறு வேண்டிப் பாடுகின்றார். முத்தப் பருவத்தில் முதல் பாடலாக அமைந்துள்ளது, "காலத்தொடு" எனத் தொடங்கும் பாடல்.

குமரகுருபரர் மதுரையம்பதிக்கு வந்துசேர்கிறார். மதுரையை ஆண்ட திருமலைநாயக்க மன்னர் சுவாமிகளை வரவேற்கிறார். சுவாமிகள் மீனாட்சியம்மைமீது பிள்ளைத் தமிழ் நூலைப் பாடுகிறார். திருக்கோவிலில் திருமலைநாயக்க மன்னர் முன்னிலையில் மீனாட்சியம்மை பிள்

ளைத் தமிழ் நூலைக் குமரகுருபரர் அரங்கேற்றம் செய்கிறார். அவ்வாறு அரங்கேற்றம் செய்யும்போது, முத்தப் பருவத்தில், "காலத் தொடு" எனத்தொடங்கும் இப்பாடலைச் சுவாமிகள் பாடி விளக்கம் சொல்லுகின்ற சமயத்தில், அம்பிகையே சிறு மகவாக எழுந்தருளி வந்து, மன்னர் மடியில் அமர்ந்து இனிது கேட்டருளி, மன்னர் கழுத்தில் அணிந்திருந்த முத்து மாலையைக் கழற்றிக் குமரகுருபரர் கழுத்தில் அணிவித்து மறைந்தருளினர் எனச் சொல்லுவார்கள்.

ஆறுவது பருவமாகிய வருகைப் பருவத்தில், "தொடுக்கும் கடவுள்" எனத்தொடங்கும் பாடலைப்பாடி, சுவாமிகள் விளக்கவுரை ஆற்றுகின்ற சமயத்தில்தான் இச்சம்பவம் நிகழ்ந்தது எனவும் கூறுவார்கள்.

முத்தப் பருவத்திற்குரிய பாடலில் ஒன்று :

''காலத்தொடு கற்பனை கடந்த
கருவூலத்துப் பழம்பாடல்
கலைமாச் செல்வர்-தேடிவைத்த
கடவுள் மணியே உயிர்ஆல
வாலத்து உணர்வு நீர்பாய்ச்சி
வளர்ப்பார்க்கு ஒளிபூத்து அவிபழுத்த
மலர்க்கற்பகமே எழுதாச் சொல்
மழலை ததும்பும் பசுங்குதலைச்
சோலைக் கிளியே உயிர்த்துணையாம்
தோன்றாத் துணைக்குஓர் துணையாகித்
துவாத சாந்தப் பெருவெளியில்
துரியங் கடந்த பரநாத
மூலத்தலத்து முளைத்த முழு
முதலே முத்தம் தருகவே
முக்கண் சுடர்க்கு விருந்திடும் மூ
மூலையாய் முத்தம் தருகவே.''

கருவூலத்தில் வைக்கப்பட்ட மரகதமணி :

மீனாட்சியம்மை கருவூலத்தில் வைக்கப்பட்ட மரகதமணியாகத் திகழ்கிறாள். எவ்வாறு?... கால தேச வர்த்தமானங்களுக்கும், ஒவ்வொருவரும் மனத்தில் நினைக்கின்ற கற்பனை சக்திக்கும் அப்பாற்பட்டு விளங்குபவை பொக்கிஷம் போன்ற வேதங்கள். பொக்கிஷங்களாகிய அவ்வேதங்களின் உட்பொருளாக அம்மையை வைத்துப் போற்றிப் பாடியவர்கள் பலகலைகளிலும் வல்ல ஞானியர்கள் ஆவார்கள். கருவூலமாகிய பொக்கிஷத்தில் வைத்துக் கவனமாகப் பாதுகாக்க வேண்டியது வைரமணி ஆகும். அதே போன்று, வேதங்களைப் பாடிய ஞானியர் தங்கள் சுலோகங்களின் பொருளாக அம்பிகையைப் பாடிவைத்துப் போற்றினர்கள்.

மலர்பூத்த கற்பகக் கொம்பு :

உயிர் என்னும் பாத்தியுள், உணர்வு என்னும் நீரைப் பாய்ச்சிப் போற்றி வளர்ப்பவர்களுக்கு, உள் ஒளி என்னும் பூவைப் பூத்து, கருணை என்னும் பழத்தைப் பழுக்கச் செய்து வழங்குகின்ற கற்பகக்கொம்பு அன்னை மீனாட்சியம்மை.

தேவி கற்பக விருட்சம். தேவலோகத்தில் உள்ள கற்பக விருட்சம் விரும்பியதை எல்லாம் தரக்கூடியது என்று சொல்லுவார்கள். அதே போன்று, தேவியும் வேண்டுவார்க்கு வேண்டியதையெல்லாம் அருளும் பாங்கினள் ஆவாள்.

உடம்போடு உயிர்பொருந்தி இருப்பதன் லட்சணம் உணர்வைக் கொண்டு விளங்குவதேயாகும். உணர்ச்சி இல்லாத உடம்பு உயிர் அற்ற மரக்கட்டைக்குச் சமம் ஆகும். ஆத்ம உணர்வு எத்தகையதாக விளங்குதல் வேண்டும்? ஆத்ம உணர்வு இறை உணர்வாகப் பரிணமித்தல் சிறப்பாகும். ஏனைய உணர்வுகள் ஆத்மலாபம் தருவன அல்ல. லாபமாகிய நன்மை தரும் ஒன்றை நாடுவதே அறிவின் பயன். உடம்புக்குள்ளே இருக்கும் உணர்வு படிப்படியாக இறை உணர்வாகப் பரிணமை வளர்ச்சி அடைவது ஒன்றே ஆத்ம பலன் ஆகும்.

இங்கே உயிரைப் பாத்தியாகவும், இறை உணர்வாகிய பக்தி உணர்வைப் பாத்தியுள் பாயக்கூடிய நீராகவும் உருவகப்படுத்தியுள்ளார் சுவாமிகள். அவ்வாறு நீரைப் பாய்ச்சி வளர்க்கும் அன்பர்கள் உள்ளத்துள் ஞானஒளியாகிய பூவைப் பூக்குமாறு செய்வது மீனாட்சியாகிய கற்பகத் தரு. பக்தி வைராக்கியம் முதிர்ந்த நிலையில் ஞான வைராக்கியம் உண்டாகும். பக்தியின் முதிர்ச்சி ஞானம். உள்ளத்து ஒளியாகிய ஞானப் பேரொளியைப் பூவாக உருவகம் செய்துள்ளார் குமரகுருபரர். பூ மொட்டாகத் தோன்றிக் கொஞ்சம் கொஞ்சமாக மலராக மலர்வது போல, ஆத்ம ஞானமும் மொட்டாகத் தோன்றிச் சிறிது சிறிதாகப் பரஞானமாக மலர்கிறது.

பூவின் முதிர்ச்சி—முடிந்த முடிவு—கனியாகக் கனிவது. கற்பகமாக விளங்கும் அன்னை அருள் என்னும் கனியை அடியவர்களுக்கு அருளுகின்றாள். இறைவியிடம் பக்தி பூண்டு ஒழுகுவது அவளுடைய திருவருளைப் பெறுவ தற்கேயாகும். காமிய பக்தி செய்கிறவர்கள் தேவியிடம் உலக சம்பத்துக்கள் வேண்டு மென்று பிரார்த்திக்கின்றார்கள். அவர்கள் விரும்பியதைத் தேவி அவர்களுக்கு வழங்குகின் றாள். அழிந்துபோகக்கூடிய அநித்தியப் பொருள்களைத் தேவியிடம் பிரார்த்திப்பவர்கள் தேவியின் திருவருளைப் பெறமாட்டார்கள். ஞானம், பக்தி, வைராக்கியம் என்னும் பேரியல்புகளைத் தேவியிடம் பிரார்த்திப்பவர் களே தேவியின் திருவருளுக்குப் பாத்திரம் ஆகிறார்கள். தேவியிடம் தஞ்சம் புகுந்து, தேவியின் அருளைப் பற்றி நிற்பவர்கள், அறி வுடையவர்கள் ஆகிறார்கள். இயற்கை அனைத் தையும் உண்டுபண்ணிய தேவி உயிர்களையும் படைத்திருக்கின்றாள். உயிர்கள் பக்தியுடன் வாழ்ந்து தேவியின் அருளைப் பெறுதல்வேண் டும். காமியப் பிரார்த்தனை பண்ணுகின்றவர் களைத் தேவியானவள் போகவலையில் கட்டிப் பிணிக்கின்றாள். தேவியிடம் பக்தியும், ஞான மும் நாடுகின்றவர்களுடைய மோகத்தைக் கொன்று சிவபதவிக்கு அனுப்பிவைக்கின்றாள். தேவியின் அருள்பெற்று முக்தி என்னும் கனி யைப்பெற்று அருந்தும் பெரும் பேற்றினை அடைபவர்கள் பரம பக்தர்கள் ஆகின்றார்கள்.

தேவியாகிய கற்பகத் தரு, பக்தி உணர் வைப் பெருக்கி வளர்ப்பவர்களுக்குத் திருவருள் என்னும் ஒப்பிலாக் கனியை வழங்குகின்றாள்.

சோலைக் கிளியாகத் திகழ்பவள் அன்னை :

"ஏட்டில் எழுதிக்காட்ட முடியாத, மழலை மொழி பேசுகின்ற சோலையில் வாழ்கின்ற பசுங் கிளியே!" என்கிறார். கூவுவதில் குரல் இனிமை உடையது குயில். பேசுவதில் பழக்கமுடைய ஒரே பறவை இனம் கிளி. பெண்களின் குரல் இனிமைக்குக் குயிலையும், பேச்சு இனிமைக்குக் கிளியையும் உதாரணமாகச் சொல்லுவது மரபு. இங்கே மீனாட்சியம்மையின் மழலை மொழி, பச்சைக்கிளியின் மொழிபோல் திகழ்கிறது.

மழலை மொழி பேசும் பைங்கிளியே என்ப தால், அம்மையின் மென்மைத்தன்மையையும் கூறினர்.

பாகம் பிரியாளாகத் திகழ்கின்றாள் அன்னை :

அடியவர்களுக்குத் தோன்றாத் துணைவனாக இலங்கும் எம்பெருமான் சிவனுக்கு உற்ற துணையாகத் திகழ்பவள் அம்பிகை.

வேண்டுகின்ற அடியார்களுக்குப் பிரத்தி யட்சமாகக் காட்சி கொடுத்து அருள் செய்பவ னும் அப்பெருமானே. அடியார்கள் அறியா வண்ணம் வேண்டியவாறு அருள்பாலித்துத் திருவிளையாடல் புரிகின்றவனும் அவனே. அப்பெருமானின் வாம பாகத்தை எப்போதும் பிரியாதவளாய்த் திகழ்பவள் மீனாட்சியம்மை. சிவசக்தி இணக்கமே இயற்கை நடைமுறை யாகும். சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் என்னும் திருவிளையாடல் சிவசக்தி இணக்கத்தின் வாயி லாக இடைவிடாது நிகழ்ந்து வருகிறது.

செய்திகள்

நிகழ்பவை :

15—11—80 சனிக்கிழமை இரவு 7 மணிமுதல் 9-30 மணிவரை பல்லடம் தாலுகா கேத்த னூரிலும், 16—11—80 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிமுதல் மாலை 4-30 மணிவரையில் கோவை ஜில்லா உடுமலைப்பேட்டை ஸ்ரீ கன் னிகா பரமேஸ்வரி உயர்நிலைப்பள்ளியிலும் ஸ்ரீமத் நித்தியானந்த சுவாமிகள் அந்தர் யோகங்கள் நடாத்துவார்கள். 16–11–80 ஞாயிற்றுக்கிழமை கோவை ஜில்லா வையம் பாளையம் சுதந்திர உயர்நிலைப்பள்ளியில் ஸ்ரீமத் ஆத்மானந்த சுவாமிகள் ஒருநாள் அந்தர்யோ கம் நடாத்துவார்கள். அன்று திருச்சி சின்ன செட்டி தெருவிலுள்ள K.P.S சௌந்தரம்மாள் கல்யாணமண்டபத்தில் ஸ்ரீமத் துருவானந்த சுவாமிகள் காலை 10 மணிமுதல் மாலை 4-30 மணிவரை அந்தர்யோகம் நடாத்துவார்கள்.

14—12—80 ஞாயிற்றுக்கிழமை சேலம் ஜில்லா மேட்டூர் தாலுகா சின்னதண்டா ஸ்ரீராம கிருஷ்ண குருகுல உயர்நிலைப்பள்ளியில் நடக் கும் ஆண்டு விழாவில் ஸ்ரீமத் நித்தியானந்த சுவாமிகள் கலந்துகொண்டு பேசுவார்கள்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

இயற்றிய நூல்கள்

ஸ்ரீமத் பகவத்கீதை 13-ம் பதிப்பு பிரசார விலை	ரூ. 16-00
திருவாசகம்-பிரசார விலை	14-00
கர்மயோக விளக்கம்	10-00
ஞானயோக விளக்கம்	8-00
ராஜயோக விளக்கம்	8-00
பக்தியோக விளக்கம்	6-00
பரமஹம்சரின் பெருமை	6-00
விவேகானந்த விவரணம்	4-00
ஸ்ரீ விவேகானந்தர் ஜீவிதம்	4-00
விவேகானந்த உபநிஷதம்	4-00
கடவுளின் வடிவங்கள்	4-00
சந்தேகம் தெளிதல் பாகம்-I	3-50
சந்தேகம் தெளிதல் பாகம்-II	3-50
தினசரி தியானம்-பிரசார விலை	3-25
ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேச மஞ்ஜரீ ஏழாம் பதிப்பு-பிரசார விலை	3-00
அனுஷ்டான வேதாந்தம்	3-00
எதிர்கால இந்தியா	3-00
ஸ்ரீ ராமகிருஷ்ண சரிதம்	3-00
திருக்கயிலாயகிரி யாத்திரை	3-00
தேவரகசியம் (முதலிய கதைகள்)	2-00
ஸ்ரீ சாரதா தேவியார் சரிதம்	2-00
கண்ணன் என்னும் கடவுள்	2-00
தாயுமானவர் இயற்றிய	
கருணாகரக் கடவுள் விரிவுரை	3-50
பரிபூரணானந்தம் ஷை	3-00
சின்மயானந்த குரு ஷை	3-00
ஆனந்தமானபரம் ஷை	3-00
சுகவாரி ஷை	3-00
மௌனகுரு வணக்கம் ஷை	3-00
எங்கும்நிறைகின்றபொருள் ஷை	2-50
பரசிவ வணக்கம் ஷை	1-00
பஜனைப் பாடல்கள்	2-50
விரதவீரர் பீஷ்மர் (நாடகம்)	1-50
விபீஷணன் சரணாகதி ஷை	1-50
பரமஹம்சர் பாமாலை	1-50
சந்நியாசி	1-25
குழந்தைகளின் களிக்கூடம்	1-00
சகோதரி நிவேதிதை	1-00
காயத்ரீ	1-00
வாலி மோட்சம் (நாடகம்)	1-00
தவப்புதல்வர்கள் (நாடகம்)	1-00
ஏகலைவ்யனின் குருபக்தி (நாடகம்)	1-00
தானவீரன் கர்ணன் (நாடகம்)	1-00
இராவண தத்துவம்	1-00
பார்வதி, லக்ஷ்மி, சரஸ்வதி கர்வபங்கம்	ரூ. 1-00
பிரஹ்லாதன் (நாடகம்)	1-00
மார்க்கண்டேயன் (நாடகம்)	1-00
இந்துமதமும் கிறிஸ்துவ மதமும்	1-00
பாண்டவ கௌரவபெருமை (நாடகம்)	0-80
நன்மக்களைப் பெறுதல்	0-80
நோய்க்கு இடம் கொடேல்	0-80
செத்தவர்கள் நம்மோடு பேசுகிறார்களா?	0-75
*ஆத்ம சக்தி	0-75
*சக்தி தத்துவம்	0-70
*ஈசன் எங்கும் நிறைந்துள்ளான்	0-60
*ஆலய வழிபாடு	0-60
*சூரிய நாராயணன்	0-50
*முருகக் கடவுள்	0-50
*விஷ்ணு தத்துவம்	0-50
தெய்வீக மகிமைகள்	0-50
சைவன் யார்?	0-50
கர்மகாண்டம்எது?ஞானகாண்டம்எது?	0-50
*கணபதி	0-40
நன்னெறிகளும் அருள்வாக்குகளும்	0-40
வர்ணாச்ரம தர்மம்	0-30
அருள் விருந்து 1 to 25 ஒவ்வொன்றும்	0-30
The Bhagavad Gita (10th Imp.)	20-00
Sri Lalitambika Sahasranama Stotram	10-00
The Indian National Education	8-00
Ramakrisna Lives Vedanta	8-00
Facets of Brahman or The Hindu Gods	5-00
Daily Divine Digest (DELUXE)	4-50
Daily Divine Digest (Ordinary)	2-50
Mahabharata (with plastic cover)	4-00
Ramayana (do)	4-00
The man Making Message of Vivekananda (with Plastic cover)	4-00
Sri Vishnu Sahasranama Stotram	4-00
The Bahagavad Gita (Small Size)	4-00
Siva Sahasranama Stotram	3-50
Bheeshma The Superman	3-50
Hinduism Hosts Christianity	3-00
Holy Bible—In the Light of Vedanta	1-50
*Introducing the Gita	1-50
The Garland of Paraaparam	1-50
TAT TVAM ASI *That Thou Art* IN Tayumana Swami	1-00
*Key to Higher Life	0-75
*The Teacher	0-60

தேவையான புத்தகங்களுக்கு உரிய விலையுடன் தபால் கட்டணத்திற்காக கீதை, திருவாசகத்திற்கு ரூ. 3-25ம் மஞ்ஜரீக்கு ரூ. 1-40ம் தினசரி தியானத்திற்கு ரூ. 1-20ம் மற்ற வெளியீடுகளுக்கு ரூ. 2-50 முதல் 3-50 வரை சேர்த்து அனுப்புங்கள்.

*இக்குறியிட்ட புத்தகங்கள் ஏனைய பெரிய புத்தகங்களில் அடங்கியுள்ளன.

ஸ்ரீ தாயுமானசுவாமி பாடல்கள்

மூலம் மட்டும் — சிறு குறிப்புகளுடன் — இரண்டாம் பதிப்பு

உள்ளே தாயுமானசுவாமிகளின் மூவர்ணபடம் வைக்கப்பட்டுள்ளது.

இப்புத்தகம் கிரௌன் சைஸ் 440 பக்கங்கள் கொண்டது. தினசரி பாராயணம் செய்வதற்கு ஏற்பக் கெட்டி அட்டையுடன் உறுதியாகப் பைண்டு செய்யப்பெற்றுள்ளது. ஸ்ரீ தாயுமான சுவாமிகளின் அரும்பெரும் பொக்கிஷத்தைத் தமிழ் மக்களுக்கிடையில் பரப்புதற்காக எல்லாரும் எளிதில் பெறுதற்கு ஏற்ப ரூ. 14-00 பெறுமானமுள்ள இப்புத்தகம் ரூ. 6-00 விலைக்குத் தரப்படுகிறது.

புத்தகக் கடையில் பெற இயலாதவர்கள், தபால்மூலம் இங்கிருந்து பெற தபால் செலவு ரூ. 1-40 சேர்த்து ரூ. 7-40 மணியார்டர் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். குறைந்தபக்ஷம் 16 பிரதிகளை வரவழைத்து அன்பர்கள் தமக்கிடையில் பகிர்ந்து கொள்வதாயின் ரயில் மூலம் கட்டணமின்றி அனுப்பலாம்.

BHEESHMA THE SUPERMAN

The Life and Work of BHEESMACHARYA of the great epic MAHABHARATA is now available in the book "**BHEESHMA THE SUPERMAN**" written by Prof. K. Subrahmanyam, Principal, Vivekananda College, Tiruvedakam West-624217, Madurai District, with an introduction by **SRIMATH SWAMI CHIDBHAVANANDA**. An attempt to define, and interpret Dharma in its various aspects as embodied in BHEESHMA is a special feature of this book. This book published by Sri Ramakrishna Tapovanam, Tirupparaitturai-639115, Tiruchi District, is available at all the leading book shops and the branches of Tapovanam. This **144** page-book is priced Rs. **3-50**.

காரியதரிசி

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை-639115 திருச்சி ஜில்லா.

Edited by SWAMI NITHYANANDA,
Printed & Published by Swami Sankarananda at Tapovanam Printing School, Tirupparaitturai, Tiruchi Dt